# போராட்டம்

2014 செப்ரம்பர் இதழ் 15 இப்பத்திரிகை மக்கள் போராட்ட இயக்கத்தின் வெளியீடு 20.00 ரூபா


# நெருக்கடியோடு அடக்குமுறையும் தீவிரமடைகிறது

**பொதுவாக நவ தாராளமய முதலாளித்துவ முறையிலும் ஆளும் வர்க்கத்திலும் ஆட்சியிலும் வளர்ந்து வரும் நெருக்கடியின் முன்னால் ஒடுக்கப்பட்ட மக்கள் சக்திகளை அடக்குவது சம்பந்தமாக ஆட்சியாளர்கள் கவனம் செலுத்தி வருகின்றனர். அதற்காக சில அவசர நடவடிக்கைகள் சில் முன்னெடுக்கப்பட்டுள்ளதோடு இது விடயத்தில் மக்களின் எதிர்ப்பும் வலுக்கிறது.**

மக்களின் கைவிரல் அடையாளங்கள் உள்ளிட்ட உயிரியல் அடையாளங்களும், குடும்பங்களின் அனைத்து தகவல்களும் அடங்கிய தேசிய பிரஜைகள் தரவுப் பின்னலை நிர்மாணிப்பது இதன் முதற்கட்ட நடவடிக்கையாகும். தற்போது நடைமுறையிலுள்ள அடையாள அட்டைக்குப் பதிலாக புதிய இலத்திரனியல் அடையாள அட்டை வழங்குவது சம்பந்தமாக ஆலோசிக்கப்பட்டுள்ளது. அது புதிய தொழில் நுட்பத்தை பயன்படுத்தி மக்களின் முக்கியமான தனிப்பட்ட தகவல்களை பெற்றுக் கொள்ளும் அரசாங்கத்தின் செயற்பாடாகும்.

இது மக்களின் பாதுகாப்புக்கும், தனித்துவத்திற்குமான உரிமைளை பறிக்கும் நடவடிக்கையாகுமென கருதிய முன்னிலை சோஷலிசக் கட்சி அதற்கு எதிராக எதிர்ப்பு நடவடிக்கையொன்றை ஆரம்பித்துள்ளது. அந்த எதிர்ப்பின் காரணமாக ஒரு அடி பின்வைத்த அரசாங்கம் குடும்ப தகவல்களை வழங்குவது கட்டாயமல்ல என பின்னர் அறிவித்தது.

இதற்கிடையில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோடபாய ராஜபக்ஷ அமெரிக்க பாதுகாப்பு சம்பந்தமான சஞ்சிகையொன்றுக்கு எழுதிய கட்டுரையில் தீவிர இடதுசாரியக் குழுக்கள் எதிர்கால தேசிய பாதுகாப்பக்கு அச்சுறுத்தலாக இருப்பதாக கூறியிருப்பதும்கூட இந்த அடக்குமுறையின் ஒரு பகுதியாகும். தவிரவும் கட்சி, மாணவர் அமைப்புகள் மற்றும் சமூக வலைத்தளங்கள் ஆகியவையும் ஆட்சியாளர்களின் பாதுகாப்புக்கு சவாலாக இருப்பதாக சுட்டிக்காட்டியுள்ளார்.

எவ்வாறாயினும் இந்த அடக்குமுறைக்கு முகம் கொடுப்பதற்காக சக்திகளை பலப்படுத்தவும் ஜனநாயக உரிமைகளுக்காக மக்கள் சக்தியை கட்டியெழுப்பவும் விரிவான எதிர்கால வேலைத் திட்டமொன்றை கட்டியெழுப்ப தயாராவதாக அக்கட்சி கூறுகிறது.

## இராணுவமயப்படுத்தலை நிறுத்து!




இலத்திரனியல் அடையாளஅட்டை வடிவத்தில் அரசாங்கம்நடைமுறைப்படுத்த இருக்கும் அடக்குமுறையின் புதியவடிவத்திற்கு எதிராக முன்னிலை சோஷலிஸ கட்சி சுவரெட்டி நடவடிக்கைஆரம்பித்துள்ளதையே படத்தில் காண்கிறீர்கள்

## தண்ணீர் தனியார்மயமாக்கலுக்கு எதிராக அணி திரள்வு

நீர்வளத்தை தனியாரிடம் கையளித்து மக்களின் இலவச தண்ணீர் உரிமையை பறிப்பதற்கு எதிராக ஆர்ப்பாட்ட நடவடிக்கையொன்றை மேற்கொள்ள திட்டமிட்டுள்ளதாக விவசாய போராட்ட முன்னணி கூறுகிறது.

இவ்வருடம் பெப்ரவரி மாதம் 9ம் திகதி பத்திரிகைகளில் வெளிவந்த விளம்பரத்தின்படி தண்ணீரை விலை மதிப்பு வாய்ந்த விற்பனைப் பண்டமாக அரசாங்கம் பிரடனப்படுத்தியுள்ளது. இவ்வரு பெப்ரவரி மாதத்திலேயே நீர் வளத்தை விற்பனைப் பண்டமாக்க தேவையான அடிப்படை வசதிகளை தயாரிதப்பதற்காக உலக வங்கியிடமிருந்து 110 மில்லியன் டொலர் பணம் பெறப்பட்டுள்ளது.

இதற்கிடையில் மாகாண சபை பகுதிகளில் நிலத்தடி நீர் மூலங்களை தனியார்மயப்படுத்த தேவையான சட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. இவ்வருட ஆரம்பத்தில் வடமேல் மாகாண சபை நீர் முகாமைத்துவ பிரகடனம் என்ற பெயரில் ஒரு சட்டத்தை நிறைவேற்றியது. இப்போது அதனை வட-மத்தி, மேல் மற்றும் மத்திய மாகாணங்களிலும் நிறைவேற்றிக் கொள்ளும் திட்டமொன்று செயற்படுகிறது, இதன்படி நீர் வளத்தின் உரிமை மக்களிடமிருந்து பறிக்கப்படுவதற்கான செயற்திட்டம் நடந்து கொண்டிருப்பது தெளிவு.


இன்னும் என்னதான் வேண்டும் என்கிறீர்கள் 3



7



இது.... அவன் சொன்னகதை....

10



எங்கள் பெண்களைமற்றவர்கள் எப்படிகாதலிக்கலாம்!!

# மாணவர்கள் ஓரணியில் திரண்டது எஸ்.பியை மட்டும் அல்ல மகிந்தவையும் ஆட்டம் காணச்செய்துள்ளது!

முன்னிலை சோசலிச கட்சி பல்கலைக் கழகங்களுக்குள் குழப்பத்தை ஏற்படுத்த முயற்சிப்பதாக உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்கா தெரிவித்துள்ளார்.

கடந்த 08ஆம் திகதி நடந்த கூட்டம் ஒன்றில் அவர் இந்த கருத்தை வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பாக முன்னிலை சோசலிச கட்சியின் பிரசாரச் செயலாளர் புபுது ஜாகொட கருத்து தெரிவிக்கையில், கடந்த 03ஆம் திகதி சபரகமுவ பல்கலைக்கழக மாணவன் தாக்கப்பட்டது நாட்டில் உள்ள அனைவரும் அறிந்ததே அதன் பின்னர் 5ஆம் திகதி மீண்டும் ஒரு தமிழ் மாணவன் பரீட்சை எழுதிக்கொண்டிருக்கும் போது பல்கலைக்கழக உயர் அதிகாரியின் ஆதரவுடன் பொலிஸார் கைது செய்ததும் நாம் அனைவரும் அறிந்ததே.

இதை எஸ்.பி திஸாநாயக்க சொல்லி நாம் தெரிந்து கொள்ள வேண்டியதில்லை .இப்படி தொடர்ச்சியாக பல்கலைக்கழகங்களுக்குள் குறிப்பாக இம்மாதம் சபரகமுவ பல்கலைக்கழகத்திற்குள் தமிழ் மாணவர்கள் தாக்கப்படுவதும் கைது செய்யப்படுவதும் இந்த எஸ். பி திஸாநாயக்க போன்ற இனவாத அமைச்சர்களுக்கு தெரியாத விடயம் அல்ல.

அனைத்தும் இவர்களின் அனுசரணையுடனே இடம் பெறுகின்றது. எனவே குறிப்பிட்ட அமைச்சரின் கருத்தானது எமக்கோ நாட்டிற்கோ புதிதான ஒன்றல்ல இவர்கள் வெளியில் இனவாதத்தை தூண்டி இலாபம் அடைவது போல் பல்கலைக்கழகங்களுக்குள்ளும் இனவாதத்தை தூண்டி இலாபம் அடைய நினைக்கின்றார்கள்.ஆனால் மாணவர்களின் ஒற்றுமைக்கு மத்தியில் இவர்களின் இனவாத கனவு கலைந்து போயுள்ளது.

கடத்தப்பட்ட மாணவனின் விடுதலைக்காக சிங்கள,தமிழ்,முஸ்லிம் மாணவர்கள் ஓரணியில் திரண்டது எஸ்.பியை மட்டும் அல்ல மகிந்தவையும் ஆட்டம் காணச்செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இலத்திரனியல் அடையாள அட்டை தனிநபர் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல்!

எம்.பி அஜித்குமார

அரசு அறிமுகப்படுத்தவுள்ள இரத்திரனியல் அடையாள அட்டை முறையானது தனிநபர் பாதுகாப்புக்கு பாரிய அச்சுறுத்தலாக அமைவதுடன் அப்பட்டமான மனித உரிமை மீறலாகும்.

மனிதனுக்கு பொருத்தப்படும் சீசீரிவி கமராவே இலத்திரனியல் அடையாள அட்டை என்பதால் உடனடியாக இத்திட்டத்தை கைவிடவேண்டும் என முன்னிலை சோசலிச கட்சியின் மத்திய குழு உறுப்பினரும் பாராளுமன்ற உறுப்பினருமான அஜித் குமார வலியுறுத்தியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசினால் அறிமுகப்படுத்தப்படவுள்ள இலத்திரனியல் அடையாள அட்டை திட்டத்தின் பின்னணி பயங்கரமானது. தற்போதுள்ள அடையாள அட்டையில் பெயர், முகவரி,பிறப்பு,தொழில் ,முகவரி,புகைப்படம் போன்ற தகவல்கள் மட்டுமே உள்ளன. ஆனால், இலத்திரனியல் அடையாள அட்டைக்கு பரம்பரை விபரங்கள் முதல் மகப்பேறு வரை கேட்கப்படுகின்றன.

குற்றவாளிகள், சந்தேகநபர்களிடமிருந்து தான் கைவிரல் அடையாளங்கள் பதிவு செய்யப்படும்.ஒருவரின் சம்மதம் இன்றி கைவிரல் அடையாளங்களைப் பெறமுடியாது. அப்படி கட்டாயம் பெற வேண்டுமாயின் நீதிபதி ஒருவரின் அனுமதி பெறவேண்டும். ஆனால் இந்த இலத்திரனியல் அடையாள அட்டைக்காக 10விரல்களின் அடையாளங்களும் பதிவு செய்யப்படவுள்ளன.

சட்டம் ஒன்றை கொண்டுவந்ததன் பின்னர் தான் அது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் பொதுமக்களுக்கு விழிப்புணர்வுகள் ஏற்படுத்தப்படுவது வழமை.ஆனால் இலத்திரனியல் அடையாள அட்டைத்திட்டம் தொடர்பாக ஆராயப்பட்டிருக்கும் போதே அது தொடர்பில் கிராம சேவையாளர்களுக்குபயிற்சிகள் வழங்கப்படுவதுடன் சுவரொட்டிகள் பிரசுரங்கள் வெளியிடப்படுவது வழக்கத்திற்கு முரணானது.

இந்த இலத்திரனியல் அடையாள அட்டை எமது உடலில் பொருத்தப்படும் சீசீரிவி கமராவைப் போன்றது. இதற்காக கேட்கப்படும் தகவல்கள் அப்பட்டமான மனித உரிமைகளை மீறும் செயல்.

இலத்திரனில் அடையாள அட்டைக்கு ஒருவர் தனது விபரங்களை கொடுப்பதன் மூலம் அவர் தனது தனிப்பட்ட விடயங்கள் அனைத்தையும் அம்பலத்திற்கு விடுகின்றார்.

அறிமுகப்படுத்தப்படவுள்ள இலத்திரனியல் அடையாள அட்டையில் சிப் ஒன்று இருக்கும் அதன் பிரதி ஒன்றையும் வைத்திருப்பார்கள்.இதன் மூலம் தனிப்பட்ட நபர்களின் தகவல்கள் இலகுவாக திரட்டப்படலாம்.

இது தனிநபர் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் இவ்வாறு எம்மிடம் இருந்துபெறப்படும் தகவல்கள் எமது எதிரிகளுக்கு கூட வழங்கப்படலாம்.

எனவே இத்திட்டத்தை அரசாங்கம் உடனடியாக கைவிட வேண்டும் என்றார்.

## தேர்தல் வன்செயலை ஒழித்துக்கட்ட அரசியல் முறையில் மாற்றம் தேவை

இம்முறை ஊவா மாகாண சபைக்காக நடைபெறும் தேர்தலில் உடல் ரீதியான வன்முறைகள் பரவலாக காணப்பட்டாலும் பணபலம், ஊடக பலம், வாக்காளர்களுக்கு லஞ்சம் கொடுத்தல் மற்றும் பொய் பிரச்சாரங்கள் ஊடாக மேற்கொள்ளப்படும் கவன ஈர்ப்புகள் குறைவாகவே காணப்படுவதாக முன்னிலை சோஷலிஸக் கட்சி கூறுகிறது.

அக்கட்சியின் அரசியல் சபை நேற்று வெளியிட்ட (28) ஊடக அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளது. உண்மையான கருத்தைப் பற்றிய சரியான விளக்கத்தைப் பெற மட்டுமல்ல, எந்தவொரு கருத்தையும் வெளியிடும் வாய்ப்புக்காகக் கூட இந்த அரசியல் முறையில் மாற்றம் தேவைப்படுவதாகவும் அந்த அறிக்கை மேலும் கூறுகிறது.

அந்த அறிக்கை வருமாறு:

தேர்தலின்போது மேற்கொள்ளப்படும் வன்முறைகளுக்கு எதிராக அணிதிரள்வோம்!

ஊவா மாகாண சபை தேர்தலில் தேர்தல் பிரச்சார நடவடிக்கைகள் நடந்து கொண்டிருக்கும் நிலையில் தேர்தல் வன்செயல்கள் கடந்த வாரம் பாரதூரமாக அதிகரித்துள்ளது. இதுவரை வெளிவராத பாரதூமான சம்பவங்கள் தொடர்ந்து வெளிவந்த வண்ணமுள்ளன. கடந்த ஞாயிறு இரவு ஆரம்பமான வன்முறைகள் தொடர்ந்து பரவலாகி வருகின்றன.

இந்நிலை மொணராகலை மாவட்டத்திலயே அதிகமாக காணப்படுகிறது. மொணராகலை மாவட்டத்தில் இரு நாட்களில் மட்டும் 13 ஐக்கிய தேசியக் கட்சி அலுவலகங்களும், மக்கள் விடுதலை முன்னணியின் 4அலுவலகங்களும் தாக்கப்பட்டுள்ளன.

தவிரவும், தேர்தல் மேடைகளை தீயிடல், கட்அவுட் மற்றும் அலங்கரிப்புகளை உடைத்தெறிதல், வேட்பாளர்கள் மற்றும் ஆதரவாளர்களுக்கு கொலை மிரட்டல் விடுத்தல் போன்ற பல்வேறுபட்ட வன்செய்கள் நடந்துள்ளன. சில சந்தர்ப்பங்களில் வெடி வைத்தல் போன்ற சம்பவங்களும் நடந்துள்ளன. வன்செயல்களில் ஈடுபடுவோர் துப்பாக்கிகள் பயன்படுத்துவதையும் காணக்கூடியதாக உள்ளது.

ஆயுதம் தரித்த செயற்பாடுகளுக்கு தூ ண்டுவதாக ஏனைய அரசியல் சக்திகளை குற்றஞ்சாட்டி தேசிய பாதுகாப்பு என்ற போர்வையில் மக்களின் ஆக்க குறைந்த ஜனநாயக உரிமைகளைக் கூட பறிக்கும் அரசாங்கத்தின் இவ்வாறான செயற்பாடுகள் கவனத்தில் எடுக்க வேண்டிய விடயங்களாகும்.

இந்த சம்பவங்களை பார்க்கும் போது, தேர்தல் என்பது மக்களின் சுய விருப்பத்தை வெளியிடும் வாய்ப்பாக அல்லாது கருத்தியல் ரீதியிலான வற்புறுத்தல் புகுத்தப்படும் சந்தர்ப்பமாகவே காணப்படுகிறது. உடல் ரீதியாக நடக்கும் வன்செயல்கள் இம்முறை ஊவா தேர்தலில் பரவலாக காணப்படுகிறது. இது சம்பந்தமாக பொது மக்கள் மத்தியில் பரவலாக பேசப்பட்டாலும் பணபலம், ஊடகபலம், வாக்காளர்களுக்கு லஞ்சம் கொடுத்தல் மற்றும் பல்வேறுபட்ட பொய்ப் பிரச்சாரங்கள் ஊடாக மேற்கொள்ளப்படும் கோட்பாட்டு வற்புறுத்தல்களை மக்கள் அவதானிப்பது குறைவாகவே இருக்கிறது.

மக்களின் உண்மையான கருத்து பற்றி சரியான விளக்கம் பெறுவதில் மட்டுமல்ல, எந்தவொரு கருத்தையும் வெளியிட வாய்ப்பை பெறுவதாயிருந்தால் கூட இந்த அரசியல் முறையில் மாற்றம் தேவை என்பது தெளிவாகத் தெரிகிறது.

தேர்தலில் வாக்காளர்களுக்கு எதிராக மற்றும் மாற்றுக் கருத்தை கொண்டவர்களுக்கு எதிராக தொடுக்கப்படும் வன்செயல்களை நிறுத்துமாறு அரசாங்கத்தை வற்புறுத்தம் நாம், தற்போதைய ஏமாற்று தேர்தலுக்கு பதிலாக மக்களின் உண்மையான கருத்தை பிரதிநிதித்துவம் செய்யும் தேர்தல் செயற்பாட்டோடு புதிய அரசியல் செயற்பாட்டை கட்டியெழுப்ப முன்வருமாறும், பௌதிக வற்புறுத்தலுக்கும், கோட்பாட்டு வன்செயலுக்கும் எதிராக போராடுமாறும் அனைத்து இலங்கை மக்களிடமும் கேட்டுக்கொள்கின்றோம்.

## நாட்டை திறந்தவெளி சிறைச்சாலையாக மாற்ற மஹிந்த அரசு முயற்சி!

### முன்னிலை சோசலிசக் கட்சி

அரசாங்கம் புதிதாக அறிமுகப்படுத்த உள்ள இலத்திரனியல் அடையாள அட்டை மக்களின் அடிப்படை உரிமைகளை மீறுவது என முன்னிலை சோசலிசக் கட்சி தெரிவித்துள்ளது.

நாட்டு பிரஜைகளின் கைவிரல் அடையாளங்களை பெறும் அங்குலிமாலா நடவடிக்கை ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக இதன் மூலம் நாட்டையும் திறந்த வெளி சிறைச்சாலையாக மாற்ற அரசாங்கம் முயற்சித்து வருவதாகவும் முன்னிலை சோசலிசக் கட்சியின் பிரச்சார செயலாளர் புபுது ஜாகொட குற்றம் சுமத்தியுள்ளார்.

கொழும்பு ராஜகிரிய பிரதேசத்தில் இன்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை கூறியுள்ளார்.

முழு நாட்டையும் தீறந்த வெளி சிறையாக மாற்ற அரசாங்கம் மேற்கொள்ளும் இந்த முயற்சிக்கு எதிராக மக்கள் தமது கைவிரல் அடையாளங்களை வழங்குவதை நிராகரிக்க வேண்டும்.

இலங்கையில் ஆட்களை பதிவு செய்வதற்காக இருக்கும் ஒரே சட்டம் 1968ஆம் இலக்கம் 32என்ற ஆட்பதிவுச் சட்டமே அமுலில் இருக்கின்றது.

1971ஆம் 1981ஆம் ஆண்டுகளில் அதில் திருத்தங்கள் செய்யப்பட்டது. 1972ஆம் ஆண்டு கையால் எழுதும் அடையாள அட்டை வழங்குவது ஆரம்பிக்கப்பட்டது.

இதனையடுத்து 2011ஆம் ஆண்டு ஆகஸ்ட் 17ஆம் திகதி பழைய அடையாள அட்டைக்கு பதிலாக இலத்திரனியல் அடையாள அட்டையை அறிமுகப்படுத்த அமைச்சரவை தீர்மானித்தது.

கையால் எழுதும் அடையாள அட்டைக்கு பதிலாக இலத்திரனியல் அடையாள அட்டை வழங்குவதை நாங்கள் எதிர்க்கவில்லை.

எனினும் இலங்கையில் 15வயதுக்கு மேற்பட்ட சகலரது விபரங்கள் உடல் அடையாளங்களுடன் கூடிய தேசிய பிரஜைகள் தரவுகளை தயாரிப்பது என அமைச்சரவை முடிவு செய்துள்ளது.

இது நாட்டை இராணுவமயப்படுத்தும் நடவடிக்கையின் மற்றுமொரு செயற்பாடாகும்.

இதனை கொண்டு வர எண்ணியுள்ளவர்கள் முழு சமூகமும் குற்றவாளிகள் என கருதுகின்றனர்.

நடைமுறையில் உள்ள சட்டத்தின்படி குற்றவாளிகள் என அடையாளப்படுத்தப்பட்டவர்களிடம் மட்டுமே கைவிரல் அடையாளங்களை பெற முடியும். நீதிமன்றத்தின் உத்தரவின் படியே அதனையும் பெற முடியும்.

தற்போது நாட்டில் நடைமுறையில் இருக்கும் சட்டத்திற்கு முரணான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. பிரதேச செயலாளர் அலுவலகங்கள் மூலமாக நடவடிக்கை தொடர்பான கையேடுகள் வெளியிடப்பட்டுள்ளன.

கிராம சேவகர்கள் அடையாள அட்டைக்கான விண்ணப்பங்களை வழங்கியுள்ளனர்.

அதில் தனி நபரின் விபரங்கள் மாத்திரமல்லாது, நபரின் குடும்ப விபரங்கள் மற்றும் கைவிரல் அடையாளமும் பெறப்படுகிறது.

1968இலக்கம் 32என்ற சட்டத்திற்கு அமைய என விண்ணப்பத்தின் மேல் பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த சட்டத்தின்படி அப்படியான விபரங்களை பெற அதிகாரமில்லை. அரசாங்கம் இந்த சட்டத்தை இரத்துச் செய்து விட்டு அடக்குமுறை சட்டம் ஒன்றை கொண்டு வரப் போகிறது.

அந்த புதிய சட்டம் நிறைவேற்றப்படும் முன்னர் செயற்பாடுகளை ஆரம்பித்துள்ளனர்.

பிரதேச செயலகங்களில் நடக்கும் பயிற்சி கருத்தரங்குகளுக்கு ஆட்பதிவுத் திணைக்களத்தின் அதிகாரிகள் செல்வதில்லை. இராணுவ அதிகாரிகளே செல்கின்றனர். எந்த அடிப்படையில் இராணுவம் இதில் தலையிடுகிறது.

இது அடையாள அட்டை தொடர்பான பிரச்சினையல்ல. அடக்குமுறையின் முயற்சியாகும்.

ஐரோப்பிய நாடுகள் கைவிரல் அடையாளங்களை தமது பிரஜைகளின் குடியுரிமைகளை பெறுவதாக அரசாங்கம் கூறுகிறது.

கலாசார விழுமியங்களை கொண்ட எந்த நாடாவது தமது பிரஜைகளின் வாழ்வியல் அடையாளங்களை திரட்டுகிறதா என்பதை சுட்டிக்காட்டுமாறு நாம் சவால் விடுக்கின்றோம் எனவும் புபுது ஜாகொட குறிப்பிட்டுள்ளார்.

# இன்னும் என்னதான் வேண்டும் என்கிறீர்கள்

தேர்தல்கள் பல விதம் ஒவ்வொன்றும் ஒரு விதம். வேட்பாளர்கள் வாக்காளர்களிடம் பொய் சொல்கிறார்கள். வாக்காளர்களோ வேட்பாளர்களை தாம் ஏமாற்றுவதாக நினைத்து தாமும் கெட்டு ஒட்டுமொத்த சமுதாயத்தையும் படுகுழியில் தள்ளிவிடுகிறார்கள். அரசாங்கத்தின் பக்கத்திலிருந்து பார்த்தால் வாக்காளனை ஏமாற்றுவதற்கு பண மழையை வரவழைத்திருக்கிறார்கள். வாக்காளர்கள் அந்த மழையில் நனைவதற்கு விருப்பமாக இருப்பதுதான் அதற்கு காரணம். ஏனெனில் அரசியல்வாதி நினைக்கிறார் பணமழையிலோ பொருள் மழையிலோ மக்களை நனையவிட்டால் சமூகம் எக்கேடு கெட்டாலும் தன்னை மக்கள் ஆதரிப்பாளர்கள் என்று.

ஊவா மாகாண தேர்தல் மேடைகளில் அரசாங்கத்தின் மஹிந்தானந்த அலுத்கமகே கூறிய சில கருத்துக்கள் தொலைக்காட்சி அலைவரிசைகளில் காட்டப்பட்டன. அவர் சொல்கிறார் "பாதைகள் அமைக்கப்படுமாயின், அபிவிருத்தி கண்ணுக்கு தெரிவதாயின்,அது மகிழ்ச்சியை தருவதாயின் வேறெதையும் தேடாதிருங்கள்" என்று. நவ தாராளமய முதலாளித்துவத்தினது முதலாவது இன்னிங்ஸில் பரவலாக பேசப்பட்ட ஒரு விடயம் என்னவென்றால்," சாப்பாடு கிடைப்பதாயிருந்தால், குடிக்க கிடைப்பதாயிருந்தால் வேறு என்னதான் வேண்டும்" என்பதே. அதன்படி சாப்பிட 8 வகை தானியமும், குடிப்பதற்கு போதைப் பொருளும் தந்து என்னதான் நடக்கும் நடக்கட்டுமே, கப்பல் மூழ்கினாலும் பரவாயில்லை என்ற எண்ணக்கூடிய சமூகத்தை உருவாக்க முயற்சிக்கப்பட்டது. நவ தாராளமய முதலாளித்தின் இரண்டாவது இன்னிங்ஸ ில் தின்ன உண்ண கிடைப்பதைப்பற்றி உறுதியாக கூற முடியாததால் மஹிந்தானந்த கூறுகிறார் பாதைகள் அமைக்கப்படுவதாயிருந்தால் கப்பல் மூழ்கினாலும் கவலை இல்லையென்று.

"யுத்தம் நடந்து கொண்டிருப்பதால் எல்லாவற்றையும் சகித்துக் கொள்ளுங்கள்"என்பதே ஒரு காலத்தில் அரசாங்கத்தின் தேர்தல் கோஷமாக இருந்தது. வயிற்றைப் பற்றியல்ல நாட்டைப்பற்றி சிந்தியுங்கள் என்று அரசாங்கம் கூறியது. யுத்தம் முடிந்தது. மக்கள் நிம்மதிப் பெருமூச்சு விட்டனர். அரசாங்கம் தனது கோஷத்தை மாற்றிக் கொண்டது. ஏகாதிபத்திய அச்சுறுத்தல் என்ற கோஷத்தை கையிலெடுத்த அரசாங்கம் மின்சாரக் கதிரையில் தன்னை ஏற்ற ஏகாதிபத்தியம் தயாராக இருப்பதாகவும், ஆகவே அதனைத் தடுக்க தேர்தல்களில் தனக்கு வாக்களிப்பதன் மூலம் மக்கள் சக்தியை வெளிப்படுத்த வேண்டுமென அரசாங்கம் கூறியது. இப்போது அந்தக் கோஷத்தை மக்கள் முன் கொண்டு செல்லா முடியாது. ஏனெனில், யுத்தத்தின்போது நடந்த மனித உரிமை மீறல் குறித்து விசாரிக்க சிறப்பு ஆணையமொன்றை அரசாங்கமே நியமித்திருக்கும் நிலையில் சர்வதேச நிபுணர்களைக் கொண்ட ஆலோசனைக் குழுவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளமைதான் காரணம். அரசாங்கம் இப்போது கப்பம் வழங்கும் கோஷத்தை கையிலெடுத்துள்ளது. அது இரண்டு கட்டத்தில் முன்வைக்கப்படுகிறது. முதல் கட்டத்தில் அடிமட்ட நடவடிக்கையாக மண்வெட்டிகள், தையல் மெசின்கள்,தண்ணீர் மோட்டர், சாரிகள், கைப்பேசிகள் போன்றவற்றை வழங்கும் நடவடிக்கைகள் நடந்தன. அடுத்த கட்ட நடவடிக்கையாக அதிவேகப் பாதைகள், துறைமுகம், விமான நிலயம், நகர அலங்கரிப்பு போன்றவை ஊடாக மேல்மட்ட கருத்தியலை நிர்மாணிக்க முயற்சிக்கப்படுகிறது. "சிரச" தொலைக்காட்சியில் நடந்த "முஹுனட்ட முஹுன" (நேருக்கு நேர்)நிகழ்சியின்போது நகர அலங்கரிப்பு என ஒன்று கிடையாதெனவும், நகரங்கள் அபிவிருத்தியடையும்போது தானாகவே அழகுபெறுகிறது எனவும் பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ கூறினார். இந்த கருத்தை மக்களிடம் எடுத்துச் செல்லும் வேலையையே மஹிந்தானந்த அலுத்கமகே ஏற்றுள்ளார்.

பாதைகள் அமைக்கப்படுவதும், காபட் இடப்படுவதும், அதிவேகப் பாதைகள் அமைக்கப்படுவதும் மக்களுக்காகவே என்று அரசாங்கம் கூறுகிறது. தெற்கு அதிவேகப் பாதைகள் அமைக்கப்படுவதை உதாரணமாக காட்டி, அதன் நோக்கம் மக்களுக்கு அம்பாந்தோட்டை, மாத்தறை போன்ற பகுதிகளுக்கு விரைவாக செல்ல முடியுமென அரசாங்கம் கூறுகிறது. அரசாங்கத்தின் அபிவிருத்தி குறித்து சமீபத்தில் லக்ஷ்மன் யாபா அபேவர்தன கூறியதை நன்றாக ஆராய்ந்து பார்த்தால் பாதை அபிவித்தியின் உண்மையான நோக்கம் தெரிய வரும். எதிர்காலத்தில் 5 பில்லியன் டொலர் வெளிநாட்டு முதலீட்டை எதிர்ப்பார்ப்பதாகவும், பொருளாதார அபிவிருத்திக்காக வெளிநாட்டு முதலீடுகளை நம்பியிருப்பதாகவும் கூறினார். இன்றைய நிலையில் வெளிநாட்டு முதலீடாக ஒரு பில்லியன் டொலராவது நாட்டுக்கு வருவதில்லை. அதனால், இலங்கையை வெளிநாட்டு மூலதனத்திற்கு முற்றாக திறந்துவிட்டு முதலீட்டாளர்களுக்கு வசதிகளை செய்து கொடுப்பதன் ஊடாக முதலீட்டாளர்களை கவர வேண்டுமென அரசாங்கம் நினைக்கிறது. அதற்காக ஒவ்வொரு மாவட்டத்திலும் 5 தொழிற்சாலைகளை அமைப்பதை இலக்காகக் கொண்டு அரசாங்கம் செயற்படுகிறது. அவ்வாறு தொழிற்சாலைகளை அமைக்க வரும் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு பாதை வசதிகள், மின்சாரம், நீர், காணி மற்றும் வரி விலக்கு ஆகியவற்றை வழங்குவதாக லக்ஷ்மன் யாபா கூறுகிறார். நிதி அமைச்சினால் சமீபத்தில் அமைச்சரவைக்க சமர்ப்பிக்கப்பட்ட ஆறு பக்கங்களைக் கொண்ட அறிக்கையின் வாயிலாக வெளிநாட்டவருக்கு காணிகள் விற்பதில் விதிக்கப்பட்டிருந்த 15 வீத வரி 7.5 வீதமாக குறைப்பதற்கு ஆலோசிக்கப்பட்டிருந்தது. இவை அரசாங்கத்தின் நவ தாராளமய திட்டங்கள் என கருதாது அவற்றை சமூக நலன்புரி சேவைகளாக ஏற்றுக் கொள்ளுமாறு மஹிந்தானந்த எமக்கு கூறுகிறார். "எப்பொருள் யார்வாய் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு" என்றுதான் நாங்கள் கூற வேண்டியிருக்கிறது.

அதிவேகப் பாதைகளுக்காக பெருமளவு பணம் வீனாக செலவிடப்படுகிறது. அதிவேகப் பாதையில் ஒரு கிலோ மீற்றருக்கு செலவளிக்கும் பணம் உலகின் ஏனைய நாடுகளில் அதற்காக செலவிடப்படும் பணத்தையும்விட அதிகமாகும். தெற்கு அதிவேகப் பாதையில் ஒரு கிலோ மீற்றருக்கான செலவு ரூபா. 1500 மில்லியன், கட்டுநாயக அதிவேகப் பாதையில் ஒரு கிலோ மீற்றருக்கான செலவு ரூபா. 1800 மில்லியன், கொழும்புக்கு வெளியிலான சுற்றுவட்ட அதிவேகப் பாதையில் கடுவலை , கடவத்தை பகுதியில் ஒரு கிலோ மீற்றருக்கு ரூபா. 5000 மில்லியன், கடவத்தை கெரவலபிட்டிய பகுதியில் ஒரு கிலோ மீற்றருக்கு ரூபா. 7000 மில்லியனும் செலவிடப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. உலகில் இதற்கு சமமான மதிப்பு 250- 400 மில்லியன் அளவிலேயே இருக்கிறது. அதிக வட்டிக்கு பெறப்பட்ட பணமே இவ்வாறு விரயமாக்கப்படுகிறது. அளவுக்கதிகமாக கடன்படுவதால் கடன் சுமை துரிதமாக அதிகரிக்கிறது. அரச கடன் 2005ல் 2,20,000 கோடி ரூபாவிலிருந்து



> **தேர்தலை இலக்காகக் கொண்டு மக்களை ஏமாற்ற பணமழையை பொழிய அரசாங்கம் தயாராகி வருகிறது. வெளிநாட்டு அரசியல் தலைவர்களின் வருகை இந்த கண்காட்சிகளில் முக்கிய பங்கு வகிக்கிறது. செப்டம்பர் 7 , 8ம் திகதிகளில் சீன ஜனாதிபதி சீ ஜிங் பிங் இலங்கைக்கான பயணத்தை மேற்கொள்ளவிருக்கிறார். அவரது பயணத்தின்போது பணமழை உருவாக்கப்படும்.**

2014ல் 6,49,000 கோடி ரூபா வரை மூன்று பங்காக அதிகரித்துள்ளது. தனிநபர் கடன் 2005ல் 1,12,993 ரூபாவிலிருந்து 2014ல் 3,21,472 ரூபா வரை அண்ணளவாக அதிகரித்துள்ளது. மஹிந்தானந்த உட்பட அரசாங்க அமைச்சர்களின் கூற்றுப்படி சமூகம் என்ற வகையில் கடன்காரர்களாவதைப் பற்றி சிந்திக்காமல் பாதைகளைப் பார்த்து சந்தோசப்பட வேண்டியதுதான்.

தவிரவும் தேர்தலை இலக்காகக் கொண்டு மக்களை ஏமாற்ற பணமழையை பொழிய அரசாங்கம் தயாராகி வருகிறது. வெளிநாட்டு அரசியல் தலைவர்களின் வருகை இந்த கண்காட்சிகளில் முக்கிய பங்கு வகிக்கிறது. செப்டம்பர் 7 , 8ம் திகதிகளில் சீன ஜனாதிபதி சீ ஜிங் பிங் இலங்கைக்கான பயணத்தை மேற்கொள்ளவிருக்கிறார். அவரது பயணத்தின்போது பணமழை உருவாக்கப்படும். கடந்த வியாழனன்று நடந்த அமைச்சரவை கூட்டத்தின்போது நகரங்களின் குடிநீர் திட்டங்களுக்காக 650 மில்லியன் அமெரிக்க டொலர்களை சீனாவிடமிருந்து பெற்றுக் கொள்ளும் பிரேரணையொன்று ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. சீன ஜனாதிபதியின் விஜயத்தின்போது கண்காட்சியொன்றை நடத்தி அந்த நிதி வழங்கப்படவிருக்கிறது. இதற்கிடையில் அரசாங்கம் சீனாவின் ஹுனான் பிராந்தியத்தின் ஏற்றுமதி இறக்குமதி வங்கியிலிருந்து பெறப்படும் 90 மில்லியன் அமெரிக்க டொலர் பணத்தை மத்திய மற்றும் ஊவா மாகாணத்தை சேர்ந்த 64.31 கிலோ மீற்றர் பாதைகளை மீளமைப்பதற்கான ஆலோசனை ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. இப்பாதைகளின் முழுமையான மீளமைப்பின்போது 13 பாலங்கள் புதிதாக கட்டப்படவிருக்கின்றன. இக்கட்டுமான பணிகள் சீனாவின் Hunan construction Engineering Group Corporation என்ற நிறுவனத்திடம் ஒப்படைக்கப்படவிருக்கிறது. இதற்கிடையில் செப்டம்பர் 16- 17ம் திகதிகளில் ஜப்பானிய பிரதமர் சின்யோ அபே இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார். அவரது விஜயத்தின்போது பணமழை பொழியக்கூடிய சாத்தியங்கள் காணப்படுகின்றன.

இதற்கிடையில் அரசாங்கம் அவசர அவசரமாக நாட்டிலுள்ள அனைத்து பிரதேச செயலக தொடர்ப்பாடல் நடவடிக்கைகள் 225க்கு ஒன்றுக்கு 300 மில்லியன் வீதம் 67.5 மில்லியனை ஒதுக்கியுள்ளது.

14 ஆம் பக்கம் பார்க்க...

# இந்திய எசமானர்களின் காலில் விழும் கூட்டமைப்பு !!!



1987 ஆவணி மாதத்தின் முதல் வாரத்தில் தான் வல்வெட்டித்துறையில் வைத்து ராஜிவ் காந்தி என்னும் கொடுங்கோலன் அனுப்பிய இந்திய இராணுவத்தின் அமைதி காக்கும் படை என்னும் அழிவுப்படை ஐம்பதிற்கும் மேற்பட்ட அப்பாவிப் பொதுமக்களைக் கொன்றது. வீடுகளை, கடைகளை கொள்ளையடித்து பின் தீவைத்து கொளுத்தியது. எண்பத்தேழாம் ஆண்டின் ஐப்பசி மாதம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் வைத்து எழுபது நோயாளிகளை கொன்றது. "நாங்கள் இந்திராகாந்தி அம்மாவின் ஆதரவாளர்கள்" என்று பயத்திலும், முதுமையிலும் நடுங்கிய கரங்களை கூப்பியபடி கும்பிட்ட நோயாளிக் கிழவனையும் அந்த கொலைகாரர்கள் விட்டுவைக்கவில்லை. சீருடையில் இருந்த இரு வைத்தியர்கள் மூன்று மருத்துவத்தாதிகளையும் அதேநாளில் கொன்றது. 1987 ஆடிமாதத்தில் இருந்து 1990 பங்குனி மாதம் வரை ராஜிவ் காந்தியின் அழிவுப்படை செய்த கொலைகள், பாலியல் வன்முறைகள், கொள்ளைகள் என்பவற்றின் ஒரு சிறுதுளிகள் தான் மேலே குறிப்பிடப்பட்டவை.

இரு கொலையாளிகள்,அரசியல் குள்ளநரிகள் இலங்கை - இந்திய ஒப்பந்தம் என்ற மோசடி ஒப்பந்தத்தை செய்தார்கள். இவர்கள் இலங்கைத்தமிழ் மக்களின் நலன் கருதி இந்த ஒப்பந்தத்தை செய்தார்களாம். இலங்கையின் வரலாற்றில் மிகப்பெரிய சிங்கள பெருந்தேசியவாதியும், எழுபத்தேழு, எண்பத்துமூன்று என்ற வருடங்களில் தமிழ்மக்களின் மீதான இனப்படுகொலையை திட்டமிட்டு கட்டவிழ்த்து விட்டவனும், அப்பட்டமான அமெரிக்க மேலாதிக்க அடிமையும், பாராளுமன்ற முறை அதிகாரத்தை ஒழித்து தனிமனிதனான ஜனாதிபதியிடம் அதிகாரத்தை குவிக்கும் முறைக்கு இலங்கையின் அரசியல் அமைப்பு முறையை மாற்றியவனும், உலக முதலாளிகளின் வேட்டைநிலமாக இலங்கையின் பொருளாதாரத்தை அழித்தவனுமாகிய ஜெயவர்த்தனா இந்த ஒப்பந்தத்தில் கையொப்பமிட்ட ஒரு கொலையாளி.

சீக்கியர்களின் அமிர்தசரஸ் பொற்கோயிலில் வைத்து இந்திராகாந்தி அனுப்பிய இராணுவம் கொன்ற சீக்கியர்களின் மரணங்களிற்காக இரு சீக்கிய மெய்ப்பாதுகாவலர்களால் இந்திரா காந்தி கொல்லப்பட்டார். அதற்காக காங்கிரஸ் காடையர்களால் சீக்கிய மக்கள் கொல்லப்பட்டனர். அரசன் செத்தால் மகன் அரியணை ஏறுவான். அம்மா சாக அரியணை ஏறிய ராஜிவ் சீக்கிய மக்கள் கொல்லப்படுவது குறித்து "பெருமரம் சரியும் போது நிலம் அதிரத்தான் செய்யும்" என்று கொலைகளை நியாயப்படுத்தினான். தன் நாட்டு மக்கள் கொல்லப்படுவது குறித்து இப்படி தத்துவம் பேசியவன் தான் இலங்கைத் தமிழ்மக்கள் கொல்லப்படுவது குறித்து கவலைப்பட்டு ஒப்பந்தம் போட்ட மற்றக் கொலையாளி.

இது வெளிப்படையாக செய்யப்பட்ட ஒப்பந்தம். ஆனால் இதற்கு முதலில் இந்திய வெளிவிவகார அமைச்சர் நட்வார் சிங்கும் இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஏ.சி.எஸ் ஹமீதும் கொழும்பில் வைத்து ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டார்கள். அதில் தமிழ்மக்கள் குறித்து ஒரு எழுத்துக் கூட கிடையாது. திருகோணமலை சீனன்குடா எண்ணெய் களஞ்சியங்கள் இந்தியாவிற்கு கொடுக்கப்பட வேண்டும் போன்ற இந்தியாவின் வர்த்தகம்,பாதுகாப்பு சார்ந்த விடயங்களே அதில் இருந்தன. அதற்காகவே தமிழ்மக்களில் அக்கறை காட்டுகின்ற நாடகம் நடந்தது. தனக்கு தேவையானவற்றை பெற்றுக் கொண்ட பின்பு சிங்கள பெருந்தேசிய அரசுகள் செய்ததை போலவே இந்திய அரசும் தமிழ்மக்களைக் கொன்றது. தமிழ்ப் பெண்களை வன்முறை செய்தது.

பின்பு வன்னிமண்ணில் தமிழ் இனப்படுகொலைக்கு ஆயுதங்களை கொடுத்தார்கள். டெல்லியில் இருந்து அவர்கள் அனுப்பிய ஆலோசகர்கள் வந்து மக்களை எப்படி கொல்லலாம் என்று இலங்கையின் கொலைகாரர்களிற்கு பாடம் எடுத்தார்கள். எரிமலைகள் வெடித்துச் சிதறின. உருவிய வாள்கள் குழந்தைகளில் கூர் பார்த்தன. கடற்கரை மணலிலும், காடுகளின் இருட்டிலும் மரணத்தின் முனகல்கள் மூச்சடங்கிப் போன பின்னும் துப்பாக்கிகளின் சடசடப்புகள் நிற்கவில்லை.

"இந்தியா இல்லையென்றால் இந்தப் போரில் நாங்கள் வென்றிருக்க முடியாது" என்று கொலையாளிகளில் ஒருவன் நன்றி சொன்னான். நன்றிக்கடனாக சம்பூரைக் கொடுத்தார்கள். வன்னியின் வயல்களை கொடுத்தார்கள். சீனர்கள் காட்டினார்கள்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பு என்பது தமிழ்க் காங்கிரஸ், தமிழரசுக் கட்சி என்ற வலதுசாரிகளின் தொடர்ச்சி. அது அன்றைக்கு இருந்து இன்றை வரை தமிழ்மக்களிற்காகவே இருக்கிறோம் என்று சொல்லிக் கொண்டு மக்களின் விரோதிகளுடன் பேச்சுவார்த்தை செய்யும். கூட்டுச் சேரும். நான்கு வருடங்களிற்கு முன் நாற்பதினாயிரம் தமிழ்மக்களை இலங்கை அரசுடன் சேர்ந்து கொன்ற இந்திய அரசு தமிழ் மக்களிற்கு தீர்வினை பெற்றுத் தரும் என்று மக்களை நம்பச் சொல்கிறார்கள். இலங்கை அரசிற்கு எதிராக மக்கள் போராடத் தேவையில்லை. மாளிகைகளில் பேச்சுவார்த்தைகள் நடத்தி மலையைப் பிளப்போம் என்று போட்ட தெருக்களில், பாலங்களில் மகீந்திராக்களும்,டாடாக்களும் ஓடித் திரிகின்றன. நாடுகளிற்கிடையே போட்டிகள் இருந்தாலும் வர்க்க உறவு, வர்த்தக உறவு என்பது தான் முதன்மையானது என்பதை தமிழ்மக்களின் உடல்களின் மேல் மறுபடி ஒருமுறை உலகிற்கு நிரூபித்துக் மயக்க மருந்து ஏற்றுகிறார்கள்.

இரண்டாம் உலகப் போருக்குப் பின் இஸ்ரேல் உருவாக்கப்பட்டது. அன்று தொடங்கிய பலஸ்தீனியர்களின் துயரங்கள் இன்று வரை தொடர்கின்றன. சவுதி அரேபியா,எகிப்து,சிரியா என்று பல நாடுகள் பலஸ்தீனியர்களின் பக்கம் நிற்பதாக சொல்கின்றன. இலங்கை இந்திய ஒப்பந்தம் போன்று நோர்வேயின் அனுசரணையுடன் ஒப்பந்தங்கள் செய்யப்பட்டன. ஆயினும் பலஸ்தீனத்தில் பசும்சோலைகள் வரவேயில்லை. அகதிகளாகவே பிறந்து அகதிகளாகவே மடிகிறார்கள் அந்த மக்கள்.

இத்தனை அரபுநாடுகள் இருந்தும் ஏன் ஒரு தீர்வு வரவில்லை?. ஏனெனில் இஸ்ரேல் அமெரிக்காவின் நண்பன். அமெரிக்கா சவுதி அரேபியாவின் நண்பன். இதற்கு மேல் எந்த கணிதச் சூத்திரங்களும் தேவையில்லை, இஸ்ரேலும் சவுதி அரேபியாவும் நண்பர்கள் என்பதை நிறுவுவதற்கு. இரத்த உறவுகளை விட வியாபார உறவுகள் வலிமையானவை என்ற பழைய தத்துவத்தை தான் பலஸ்தீனியம் எங்கும் குருதியுறைந்த குழந்தைகளின் மரணங்களின் கூறுகின்றன.



மக்களின் எதிரிகள் ஒவ்வொரு முறையும் புதிது புதிதான முகமூடிகளுடன் வருகிறார்கள். ஆனால் கோரப்பற்களும் கூரிய நகங்களும் ஒருபோதும் மாறப் போவதில்லை. மக்களின் எதிரிகளும்,அவர்களை நம்பச் சொல்லும் உள்ளூர் கூட்டாளிகளும் மக்கள் போராட வரும் வரை இரத்தம் குடித்துக் கொண்டு தான் இருப்பார்கள். நமக்கான களங்களில் நாம் தான் போராட வேண்டும். வன்னி மண்ணில், பலஸ்தீனிய பாலைவெளிகளில், அயர்லாந்தின் பார்லி வயல்களில் மக்கள் மடிந்த போது மீட்பர்கள் எவரும் வரவில்லை. இழப்பதற்கு எதுவுமில்லை. ஓங்கி ஒலிக்கட்டும் விடுதலையின் கீதம்.



மார்க்சியம் - 14

# குடும்ப உழைப்பு
## சமூகத்தன்மையற்றுவிடும் போது தனிமனித முரண்பாடாகின்றது

உழைப்பானது பிறருக்கான செயலாகிவிட்ட நிலையில், அது வெறுப்புகுரியதாக மட்டும் குறுகிவிடுவதில்லை. உழைப்பை பிறரிடமிருந்து பெறுவதன் மூலம் வாழ்வதே, வாழ்க்கை முறையாகின்றது. மனிதன் தன் தேவைக்காக உழைப்பதையும், தன் சொந்த கடமைகளைச் செய்வதையும் கூட சுமையாக கருதுமளவுக்கு, மனித வாழ்க்கை முறையில் இருந்தும் அன்னியமாகின்றான். மனித உழைப்பின்றி இயற்கையில் மனிதன் உயிர் வாழ முடியாது என்ற உண்மைக்கு முரணாகவே, மனிதனின் சிந்தனை செயல் அனைத்தும் நேர்மாறாக அமைகின்றது. அதாவது பிறருடனான மனித உறவானது சமூகம் சார்ந்ததாக அல்லாமல், தன்னலம் சார்ந்ததாக திரிபடைந்து வருகின்றது.

மனித உழைப்பு சார்ந்த அன்னியமாதல் முதலாளித்துவ உற்பத்தி முறையில் மட்டுமல்ல, முதலாளிக்காக உழைக்கின்றவனின் சொந்த வாழ்க்கையிலும் நடந்தேறுகின்றது. தனக்கான சொந்த கடமைகளைச் செய்வதை வெறுப்பதும், தன்னைச் சுற்றிய அனைவரிடம் இருந்தும் அதைப் பெறுவதுமான உறவாக, மனித உறவுகளையே மாற்றி அமைக்கின்றது.

உற்பத்தி உறவுகளுக்கு அப்பாலான மனிதவுறவுகளானது, பொருளை அடைவதைக் கொண்டும், பிறர் உழைப்பை பெறுவதைக் கொண்டதுமான மனித உறவாக குறுகி வருகின்றது.

மனித உறவுகளுக்கு அடிப்படையான சமூகத்தன்மை கொண்ட மனித வரலாற்றுத் தன்மைக்கு பதில், சுயநலம் கொண்ட தனிவுடமை உறவாக அனைத்தையும் மாற்றி அமைக்கின்றது. ஒவ்வொரு மனிதனும் தன்னை மையப்படுத்தி விடுகின்ற போது, மனிதத் தன்மைக்கான சமூக அடிப்படையிலான மனித உறவுகளை இழந்து விடுகின்றான். அது பொருட்களைக் கொண்ட உறவாகவும், நுகர்வை முதன்மையாகக் கொண்ட உறவாகவும், பிறர் உழைப்பை பெறும் உறவாகிவிடுவதால், இறுதியில் அனைத்தும் இலாப-நட்ட உறவாகக் குறுகி விடுகின்றது.

இது ஒன்றாக இணைந்து வாழக் கூடிய குடும்பத்தில், தீவிரமான முரண்பாட்டைத் தோற்றுவிக்கின்றது.

நிலப்பிரபுத்துவ சமூக அமைப்பிலான குடும்பத்தில் பெண் ஆணுக்காகவும், குழந்தைக்காகவும், மொத்தத்தில் குடும்பத்துக்காக உழைத்து வந்த சமூக மரபு, முதலாளித்துவத்தின் தோற்றத்துடன் தகர்ந்து வந்தது. அதாவது உற்பத்தி முறையும், அறிவியலும் வளர்ச்சி பெற்ற போது, பெண்ணின் கடமையை அடிப்படையாகக் கொண்ட குடும்ப வாழ்க்கை முறை தகர்ந்து வந்தது. உற்பத்தியில் அடிமை முறைகளுக்கு பதில் கூலியை அடிப்படையாகக் கொண்ட நவீன அடிமை முறை தோன்றியது. இதுவே பெண்ணின் வாழ்க்கை முறையை மாற்றியது.

அதாவது இருவரும் இணைந்து குடும்பத்துக்காக உழைக்கும் ஜனநாயகக் கூறாக பரிணமித்து வந்தது. முதலாளித்துவ தனிவுடமையானது குடும்பத்தில் தனித்தனி நுகர்வை தூண்டி, குடும்பத்தை எதிராக முன்னிறுத்தி தன்னலத்தை முதன்மையாக்கிவிடும் இன்றைய உலகமயமாதல் சூழலில், குடும்பத்துக்காக உழைப்பதானது வெறுப்புக்குரியதாகி வருகின்றது. அதேநேரம் தனக்காக உழைப்பது கூட இழிவானதாகவும், மற்றவர்கள் மூலம் அதை எதிர் பார்ப்பதுமாக, உழைப்பும் வாழ்க்கையும் திரிபடைந்து வருகின்றது.

ஜனநாயகபூர்வமான குடும்பம் என்பது இருவர் இணைந்து அறிவுபூர்வமாகவும் பகுத்தறிவுடனும் அணுகி, சரியான முடிவை வந்தடைவதும் அதற்காக இணைந்து உழைப்பதுமாகும். இதுதான் முரணற்ற ஜனநாயகக் குடும்பம். இதை மறுதளிக்கும் தனிமனிதனை முதன்மையாக்கும் வாழ்க்கை நடைமுறையில், குடும்பத்தை முரண்பாடாக்கி வருகின்றது. குடும்பத்தில் கூட்டாகச் செய்ய வேண்டிய கடமைகள் வேலைகள் பிரிக்கப்பட்டு, இரு துருவங்கள் கொண்ட இணங்க முடியாத இணங்கிச் செய்ய முடியாத குடும்பம் என்ற அளவுக்கு மனித வாழ்க்கை குறுகி வருகின்றது.



குடும்பமானது இருவர் இணைந்து ஒரு முடிவை எடுக்கும் அடிப்படையில் இணைந்து அதற்காக வாழ்தலாகும். ஆனால் இருவர் இணைந்து தனித்தனி முடிவுகளை எடுக்கும் குடும்பமானது, அடிப்படையிலேயே குடும்ப உள்ளடகத்துக்கே முரணானது. இயற்கை தூண்டும் பாலியல் தேவையை அடையவே குடும்பம் என்றளவுக்கு, குடும்பங்களின் இணைவும் அதன் எல்லையும் குறுகும் போது, சமூகத்தன்மை இழந்து குடும்ப வாழ்க்கையே நரகமாகின்றது.

சமூகமும், அதன் அடிப்படையிலான குடும்பமும், கூட்டு உழைப்பிலான சமூக உள்ளடக்கத்தை ஆதாரமாகக் கொண்டது. இதை மறுக்கும் குடும்பம், சமூக உறுப்பாக நீடிக்க முடியாது. நடைமுறையில் முரண்பாடு கொண்ட ஒன்றாகவும், சுயநலம் கொண்ட குடும்பமாகும் போது, குடும்பத்துக்கு எதிரானதாக மாறி சமூகப் பாதிப்பை ஏற்படுத்துகின்றது.

அன்றாட மனித வாழ்வில் சமூகத் தொடர்புடைய குழந்தைகளை எடுப்போம். இயற்கையைச் சார்ந்து குழந்தை பெண்ணின் சமூகக் கூறாக இருக்கும் அதேநேரம், தனிவுடமை ஆணாதிக்க கண்ணோட்டம் அதை பெண்ணுக்கான கட்டாய கடமையாக்கி சுமையாக்கி விடுவதன் மூலம், அதுவே பெண் மீதான ஒடுக்குமுறையாக மாறிவிடுகின்றது. இதனால் குழந்தையை பெற்றுக்கொள்ள மறுக்கின்றதும், பெற்ற குழந்தையை கைவிடுகின்ற தெரிவாகவும் மாறுகின்றது. இறுதியில் இதை "தனிமனித உரிமையாக" விளக்குமளவுக்கு, இதை "பெண்ணுரிமையாக" புரிந்து கொள்ளுமளவுக்கு, வாழ்க்கை முறைமையானது தன்னலமாகத் திரிபடைகின்றது.

குழந்தை பராமரிப்பானது சமூகத் தன்மை கொண்டது என்ற வகையில், அதை "பெண்ணுரிமையின்" பெயரில் மறுப்பதோ ஆணின் "தனிவுரிமை" சார்ந்து அதை பெண் மீது திணிப்பதோ அல்லது தனது பிரச்சனையல்ல என்று புறக்கணிப்பதோ மனிதனுக்குரிய சமூகத் தன்மை கிடையாது. மாறாக தனிவுடமை சார்ந்த தன்னலத்தை அடிப்படையாகக் கொண்ட சுயநலமாகும். வெறும் சட்டங்கள் மூலம் அல்லது குழந்தைப் பண்ணைகள் மூலம், குழந்தைகளை வளர்த்தல் முறையாக சமூகம் வக்கிரமடைகின்றது. இந்த முறைமையானது இலாப நோக்கிலான தனிவுடமை உற்பத்தி முறையிலான, மூலதனத்தின் பிரதியீடாகும். மனிதன் தனது சமூகத்தன்மை இழந்துவிட்டதும், உயிரியலின் இயற்கை விதியை மறுக்கின்றதுமான, சமூக உணர்வற்ற நுகர்வாக்கம் கொண்ட மனித உணர்ச்சியற்ற சடப்பொருளாகின்றான். தனக்கு தானே நுகரும் சமூக உணர்வற்ற, தன்னல உணர்ச்சி மனித உணர்ச்சியல்ல.

நுகர்வாக்க சமூக அமைப்பு மனிதனை வெறுமனே தன்னல நுகர்வு உணர்வு கொண்டவனாக மட்டும் குறுக்கி விடுகின்றது. தன்னலனை மட்டும் முதன்மைப்படுத்தி, மற்றையவற்றை தனக்கு எதிரானதாக மாற்றிவிடுகின்றது.

இப்படி இன்று சமூகத்தில் புரையோடியுள்ள முரண்களே, எங்கும் எதிலும் காணப்படுகின்றது. மனிதர்களின் உழைப்பை சமமாக அங்கீகரிக்க மறுக்கின்றதும், தேவையை அடிப்படையாகக் கொண்ட நுகர்வை மறுக்கின்றதே, தனிவுடமை அடிப்படையாகக் கொண்ட சமூக அமைப்பின் பொது விளைவாகும்.

ஒவ்வொரு மனிதனும் தனக்காகவும், அனைவருக்குமாகவும் பொதுவாக உழைக்கும் அடிப்படைதான், சமூகத் தன்மையாகும். இது தனக்காக மட்டும் உழைக்கவும், மற்றவர்களுக்கு அதை மறுக்கவும் முனையும் தனிவுடமை சார்ந்த தன்னலமே இன்று கோலோச்சி வருகின்றது.

தன்னை முன்னிறுத்திய தன்னலம், தான் அல்லாதவரின் உழைப்பை சுரண்டுவது போல், மற்றவரின் சமூக உழைப்பை தனக்கான சேவையாக - கடமையாக - ஒழுக்கமாக - மரபாக மாற்றுகின்றது. இப்படி சமூக உழைப்பை கடமையாக்கும் போது, அடிமைத்தனமும், கட்டாயமாக்கும் போது ஒடுக்குமுறையுமாக மாறுகின்றது.

குடும்பத்தில் பெண் மீதான ஒடுக்குமுறையாகட்டும், சமூகத்தில் சாதி ஒடுக்குமுறையாகட்டும் சமூகத்தன்மையிலான உழைப்பைத் தனதாக்கும் தனிவுடமை சார்ந்த தன்னலத்தில் இருந்தே இயங்குகின்றது. இதுவே ஆணாதிக்க சாதிய சமூகப் பண்பாட்டு அடிப்படைகளை உருவாக்குகின்றது.

உற்பத்தியில் உழைப்பு சுரண்டப்படுகின்ற போது வர்க்க அமைப்பாகும் அதே வடிவில், தனிமனிதன் மற்றொரு மனிதனின் உழைப்பை கோரும் போது அடிமைத்தனமும், சமூகத்தின் ஒரு பகுதி மற்றொரு பிரிவின் உழைப்பை பெறும் முறை சமூக ஒடுக்குமுறையாக மாறுகின்றது. இந்த வகையில் பெண் உழைப்பை பெறும் முறை தான் ஆணாதிக்கமாகவும், ஒரு பகுதி மற்றொரு பகுதியின் உழைப்பை பெறும் முறை சாதி ஒடுக்குமுறையாகின்றது. இந்த முறைமை சார்ந்து சமூக பண்பாடுகள், சாராம்சத்தில் ஒடுக்குமுறையாக வெளிப்படுகின்றது.

இந்த வகையில் ஆணின் தன்னலமானது, பெண்ணின் உழைப்பை ஆணுக்கான கட்டாய சேவையாக்கி விடுகின்றது. இதை பெண் மறுக்கின்ற போது, அதைப் பெறுவதற்கான ஒடுக்குமுறையாக மாறுகின்றது. குடும்பத்திற்காக சமைத்தல், குழந்தையைப் பராமரித்தல், வீட்டு வேலைகளைச் செய்தல், பாலியல் தேவையை பூர்த்தி செய்தல்...

14 ஆம் பக்கம் பார்க்க...

# மக்களைச் சுடும் பிரச்சனைகளைப் பேச வைக்க வேண்டும்!



சைமன் விமலராஜன் முன்னாள் போராளி . தமயந்தி என்ற பெயரில் அறியப்பட்ட கவிஞன் புகைப்பட ஓவியன். தற்போது நோர்வேயின் ஓலசுண்ட நகரில் வாசித்து வருகிறார். தீவகத்தின் மெலிஞ்சிமுனைக் கிராமத்தைச் சேர்த்த இவர் தனது இளமைக் காலத்திலேயே தேர்ச்சி பெற்ற தென்மோடிக் கூத்துக் கலைஞர் . ஆனந்தசீலன்,தாவீது கொலியாத், ராஜகுமாரி, புனிதசெபஸ்தியார், மந்திரிகுமரன் போன்ற கூத்துகளில் இவரின் பாட்டும் நடிப்பும் இவரை ஒரு கவனிக்கத் தக்க கூத்துக் கலைஞனாக வெளிக்காட்டியது. யுத்தம் காரணமாகவும், சமூக அக்கறையற்ற போக்காலும் அழிவுற்று வரும் இலங்கையின் பராம்பரிய கலைகளில் ஒன்றான தென்மோடிக் கூத்துக் கலைக்கு புத்துயிர்ப்புக் கொடுப்பதுடன், நவீன மயப்படுத்துவதிலும் முன்னிலைச் சக்தியாக செயற்பட்டு வருகிறார் அண்ணாவி .சைமன் விமலராஜன்.

சமவுரிமை இயக்கத்தால் ஐப்பசி மாதம் பாரிஸ் நகரில் நடாத்தப்படவிருக்கும் இனமத ஐக்கியத்தை வலியுறுத்தும் அனைத்து இனக் கலைவிழாவில் இவரால் இயற்றப் பெற்ற ஏகலைவன் கூத்து மேடை ஏற்றப்படவுள்ளது. இதை யொட்டி போராட்டம் பத்திரிகை அவருடன் உரையாடிய சில மணிகளின் தொகுப்பு:

.போ. உழைக்கும் தமிழ்மக்களின் கலையியல் வாழ்வில் மிக முக்கியமானது கூத்துக் கலை. இதில் பலவகைகள் உண்டு ? அவைகளைப் பற்றி.....

இலங்கைத்தீவின் தமிழ்ப் பிரதேசங்களைப் பொறுத்தவரை தென்மோடி, வடமோடி, காத்தான் கூத்து, வட்டக்களரி என இன்னும் பல தொன்மையான கூத்துக்கள் உண்டு. அந்தந்தப் பிரதேசங்களுக்கேயுரிய சிறப்புக்களுடனும், மக்கள் செய்துவந்த தொழில்களின் சிறப்புத் தன்மைகளைப் பிரதிபலிப்பதாகவும் கூத்துக்கள் வெவ்வேறு வடிவங்களில் ஆடப்பட்டு வந்தன. உதாரணத்துக்குச் சொல்வதானால் கரையோர மக்கள் கடற்தொழிலை செய்து வந்தவர்களாக இருக்கும் பட்சத்தில் நெய்தல் நிலத்துக்கேயுரிய அம்பாப் பாடல்கள் என்பன தொழில் புரியும் சமயங்களிலும் பாடப் படுவதுண்டு. அந்தப் பாடல்களைக் கட்டியவர்கள் படித்தவர்களோ, கவிஞர்களோ அல்ல. படிப்பறிவே அற்ற சாதாரண பாமர உழைக்கும் மக்கள். தமது வாழ்நிலைகள் பற்றியும், தொழில் பற்றியும், அலையுடன் போராடும் அவலங்கள் பற்றியும், நாள்முழுதும் அலையாடியும் உலையில் போட எதுவும் கிட்டாது கரை திரும்பும் சோகம் பற்றியும், கிராமத்தலைவர்கள் என்பவர்கள் கரையில் நின்றபடியே மீனவர்களின் உழைப்பைச் சுரண்டும் கொடுமைகள் பற்றியும், தமது காதல் பற்றியும்... இப்படி வாழ்வனுபவங்களை அலைகளின் தாளத்துக்கு இசைத்துப் பாடுவார்கள். இதிலொரு சின்ன உதாரணம் சொல்லலாமென நினைக்கிறேன், அதாவது கடலடியிலும், காற்றிலுமாக வல்லம் வலித்துச் சென்று கரை திரும்பிய ஒரு மீன இளைஞனுக்கு அவனது நெஞ்சு நோவுக்கு அந்த இளைஞனின் முறைப்பெண்ணானவள் மருந்திடுவதாக ஒரு அம்பாப் பாடல்.

”காரைவேர் கரி, நொச்சி, கத்தாளை,
கதம்பை வேர், தும்பை, காஞ்சோண்டி வேரும்,
தேனிலே கொஞ்சம் விட்டுக் குழப்பி,
மார்பிலே மருந்திட்டாளே வள்ளி,
மார்பிலே மருந்தை இட்டு
மயக்காதே போடி....” இப்படி அமைந்த அந்தப் பாடலில் காதலியானவள் தன்னில் எவ்வளவு கரிசனை கொண்டவளாக இருக்கிறாள் என்பதை தொழில் நேரத்தில் சக தோழனுக்குச் சொல்லிப் பெருமைப் படுவது மட்டுமல்ல, அவளைச் செல்லாமகாச் சீண்டுவது உட்பட, உடல்வலிக்கு மக்கள் தாம் சுயமாகவே செய்யும் மூலிகை மருந்து வகைகளையும் சொல்கிறார்கள். இவ்வகைத் தொழிற் பாடல்களையெல்லாம் இந்த உழைக்கும் மக்களுக்கு எந்தக் கற்றறிந்தவரும் ஏட்டிலெழுதி, இசையமைத்துக் கொடுக்கவில்லை. மக்கள் தங்கள் சுய அனுபவங்களிலிருந்து கட்டிய பாடல்கள். இவற்றின் ஒருமுகப்படுத்தப்பட்ட கலை வடிவங்கள்தான் கூத்துக்கள்.

இதேபோன்று காட்டிலும், மலையிலும், வயல்களிலும், மரங்களிலும், சுமை சுமக்கும்போதும் என வெவ்வேறு வகை தொழில்களைச் செய்யும் உழைக்கும் மக்கள் தங்கள் வாழ்வனுபவங்களைத் தொழில் நேரங்களில் தனிப் பாடல்களாகவும், ஒருங்கிணைந்த வடிவங்களாக கூத்துக்களாகவும் பாடி வந்துள்ளனர். முன்னைய காலங்களில் அரங்கமோ, மேடைகளோ, திரைகளோ அமைப்பதில்லை. சமதரையில் மக்கள் வட்டமாகக் கூடியிருக்க மத்தியில் களரி அமைத்து கூத்துக் கலைஞர்கள் எல்லா திசைகளிலும் சுற்றிச் சுற்றி பாடி ஆடி நடிப்பார்கள். மக்களுக்கும் கலைஞர்களுக்குமிடையில் மிக நெருங்கிய தொடர்புகள் இருந்தன. கூத்தர்கள் மக்கள்முன் தம்மையும், தமது பாத்திரம் என்ன என்பதையும், பாத்திரத்தின் குணாதிசயங்கள் என்ன என்பதையும் முதலிலேயே சுய அறிமுகஞ் செய்து சொல்லி விடுவார்கள். இதனூடாக பார்வையாளர்களுக்கும், கூத்தர்களுக்குமான நெருக்கத்தை நாம் உணர முடியும்.

இதன் பின்னால் நவீனமாக்கப் பட்ட வடிவம்தான் கொட்டகைக் கூத்துக்கள். உயர்ந்த மேடை அமைத்து, திரைச்சீலைகள் தொங்கவிட்டு, பக்கவாத்தியம், பிற்பாட்டுக்கள் போன்றவற்றை மறைவில் இருத்தி இந்த வடிவங்கள் அறிமுகமாயின.

இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் இன்றும் மிகத் தொன்மையான வட்டக்களரிக் கூத்துக்கள் ஆடப்பட்டு வருகின்றன. வடமாகாணத்தைப் பொறுத்தவரை தென்மோடிக் கூத்துக்களே பரவலாக உள்ளன. நகரம் சார்ந்த இடங்களில் தென்மோடிக் கூத்துக்களில் கர்நாடக இசைகள் ஓரளவு கலந்துள்ளன என்றாலும், தீவகம் போன்ற இடங்களில் மிகத் தொன்மையான தென்மோடிக் கூத்துக்கள் பாதுகாக்கப் பட்டு வருகின்றன்.



போ. அடிபடையில் கூத்துக் கலை பெரும்பாலும் ஒடுக்கப்பட்ட- உழைக்கும் மக்களில் கலையாக இருந்து வருகிறது. குறிப்பாக ஒடுக்கப்பட்ட சாதி மக்களே இன்றுவரை அதைக் காப்பாற்றி வந்துள்ளனர். ஆனால், கூத்துகளை பயன்படுத்திப் புகழ் பெற்றோர் ஆதிக்க சமூகத்தவராகவே உள்ளனர். காரணமென்ன ?

இந்தத் திட்டமிட்ட துர்ப்பாக்கியம் காலகாலமாகவேதான் நடந்து வருகின்றன. கலைகளில் மட்டுமல்ல அனைத்து விடையங்களிலும்தான். இது கூத்துக்கலை பற்றிய உரையாடல் என்பதால் அதற்கு மட்டும் சொல்கிறேன்.

ஐம்பது, அறுபதுகளுக்கு முந்தைய காலங்களில் கூத்துக் கலையை ஆதிக்கசாதியினரோ, அதன் வழித்தோன்றல்களான கற்றோர்களோ அல்லது அதிகாரங்களில் இருந்தவர்களோ கூத்துக் கலையை தள்ளி வைட்தே பார்த்து வந்திருக்கிறார்கள். கூத்துக் கலையையும் தமது வாழ்வின் ஓர் அங்கமாக நினைத்து வாழ்ந்துவந்த ஒடுக்கப்பட்ட உழைக்கும் மக்களை இந்த ஆதிக்கத்தினர் தங்கள் பொழுதுபோக்கிற்காக அழைத்து கோடிப்புறங்களில் ஆடவைத்துப் பார்ப்பார்கள். அறுபதுகளுக்குப் பிந்தைய காலத்தில் வானொலி போன்ற தொடர்புசாதனங்கள் நகரம்சார் கலைஞர்களை மிக இலகுவாக எட்டியது. அதிலும் இந்த ஊடகங்களைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தியோர் நகரம்சார் ஆதிக்கசாதியினரும், அவர்களின் கல்வியாளர்களுமாகவே அதிகமாக இருந்தனர். அதிகாரங்களின் கைகளிலிருந்த தொடர்புசாதனங்கள், ஆதிக்கசாதியினர் என்ற இன்னொரு அதிகாரக் கூட்டத்தை உயர்த்தி வைப்பதில் ஒன்றும் ஆச்சரியம் இல்லைத்தானே?! அதேவேளை வானொலி போன்ற தொடர்புசாதனங்கள் வந்த பின்னாலும், அவற்றைப் பற்றிய கரிசனைகளே இல்லாமல் தமது பாட்டிற்கு கூத்துக் கலையை வளர்த்த அண்ணாவிகளும், கலைஞர்களும் அதற்காகவே காலம் முழுவது வாழ்ந்து அறியப் படாமலேயே செத்தும் போனார்கள்.

தவிர, 70களின் பின் கூத்துக்கலை கல்விசார் நுண்கலையாக கொண்டுவரப் பட்டபின்,

> **சாதாரண பாமர உழைக்கும் மக்கள். தமது வாழ்நிலைகள் பற்றியும், தொழில் பற்றியும், அலையுடன் போராடும் அவலங்கள் பற்றியும், நாள்முழுதும் அலையாடியும் உலையில் போட எதுவும் கிட்டாது கரை திரும்பும் சோகம் பற்றியும், கிராமத்தலைவர்கள் என்பவர்கள் கரையில் நின்றபடியே மீனவர்களின் உழைப்பைச் சுரண்டும் கொடுமைகள் பற்றியும்,**

வியாபாரக்கல்விச் சமூகத்துக்குரிய ஒரு அம்சமாக கூத்துக்கள் இடம் பிடித்து விட்டன என்பதை நாம் ஏற்றுக்கொண்டுதான் ஆகவேண்டும். விரும்பியோ விரும்பாமலோ கூத்துக்களை வகுப்பறைக் கட்டிடச் சுவர்களுக்குள் கற்கவேண்டிய கட்டாயம் ஏற்பட்டு விட்டது அவர்களுக்கு. சமதரையில் வட்டக்களரி அமைத்து ஆடிய கூத்துக்கள், உயர்ந்த மேடைகளில் அரங்கேற்றப்பட்டு, இப்போ வளாகங்களின் பீடங்களில் வந்து நிற்கிறது. நல்லதுதான். மறுக்கவில்லை. ஆனால் கேள்வியில் கேட்டதுபோல் இங்கும் ஆதிக்கசாதியினரின் கையகப்படுத்தல்கள் இருக்கிறதுதான்.

பரதக் கலையைக் கட்டிக் காத்துவந்த தேவதாசிகள் என்ற முறை ஒழிக்கப்பட்டு, அந்தக் கலையை ஆதிக்கசாதிகளான பார்ப்பனர்கள் கையகப் படுத்தி இன்று அதையொரு வியாபாரப் பொருளாக்கி உலகம் முழுவது பணமீட்டுகிறார்கள். இலங்கையைப் பொறுத்தவரையும் கூத்துக் கலைக்கு இதுதான் நடக்கப் போகின்றது. பரதக்கலையை தம் கையகப் படுத்தியதில் ஆதிக்கசாதியினரான பார்ப்பனர்களுக்கு இரண்டு இலாபங்கள்.

ஒன்று: சாமிகளின் பெயரால் சாதிகளை வலுவாக வளர்க்கவல்ல மதப் பிரச்சாரங்களையே இதன்வழியாகப் பிரச்சாரிப்பது,

இரண்டு: இந்தியாவிலும், புலம்பெயர் நாடுகளிலும் சமூக அந்தஸ்த்துக்கான கலைப்படிப்பு இதுவெனச் சொல்லி கலைவிற்பனை செய்வது.

மீண்டும் சொல்கிறேன். எங்கள் தொன்மைக் கலையான கூத்துக் கலைக்கும் இந்த அவலம்தான் நடக்கத் தொடங்கியுள்ளது.

போ. சாதி ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டங்கள் 50.களின் ஆரம்பத்திலேயே தீவகத்தில் வீரியம் பெற்றது . அப் போரட்டங்களுக்கு கூத்தும் ஒரு காரணமாக இருந்தது. விபரம் கூற முடியுமா ?

இதனை இப்போ யார்தான் பேசப் போகிறார்கள்....? மீண்டும் சொல்கிறேன் நகர் சார்ந்த பிரச்சனைகளைத் தவிர குக்கிராமங்களில் நடக்கும் எந்த நல்லது கெட்டதும் ஊடகத் தொடர்பு சாதனங்களுக்கோ, நகரத்துக் கற்றோர்களுக்கோ, நகர்வாழ் சமூகப் போராளிகளுக்கோ தெரிய வருவதில்லை. அதுபற்றிய அக்கறைகளும் அவர்களுக்கு இருந்ததில்லை. நகரங்களிலிருந்து சிலர் நோகாமல்ப் புரட்சி செய்தார்களே தவிர, குடிக்கத் தண்ணீர்கூட இல்லாத பின் தங்கிய கிராமங்களுக்குப் போய்ப் பணியாற்ற வேண்டுமென்ற தலையெழுத்து அவர்களுக்கு இல்லைத்தானே. சரி விசயத்துக்கு வருகிறேன், 1950களில் கரம்பொன் என்ற ஊரிலுள்ள செபஸ்தியார் ஆலயத் திருவிழாவின்போது மீன்பிடித் தொழிலாளியான அண்ணாவி அவுறான் என்பவர் தனது கலைஞர்களுடன் கூத்து ஒன்றினை மேடையேற்றினார். அந்தக் கூத்தில் வரும் அரசன் பாத்திரமாகவும் அவர் நடித்திருந்தார். அவர் அரசனாகச் சிம்மாசனத்திலிருக்கும் காட்சியினை அந்த ஆலயத்தின் பெரும்பான்மை ஆதிக்கசாதிகளான கத்தோலிக்க வெள்ளாளர்களால் பொறுக்க முடியவில்லை, ஏற்றுக்கொள்ளவும் இல்லை. ”திமிலனுக்குச் சிம்மாசனமோ, எங்கள் எதிரிலேயே” எனக் குழப்பம் விளைவித்து கூத்து இடை நிறுத்தப்படவே, அப்போது அங்கு பங்குக் குரவராக இருந்த பாதிரியார் (அவரும் இந்த ஆதிக்கசாதிக்காரர்தான்) கூத்தை இடை நிறுத்தக்கூடாது, மழை வராமல் போய்விடும் எனவே கூத்தை நடாத்துங்கள் எனக் கட்டளையிட்டார். சிம்மாசனத்துக்குப் பதிலாக உரலில் அமர்ந்திருந்து அரசன் கூத்துப் பாடியும் முடித்தாயிற்று. அதன் நீட்சியாக ஆதிக்கசாதியினருடனான முரண்கள் மீனவ மக்களுக்கு அதிகரித்து 1956ம் வருடம் மிகப் பெரும் சண்டையாகி, அதிலிருந்து பிரிந்து மீனவ மக்கள் தமக்கெனக் கட்டிக் கொண்டதுதான் மெலிஞ்சிமுனை என்ற கிராமம். இது மிகப் பெரும் கதை. மிகச் சுருக்கமாகச் சொல்லியுள்ளேன்.

போ. உங்களைக் கவர்ந்த கூத்துக் கலைஞர்கள், அண்ணாவியார்களைப் பற்றி .... அதற்கு முன் ”அண்ணாவி” என்பதன் அர்த்தம் என்னவென்பதையும் கூறுங்கள்.

என்னைக் கவர்ந்த பல கலைஞர்கள் பலர் இருக்கின்றார்கள். மெலிஞ்சிமுனை, நாவாந்துறை, தம்பாட்டி, கரையூர், பாஷையூர், மன்னார் என அதிகம்பேர் இருக்கிறார்கள். ஆனாலும் எனது ஆசானாக நான் நினைப்பதெல்லாம் அண்ணாவி கலைக்குரிசில் நீ.வ.அந்தோனி அவர்களைத்தான். எனது தந்தையார் உட்பட பல உறவுகளிடமிருந்து நான் கூத்தை அறிந்திருக்கின்றேன். ஆனால்

14 ஆம் பக்கம் பார்க்க...



# இது....

# அவன் சொன்னகதை....

எப்படிஎங்கடைநாடு....
என்றுகேட்டபோது
ஒன்றுமேபேசாது மௌனமாய்
இருந்தான். அவனது மௌனத்தில்
ஆயிரம் அர்த்தங்கள்..... என்னால்
புரிந்துகொள்ளக் கூடியதாய் இருந்தது.

மௌனம் கலைத்தவனாய்.. என்னத்தைச் சொல்ல... எதைச் சொல்ல...

நீ இங்கே எமது எங்கடை பொடியள் ஓடித் திரியிற மோட்டச் சயிக்கிளை வைச்சுக் கொண்டோ அல்லது நாளுக்குநாள் புதிது புதிதாய் எழும்புகிற வீடுகளையும் கட்டிடங்களையும் வைச்சுக் கொண்டோ அல்லது இஞ்சை நடக்கிற திருவிழாக்களைப் பார்க்கவும் ஏதோயுத்தம் நடந்த பூமிபோலத் தெரியாதுதான்,ஆனால் இந்தயாழ் மண்ணைத் தாண்டிபோகப் போகத் தான்..... அதையேன் சொல்லுவான்.....

எத்தனை எத்தனையோ வித்தியாசமான மனிதர்களையும். எத்தனைவினோதங்களையும் கண்டுகொள்ளலாம்.

அவனுக்குப் பெயர் விவேகானந்தன். சிலபேர் அவனை விவேக் எண்டு கூப்பிடுவார்கள். சிலபேர் ஆனந்தன் எண்டு கூப்பிடுவினம்,ஒருசிலர் விவேகானந்தன் எண்று முழுப்பெயரையும் சொல்லிக் கூப்பிடுவார்கள். நாங்கபடிக்கிறகாலத்தில் எல்லாவாத்தியார்மாரும் உண்மையிலே இவன் ஒரு விவேகானந்தர் தான் என்று அவனைப் பாராட்டுவார்கள். அப்படி ஒரு கெட்டிக்காரன்.

பள்ளிக்கூடம் முடிஞ்சும் எங்களுடையசினேகம் தொடர்துகொண்டுதான் இருந்தது. விசுவநாதன் தொடக்கம்,இளையராஜா வரையானசகலபாட்டுக்கள் பற்றிக் கதைப்பதிலிருந்துஊரிலேநாடகங்கள் போடுறதுவிழாக்கள் செய்வதுவாசிகசாலைநடத்துவது,விளையாட்டுப் போட்டிகள் செய்வதுஎண்டுஎல்லாத்துக்கும் நானும் அவனும் தான்,முன்னின்றுசெய்வோம்.

என்னசந்தோசமாய் திரிந்தஎங்களை இந்த இயக்கக்காரர்கள் வந்துஎல்லாத்தையும் குழப்பிப் போட்டாங்கள். எங்கடைவாசிகசாலையிலே கூட்டம் வைக்கவேண்டும்,கட்டாயம் ஒழுங்குசெய்துதாங்கோஎண்டுஅவங்கள் வந்து எங்களைக் கேட்டபோது நாங்கள் அதுக்குமறுப்புத் தெரிவிக்க,ஆமிக்குப் பயப்பிட்டதைவிட இந்த இயக்கக்காரருக்குப் பயந்ததுதான் அதிகம்.

பிறகுபிரச்சினைகள் கூடகூடக் நான் வெளிநாடு என்று இங்கேவர அவனும் வெளிநாடென்று இந்தியா போட்டான். முதல் ஆரம்பகாலங்களில் எனக்கும் அவனுக்கும் தொடர்புகள் இருந்தது. பிறகுகொஞ்சம் கொஞ்சமாய் குறைந்து முழுமையாய் இல்லாமல் போய்விட்டது.

காலம் என்னமாதிரிகடந்ததோ தெரியாது கிட்டத்தட்ட ஒரு இருபத்தைந்துவருடங்கள் கழிந்தது. ஏதோபேச்சுவார்த்தைகளாம் எல்லாரும் ஊருக்குப் போய் வரலாம் எண்டுசொன்னதாலே மனிசிபிள்ளையோடு ஊருக்கப் போனபோதுஅவன் இப்பவும் இந்தியாவிலேதான் இருக்கிறான் என அறிந்திருந்தேன்.

பிறகுஅம்மா செத்ததுக்குப் ஊருக்குப் போனபோது அவன் வந்துவிட்டான். ஆனா இப்பஏதோதொழில் விசயமாய் தூரமாய் எங்கேபோய் விட்டான் என்றும் அறிந்துகொண்டேன்.

பிறகு இப்பஅம்மாவின்ரை திவசத்துக்குப் போனபோதுதான் அவன் என்னட்டைவந்தான். எவ்வளவுகாலம். திரும்பவும் இளையராஜாவிலிருந்த இன்றையரகுமான் வரையிலும் பழையபாடல்கள் என்ன....? இப்போதைய புதியபாடலகள் என்ன....? என்பதுவரையிலும் கதைக்கப்பட்டுகடைசியிலே எங்களை விரட்டிய இயக்கக்காரர்கள் வரையிலும் கதைத்து இன்றைய நாட்டு நிலவரங்கள் வரையிலும் கதைவந்தது.



ஒருநாள் இரவு வவுனியாவில் நின்றபோது.... சொல்லமுடியாமல் தலையில் கையைவைத்தபடிகுனிந்தான். நானும் ஏன் என்னஎன்றுகேட்காமல் பேசாமமௌனமாயிருந்தேன்.

ஏதோசொல்லவேண்டும் என்றுமுனைகிறான் ஆனால் அவனால் முடியாமல் இருந்தது.

நானும் பார்த்துக் கொண்டிருந்தேன். கொஞ்சம் தலையைநிமிர்த்தியவனாய்.... இல்லைமச்சான்.... நினைக்கநினைக்க..... என்று தலையை ஆட்டினான்.

ஒரு பெட்டை.... ஒருபெண்பிளைப் பிள்ளை, ஒருஇருபதோ இருபத்திரண்டோ வயதிருக்கலாம்... நான் நின்றகடைக்குள் உள்ளேபோவுதும் உடனே வெளியேவருவதும் ,பின்னர் அங்கேவந்து போகும் பெடியங்களுடன் வலியக் கதைக்கப் போவுது திரும்பி உள்ளேபோவுது.... எனக்குப் பார்க்கப் பார்க்கபெரியஆத்திரமாயும் கோபமாயும் இருந்தது. கண்டறியாதஉலகம் இந்தநேரத்திலேஅதுவும் இந்த இடத்திலே ஒரு இளம் பெண்ணுக்கு.... ஆ.... அப்படிஎன்ன வேண்டிக்கிடக்கு என்றபடி நினைச்சுநினைச்சுக் கோவப்பட்டேன். ஒருகொஞ்சப் பெடியள் வந்தாங்கள். அந்தப் பிள்ளையோடுமாறிமாறிக் கதைத்தாங்கள் பிறகுஅந்தப்பிள்ளையை கூட்டிக் கொண்டுபோனாங்கள்... அதுவும் பின்னாலேபோனது.

நானும் பஸ் வரவில்லையே என்று காத்துக் கொண்டிருந்தேன்.

கொஞ்சநேரத்தின் பின் அந்தப் பிள்ளைமிகவும் வேகமாகவும் அவசரத்தோடும் கடையில வந்து உள்ளட்டாள் அவசரஅவசரமாக இரண்டு தோசைகள் வாங்கினாள்.... காணாததைக் கண்டதுபோல் எத்தனையோநாட்களின் பின் இன்றுதான் சாப்பிடுவதுபோல்... அவுக் அவுக்கென்று சாப்பிட்டது,அந்தப் பிள்ளை....சாப்பிட்டுமுடித்தவுடன்.... இன்னும் சிலதோசைகளைக் கட்டிக் கொண்டுஅந்த இடம் தெரியாமல் இருட்டோடு இருட்டாய் கலந்துபோச்சுது.

அந்தப் பிள்ளை சாப்பிட்டவிதமும் அதுபட்ட அவசரமும் அதுபட்ட அவஸ்தையையும்.... என்னால் மறக்கமுடியாமலிருக்கு..

அந்தநிகழ்வு என் இதயத்தையே ஒரு உலுக்கு உலுக்கிவிட்டது.

தொடர்ந்து கதைக்கமுடியாமல் அவன் தளதளத்தான்... மச்சான்.... போரிலே எல்லாவற்றையும் பறிகொடுத்த ஒரு குழந்தையா.... இவள். அல்லது நாட்டுக்காய்..... தன் மண்ணின்..... விடிவுக்காய் போராடி.... இன்று யாருமற்ற அனாதையாய் சமூகத்தினால் ஒதுக்கப்பட்டு வாழும் ஒருபெண் போராளியோ........ தெரியாது...

இந்தப்போர் எல்லாத்தையும் பிடிச்சுத் திண்டுபோட்டுவிட்ட மிச்சங்கள் தான் இது மச்சான். இது ஒரு சிறுஉதாரணம் தான் ஆனால் உதுபோல இன்னும் எத்தனை எத்தனையோ... பிள்ளைகள் எங்கடை நாட்டிலே.

அந்தப் பிள்ளைபற்றி நான் தப்பாய் எண்ணியதையும் அன்று என்னால் ஒன்றுமே செய்யாமல் போனதையிட்டு ஒவ்வொருநாளும் நினைத்து நினைத்து இன்றும் எனக்குள்ளேயே அழுதுகொண்டிருக்கிறேன். இதைவிட வேறு என்னிடம் சொல்வதற்கு ஒன்றுமேயில்லை.

இதைக் கேட்டநாளிலிருந்து நானும் என் மனதுக்குள்ளே வைத்துப் புகைந்து கொண்டிருந்தேன். இதை எழுதி முடித்த பின்னர் ஏதோ சிறு ஆறுதல் போல இருக்கு, இருந்தாலும் அன்று ஒருநாள் ஆபிரிக்க நாடொன்றில் வறுமையின் கொடுமையால் இறக்க இருந்த குழந்தையொன்றை கழுகொன்று தூக்ககாத்திருந்ததை தத்துருவமாக படம் பிடித்திருந்த கெவின்காடர் என்றபுகைப்படப்பிடிப்பாளனுக்கு சிறந்த படத்துக்கான பரிசுகளும் பட்டங்களும் கொடுக்கப்பட்டது..பின்னர் யாரோஒருவர் கேட்டாராம் அந்தக் குழந்தையின் நிலை.·.என்ன என்று கேட்டபோது அவனால் பதில் சொல்லமுடியாமல் போனது,பின்னர் தான் ஏன் அந்தக் குழந்தையைக் காப்பாற்றவில்லை என்று மனம்வருந்திநினைதை நினைத்து வேதனைப்பட்டு என்னை மன்னித்துவிடுங்கள் என்றுஎழுதிவிட்டு தற்கொலைசெய்துகொண்டான். அதேபோல் விவேகானந்தனோநானோ இதுவரை இன்னும் தற்கொலைசெய்யவில்லை. இதுகளுக்கெல்லாம் காரணமாயிருந்தவர்கள் இன்றுஉல்லாசசுகபோகங்களில்..

# அரசியல் நடைமுறை மாற்றத்தை ஏற்படுத்

மக்கள் போராட்ட இயக்கத்தின், இன ஒடுக்குமுறை, சமூக ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டத்தை முன்னெடுக்கும், வெகுசன அமைப்பான சமவுரிமை இயக்கம் ஆரம்பிக்கப்பட்டு இரண்டு வருடங்களாகின்றன. இயக்கம் ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் நிலவிய குறைபாடுகள் களையப்பட்டு, ஒரு வீரியமிக்க விருட்சமாக சமவுரிமை இயக்கம் தனது போராட்டங்கள் மூலம் நம் தேசத்தில் வேரூன்றி வளர்ந்து வருகின்றது.இந்தக் குறிப்பின் நோக்கம் இதுவரையும் சமவுரிமை இயக்கம் கடந்து வந்த சிறுசிறு தடைகள், பெறப்பட்ட சிறு வெற்றிகளைப் பற்றிப் பேசுவதுடன், இனி அது போக வேண்டிய திசைகள், பொறுப்புகள் பற்றிச் சில முன்மொழிவுகளை பதிவு செய்வதாகும்.

## கேள்விகளும், சந்தேகங்களும்

சமவுரிமை இயக்கம், முன்னிலை சோசலிசக் கட்சி உட்பட்ட இடதுசாரிகளின் ஐக்கிய ஒன்றியமான மக்கள் போராட்ட இயக்கத்தால் ஆரம்பிக்கப்பட்டதென்பது அனைவரும் அறிந்த விடையம். மக்கள் போராட்ட இயக்கத்தில் முன்னிலை சோசலிசக் கட்சி தவிர, இலங்கையிலுள்ள பலவகை தொழிற்சங்கங்கள், விவசாயிகள் - மீனவ சமாசங்கள், மாணவர் அமைப்புகள், கலைஞர்கள், புத்திசீவிகள்,மற்றும் இடதுசாரிக் குழுக்கள் பங்குகொள்கின்றனர். அத்துடன் போராட்டங்களின் உள்ளடக்கம் சார்ந்து, அரசியல் முரண்பாடுகள் ஏற்படாத தருணங்களில்,இலங்கையின் அனைத்து இடதுசாரிக் கட்சிகளும் மக்கள்போராட்ட இயக்கத்திற்கு ஆதரவு கொடுப்பது வழமையாக இருந்து வருகிறது.

முன்னிலை சோசலிசக் கட்சியானது, மக்கள்போரட்ட இயக்கத்தில் இயங்கும் முக்கிய பெரியகட்சி. இதனால் மக்கள்போரட்ட இயக்கம் சமவுரிமை இயக்கத்தை ஆரம்பித்தபோது, சமவுரிமை இயக்கம்- முன்னிலை சோசலிசக் கட்சியின் அரசியல் திட்டம் சார்ந்த அதன் முன்னணி அமைப்பாகக் கருதப்பட்டது. அல்லது தெற்கு இடதுசாரிகளின் காலங்கடந்த இன ஐக்கியத்துக்கான முயற்சியாகக் கருதப்பட்டது.

இதனால் :

- சுயநிர்ணயக் கோரிக்கையை சமவுரிமை இயக்கம் அங்கீகரிக்க வேண்டும்
- சிங்களப் பெருந்தேசியம் சார்ந்த இடதுசாரிகளின், தமிழ் மக்களை ஏமாற்றுவதற்கான இயக்கம்.
- தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையைத் தந்திரமாக மறுப்பதற்கான வேலைமுறை
- மஹிந்த கதைக்கும் ”சமவுரிமையை” பிரச்சாரம் செய்யும் இயக்கமிது.
- சிங்கள இனவாதப் - போலி இடதுசாரிகள் தமது போராட்டத்துக்கு வடக்குக் - கிழக்கில் ”ஆள் பிடிக்க” ஏற்படுத்தப்பட்ட அமைப்பு.
- தமிழ் தேசிய இனத்தின் இருப்பை மறுக்கின்ற அமைப்பு இது. அதனாலேயே ”தேசியப் பிரசைகள்” என்ற பதத்தைப் பாவிக்கின்றனர்.
- சமவுரிமை இயக்கத்துடன் வேலை செய்வதானால், முன்னிலை சோசலிசக் கட்சி சுயவிமர்சனம் செய்ய வேண்டும்.
- சமவுரிமை இயக்கத்தின் திட்டம் லெனினிய அடிப்படைக்கு எதிரானது.

போன்ற குற்றச்சாட்டுகளும், கேள்விகளும் முன்வைக்கப்பட்டது. சமவுரிமை இயக்கத்தை இவ்வாறு கணித்தவர்களின் தமிழ்தேசிய அரசியல்- மற்றும் தமிழ் இடதுசாரி ”இயக்கங்களைச்” சேர்ந்த புலம் பெயர்ந்தவர்களே பெரும்பான்மையினர்.

இவர்களின் சமவுரிமை இயக்கம் பற்றிய பார்வைகளும், கேள்விகளும் சந்தேகங்களும் ஒட்டுமொத்தமாக தவறானவை என்றோ - இக் கருத்துக்களை முன்வைத்தோரில் பெரும்பான்மையானவர்கள் இயக்கத்தின் எதிரிகள் என்றோ கூறிவிட்டுக் கடந்து போய் விட முடியாது. சமவுரிமை இயக்கத்தை ஆரம்பிப்பதற்கு அடிப்படையான சக்திகளாக அமைந்தவை முன்னிலை சோசலிசக் கட்சி, மற்றும் தெற்கின் கலைஞர்கள், புத்திசீவிகள், மாணவ இயக்கங்கள் மற்றும் தொழிற்சங்கங்களே. இவைகள் அனைத்தும் சிங்களமொழி பேசுபவர்களின் தலைமையையும், அரசியற் பாரம்பரியங்களையும் தம்மகத்தே கொண்டவை. குறிப்பாக, முன்னிலை சோசலிசக் கட்சிக்கென்றே ஒரு தனி வரலாற்றுப் பின்னணியுண்டு. ஆதலினால், அக்கட்சி சார்ந்து - அதை உருவாக்கியவர்களின் அரசியல் வரலாறு சார்ந்து தமிழ் அரசியற் பரப்பிலிருந்து சந்தேகங்களும் - கேள்விகளும் முன்வைக்கப்படுவதில் தவறேதுமில்லை. இனவாத யுத்தத்தால் பாரிய அழிவைச் சந்தித்தவொரு சமூகம் பெரும்பான்மைச் சிங்களவர்களை உள்ளடக்கிய ஒரு அமைப்பை இலகுவாக - கண்மூடித்தனமாக, ஏற்றுக்கொள்ளுமா என்ன ?

## சமவுரிமை இயக்கத்தின் பதில்கள்

ஆரம்பத்திற் கூறியது போல சமவுரிமை இயக்கத்தை ஆரம்பிப்பதற்கு முக்கிய சக்தியாக இயங்கியது முன்னிலை சோசலிசக் கட்சிதான். அதற்காக, சமவுரிமை இயக்கம், அதனுடைய முன்னணி அமைப்பு அல்ல!மக்கள் போராட்ட இயக்கம் என்ற இடதுசாரிகளின் ஐக்கிய ஒன்றியத்தில் பங்கெடுக்கும் தொழிற்சங்கங்கள், விவசாயிகள் - மீனவ சமாசங்கள், மாணவர் அமைப்புகள், கலைஞர்கள் , புத்திசீவிகள், இடதுசாரிக் குழுக்கள், மற்றும் வெளியிலிருந்து ஆதரவு வழங்கும் இடதுசாரிக்கட்சிகளின், இனவாத -மதவாத மற்றும் சமூக ஒடுக்குமுறைகளுக்கு எதிரான வெகுசன இயக்கம் தான் சமவுரிமை இயக்கம்.இதன் அடிப்படையில், முன்னிலை சோசலிசக் கட்சியின் சொந்த அரசியற்திட்ட உள்ளடக்கம், வேலைத்திட்டம், போராட்டத் தந்திரோபாயம் - உத்திகள் மற்றும் அதன் வரலாறு சார்ந்து சமவுரிமை இயக்கம் பதில் கூற முடியாது. உதாரணமாக, தேசிய இனப்பிரச்சனை அல்லது தேசியப் பிரச்சனை பற்றிய முன்னிலை சோசலிசக் கட்சியின் திட்டம் - மற்றும் நடைமுறைத் தந்திரோபயங்கள் பற்றி சமவுரிமை இயக்கத்தை நோக்கி கேள்விகள்- விமர்சனங்கள் எழுப்பப்படுகிறது. அத்துடன் தேசியப் பிரச்சனைக்கு சில குறிப்பிட்ட தீர்வுகளை அங்கீகரித்தால் தான், தாம் இணைந்து வேலைசெய்வோம் என்பது போன்ற நிபந்தனைகளும் முன்வைக்கப்படுகிறது.

தனித் தமிழீழம் தொடக்கம் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிப்போர், தற்கால அரசியற் சூழ்நிலை சார்ந்து அதனை தற்காலிகமாக மறுப்பவர்கள் தொடக்கம், இது பற்றி எந்தவித கருத்துமற்ற, இனவாதத்துக்கு எதிரான மனிதாபிமானிகள் வரையான- தேசியப் பிரச்சனை பற்றிய பலதரப்பட்ட கருத்துக்களைக் கொண்ட சமூகஅமைப்புகளையும் தனி நபர்களையும் உள்ளடக்கியது தான் சமவுரிமை இயக்கம். இந்நிலையில் எவ்வாறு தேசிய இனப்பிரச்சனை பற்றிய ஒரு கருத்தை மட்டும் அங்கீகரிக்க முடியும்? அல்லது தனது அங்கத்தவரான ஒரு அமைப்பின் ஒட்டுமொத்த அரசியல் திட்டத்தின் மீது அல்லது அதன் நடைமுறை மீது கேட்கப்படும் கேள்விகளுக்கும், வைக்கப்படும் விமர்சனங்களுக்கு எந்தவிதத்தில் பொறுப்பெடுத்துப் பதில் சொல்ல முடியும்?

> **…"சமத்துவமின்மையை நிர்மாணித்த மூலகாரணிகளை தகர்த்தெறியக்கூடிய புதிய சமூக முறையொன்றின் மூலம் மாத்திரமே ஒடுக்கப்பட்ட தேசிய இனங்களால் தமது உரிமைகளை உண்மையாகவே பெற்றுக்கொள்ள முடியும்."**

சமவுரிமை இயக்கம் இனவாத, மதவாத,சமூகவொடுக்குமுறைகளுக்கு எதிராகப் போராடும் மக்களையும், அமைப்புக்களையும் பரந்துபட்ட அளவில் அணிதிரட்டுவதற்காக கீழ் வருமாறு தனது திட்டத்தில் கூறுகிறது:

”அனைத்து ஒடுக்கப்பட்ட மக்களும் தமது வர்க்க உரிமைகளை வென்றுகொள்வதற்காக உண்மையாகவே ஒன்றிணைய வேண்டுமாயிருந்தால், அதன் இன்றியமையாத பகுதியாக முதலில் முதலாளித்துவ அரசாங்கத்தினால் இரண்டாம் நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கும் ஒடுக்கப்பட்ட தேசிய இனங்களுக்கு சம உரிமைகளைப் பெற்றெடுக்கும் போராட்டத்தை முன்னெடுக்க வேண்டும்.”

அதாவது இலங்கையில் வர்க்க விடுதலைப் போராட்டம் நடத்த வேண்டுமானால் அதற்கான முன் நிபந்தனைகளில் முக்கியமானது, ஒடுக்கப்பட்ட தேசிய இனங்களுக்களின் உரிமைக்கான போராட்டம் என்பதை வலியுறுத்துகிறது சமவுரிமை இயக்கம்.

இந்த வகையில், இன்று இலங்கையில் புரையோடியுள்ள பேரினவாதம் மற்றும் அதன் விளைவாய் உருவாகியுள்ள குறுந்தேசியவாதத்தை எதிர்ப்பது-, இன-மத ஒடுக்குமுறைகளுக்கு எதிராகப் போராடுவது, இன்றுள்ள அரசியற் சூழ்நிலைக்குள் ஒடுக்கப்பட்ட தேசிய இனங்களுக்கான சம உரிமைகளைப் பெறப்போராடுதல் என்ற ”குறுகிய” காலத் திட்டத்தை முன்வைக்கிறது.

அதேவேளை இக்குறுகிய காலத்திட்டத்துடன் மட்டும் நிறுத்திக் கொள்ளாமல் இடதுசக்திகளையும் அவர்களின் போராட்ட அபிலாசைகளையும் உள்ளடக்கும் நோக்கில் கீழ்வரும் வரைபை தனது திட்டத்தில் உள்ளடக்கியுள்ளது.

”(ஒடுக்கப்பட்ட தேசிய இனங்களுக்கான சம உரிமைப் போராட்டம்)....அந்தப் போராட்டம் தற்போதைய முதலாளித்துவ சமூக பொருளாதார முறையின் மூலம் மறுசீரமைப்பை பெற்றுக்கொள்வதற்கு மாத்திரம் வரையறுக்கப்படாத, மனித சமூகத்துக்குள் சமத்துவமின்மையை நிர்மாணித்ததும், மனிதனால் மனிதன் சுரண்டப்படுவதை அடிப்படையாகக் கொண்டதும், தனியார் சொத்துடைமையைக் கொண்டதுமான சமூகமுறையை ஒழித்துக்கட்டும் வரை நீடிக்கும் விரிவான போராட்டமாக இருக்க வேண்டும்.”

...”சமத்துவமின்மையை நிர்மாணித்த மூலகாரணிகளை தகர்த்தெறியக்கூடிய புதிய சமூக முறையொன்றின் மூலம் மாத்திரமே ஒடுக்கப்பட்ட தேசிய இனங்களால் தமது உரிமைகளை உண்மையாகவே பெற்றுக்கொள்ள முடியும்.”




இவ்வாறு பரந்துபட்ட முறையில் திட்டத்தை வகுத்திருப்பதனாலே, இலங்கையின் யாப்பில் சீர்திருத்தம் செய்து ஒடுக்கப்பட்ட தேசிய இனங்களின் அபிலாசையை தீர்க்கமுடியுமென நம்பும் சீர்திருத்தவாதிகள் தொடக்கம், தமிழ் தேசம் - அதன் சுயநிர்ணய உரிமை மற்றும் விடுதலை பற்றிக் கதைக்கும் இடதுசாரிகள் வரை சேர்ந்து செயற்பட முடிகிறது.

## மக்களின் தேவை நடைமுறை

தோழமை உணர்வுடன், நல்லெண்ண அடிப்படையில் கறாரான விமர்சனங்கள் முன்வைக்கப்படும் போது, அதை உள்வாங்க வேண்டியது மக்கள் நலன் சார்ந்து போராடும் அடிப்படைப் பண்புகளிலொன்று. ஆனால், வெறும் எழுத்து மூலமாகவே, விவாதங்களின் போதோ, கோட்பாடுகள் சார்ந்து பதிலளித்து விட்டுபோவது மட்டும் ஒரு அமைப்பின் மீது எழும் சந்தேகங்களைத் தீர்த்து விடுவதில்லை. இவ்வகைப் பதில்கள் பெரும்பாலும் ஒரு சமூகத்திலிருக்கும் புத்திசீவிகள் மற்றும் சமூக -சிந்தனை அக்கறை கொண்ட அறிவுசார் மேல்வர்க்கத்தையே சென்றடையும்.

அல்லது, பல பத்து வருடங்களாக இனவாத அரசியலுக்குத் துணை போனவர்கள், திடீரெனெ சமவுரிமை பற்றிக் கதைப்பதையும், இன ஐக்கியம் பற்றிக் உரக்கக் கூவுவதையும் இனவாதத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் ஏற்றுக் கொள்வதில்லை. அதேபோன்றே, புலிகளிலும் மற்றும் இயக்கங்களிலும் பங்கெடுத்து எல்லாம் தோல்வியைத் தழுவியபின் ”நாம் அன்று தேசியத்தைத் தவறாக விளங்கி விட்டோம்” என்றும் ”சுயநிர்ணய அடிபடையில் ஐக்கிய இலங்கைக்குள் தீர்வுதான் ஒரே வழி” எனவும் வாய்சவடால் விஞ்ஞாபனங்களை அள்ளி வீசுவோரையும் மக்கள் கணக்கில் எடுப்பதில்லை.

பரந்துபட்ட ஒடுக்குமுறையை நேரடியாக அனுபவிக்கும் மக்களைப் பொறுத்தளவில், ஒரு அமைப்பின் நடைமுறைச் செயற்பாடு மட்டுமே - நடைமுறைப் போராட்டம் மட்டுமே முக்கியமானதாகும். நடைமுறை மட்டுமே மக்களின் நம்பிக்கையை ஒரு விடுதலை அமைப்பின் மீது - மக்கள் போராட்ட அமைப்பின் மீது உருவாக்க வழிவகுக்கும்.

இந்தவகையில் சமவுரிமை இயக்கம் எல்லாவகைக் கேள்விகளுக்கும் எழுத்து மூலம் நேரடியாகப் பதில் கூறாவிட்டாலும், தனது நடைமுறை மூலம் - போராட்டங்கள் பிரச்சாரங்கள் மூலம் பதில் கூறிவருகிறது.

## சமவுரிமை இயக்கமும் அதன் போராட்டங்களும் - நடைமுறையும்

சமவுரிமை இயக்கம் ஆரம்பித்த காலம் தொடக்கம் இன்றுவரை இடைவிடாத அரசியல் - நடைமுறைச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. சமவுரிமை இயக்கத்தின் முக்கிய பங்காளியான முன்னிலை சோசலிசக் கட்சி, உட்கட்சி விவாதங்கள் காரணமாக சிலமாதங்கள் நடைமுறை வேலைகளை நிறுத்திய போதும் கூட சமவுரிமை இயக்கத்தின் வேலைகள் நிறுத்தப்படவில்லை. அதன் வேலைகள் மாணவர் அமைப்புகள், மீனவ - விவசாய தொழிலாளர் சமாசங்கள், அரசதுறைசார் ஊழியர் சங்கங்கள், கலைஞர்கள், கல்வியாளர்கள் - புத்திசீவிகள், இனவாதத்துக்கு எதிரான மத குருக்கள், மற்றும் இடதுசாரிக் குழுக்களால் முன்னெடுக்கப்பட்டது.

ஆரம்பத்தில், மிக முக்கியமாக இன மதவாதத்துக்கு எதிரான பிரசாரங்களும், வேலைகளும், கல்வி வட்டங்களும் சமவுரிமை இயக்கத்தில் பங்குகொள்ளும் அமைப்புகளின் உள்ளேயே முன்னெடுக்கப்பட்டது. இன்றும்

தொடர்ச்சியாக அது நடைபெற்று வருகிறது.

அடுத்ததாக சமவுரிமை இயக்கம், அதில் பங்குகொள்ளும் அமைப்புகளில் கட்டமைப்புகளின் ஊடாக இலங்கையின் தென்பகுதியில் இன-மதவாதத்துக்கு எதிரான போராட்டங்களையும், பிரசாரங்களையும் மேற்கொண்டு வருகிறது. இனவாத அடிப்படையில் பிளவுபட்டிருக்கும் இலங்கையின் மக்களுக்குள் இணைவு ஒன்றை உருவாக்குவதானால், அதற்கான வேலைகள்- போராட்டங்கள் தென்பகுதியில் பெரும்பான்மையாக வாழும் சிங்களமக்கள் மத்தியிலேயே ஆரம்பிக்கப்படல் வேண்டுமென்பதைச் சமவுரிமை இயக்கம் தனது வேலைத்திட்டமாகக் கொண்டுள்ளது இங்கு கவனிக்கத்தக்கது. அத்துடன் இனவாத ஒடுக்குமுறையும், சிங்கள மக்களிடையே திட்டமிட்ட முறையில் பரப்பப்பட்டுள்ள பேரினவாதச் சிந்தனைகளுமே, சக இனங்களுக்குள் உருவாகியுள்ள குறுந்தேசிய உணர்வுக்குக் காரணமாகும் என்பதையும் சமவுரிமை இயக்கம் வலியுறுத்தி வருகிறது.

# மட்டுமே

# ம்

இந்தவகையில், பொருளாதார-வாழ்வியல் தேவைகளுக்காக, வர்க்கவொடுக்குமுறைக்கெதிராக, தனியார் மயப்படுத்தல், இயற்கை வளங்களைப் பாதுக்காத்தல், கல்வி உரிமைக்காக, பெண்ணுரிமைக்காக போராடும் தென்னிலங்கை மக்கள் மத்தியில் - இந்தக் குறுகிய காலத்தில் சிறு அளவிலேனும் இனவாதம் களையப்பட்டு, அவர்கள் ஒடுக்கப்படும் சக தேசிய இன மக்களுக்காக - அவர்களில் வாழ்வியல் உரிமைக்காகக் குரல் கொடுக்கும் - போராடும் நிலை அரும்பியுள்ளது.

சில உதாரணங்கள் :

வடக்கு -கிழக்கு விவசாயிகள் பலபத்து வருடங்களாக தமது விவசாயத்துக்கென பிரத்தியேகமாக நெல் தொடக்கம் பலவகை மரக்கறி விதைகளை - நாற்றுக்களைச் சுயமாக உற்பத்தி செய்து வந்தனர். கடந்த 30 வருட யுத்தத்தாலும், புலம்பெயர்வாலும் தமிழ் பிராந்திய விவசாயம் அருகியதுடன்,விதைகளையும்-நாற்றுகளையும் சுயமாக உற்பத்தி செய்வதுவும் அழிந்து விட்டது. இந்தியா மற்றும் கிழக்காசிய நாடுகளிருந்து இறக்குமதி செய்யபட்ட விதைகளும்- நாற்றுக்களும், 2005 தொடக்கம் கிழக்கிலும், 2009- இக்குப் பின்னால் வடக்கிலும் அரசின் விவசாயக் கூட்டுத்தாபனம் ஊடாக பல்தேசியக் கம்பனிகளினாலும், அரச சார்பற்ற நிறுவனங்களாலும் வினியோகிக்கப்பட்டு வருகிறது. வடக்கைப் பொறுத்தமட்டில் இவ் விதைகளும், நாற்றுக்களும் காலநிலை மற்றும் மண்வளத்துக்கு ஒவ்வாதனவாக இருகின்றன. குறிப்பாக அதிக தண்ணீர் மற்றும் உரத் தேவை கொண்டனவாகவும் உள்ளன. கடந்த 3 வருடங்களாகத் தொடரும் வரட்சியை இவை தாக்குப்பிடிக்க முடியாதவை அதனால் விவசாயிகள் பாரிய நஷ்டமடைந்து வருகின்றனர். கொஞ்சம் கொஞ்சமாக துளிர்விட ஆரம்பித்த வடக்குக் - கிழக்கின் விவசாயம் மறுபடியும் கருகும் நிலையை அடைந்துள்ளது. இதற்கு மஹிந்த அரசோ அல்லது வடக்கு -கிழக்கு மாகாணங்களின் ஆட்சியில் உள்ளவர்களோ எது வித பொறுப்பும் எடுக்கத் தயாரில்லை. அத்துடன் விவசாயிகள் ஒன்றுதிரண்டு போராடும் நிலையிலும் இல்லை.







ஆனால், இதேவகைப் பிரச்சனையால் பாதிக்கப்பட்ட தென்னிலங்கை விவசாயிகள் அரசுக்கு எதிராகத் தம் கோரிக்கைகளை முன்வைத்துப் போராடுகின்றனர். சில கோரிக்கைகள் வெற்றியும் பெற்றுள்ளன. வழமையாகத் தமது பகுதிப் பிரச்சனைகளை முன்வைத்தே தெற்கில் போராட்டங்கள் நடப்பது வழக்கம். ஆனால், தற்போது சமவுரிமை இயக்கத்தில் இணைந்து செயற்படும் விவசாய போராட்ட அமைப்புகளால், வடக்குக் கிழக்கு விவசாய சகோதரர்களின் கோரிக்கைகளையும் முன்வைத்து, அவர்களையும் இணைத்துப் போராடும் நிலை உருவாகியுள்ளது.

இதேபோன்றதே மீனவ சமூகத்தின், எரிபொருள் மற்றும் மீன்பிடி உபகரணங்களுக்கான, மானியக் கோரிக்கைகளுக்கான போராட்டமும். வடக்கில் பாரம்பரிய மீன்பிடிமுறைகள் அழிவுற்றதனால், யுத்துக்குப் பின்னான காலத்தில் வடக்கு மீன்பிடியை அபிவிருத்தி செய்வதாகக் கூறி எரிபொருள் சார்ந்து இயங்கும் படகுகள் வடக்கில் இறக்கப்பட்டது. அத்துடன் கடல்வளத்துக்கு பாதிப்பை ஏற்படுத்தும் தங்கூசி வலைகளும் அறிமுகப்படுத்தப்பட்டது. தற்போது தங்கூசிவலைகள் தடைசெய்யப்பட்டுள்ளதுடன், இந்தியக் கடற்கொள்ளை மற்றும் எரிபொருள் விலையேற்றத்தால் மீனவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். பிடிக்கப்படும் மீன்கள் ாபெறப்படும் வருமானம் எரிபொருள் செலவுக்கே பற்றாத நிலையுள்ளது. இன்று ஆதிக்கத்திலுள்ள அரசுசார்ந்த அமைச்சரிடம் போய் நிலைமையைக் கூறி மானியம் கேட்டால் ”நீங்கள் வோட்டு போட்ட கூட்டமைப்பிடம் போய் கேளுங்கள்” எனவும், கூட்டமைப்பிடம் போய் கேட்டால் ”எமக்கான அதிகாரம் இன்னும் வழங்கப்படவில்லை” எனவும் பதில் கூறப்படுகிறது .

வடக்கு மீனவர்களின் இன்றைய நிலையை சில வருடங்களுக்கு முன்பேயே அனுபவிக்கத் தொடங்கிய, சிலாபம் தொடக்கம் காலி வரையான மீனவர்கள் அப்போதேயே மானியம் கோரிப் போராட்டங்களை ஆரம்பித்து விட்டனர். அப்போராட்டங்கள் ஆரம்பிக்கப்பட்ட போதே மாசி 15. 2012 இல் - அவற்றை நிறுத்தும் முகமாக இராணுவ அதிரடிப்படை போராட்டக்காரர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தது. எட்டுப் பேர் படுகாயம் அடைந்ததுடன், வர்ணகுலசூரிய அன்ரனி பெர்னாண்டோ என்ற இளம் மீனவத் தோழன் கொல்லப்பட்டார். ஆனால், போராட்டங்கள் தொடர்ந்தது. கடந்த வருடம் கார்த்திகை மாதத்திலிருந்து வடக்கு மீனவர்களின் கோரிக்கைகளும் உள்ளடங்கியதாகப் போராட்டங்கள் விரிவாக்கப்பட்டது. இவ்வருடம் (2014)ஆனி மாதம் நீர்கொழும்பில் அரசுக்கு எதிரான மாபெரும் ஆரப்பாட்டமும்,மீனவர்களின் சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டமும் ஆரம்பிக்கப்பட்டது. மஹிந்த அரசு மீனவர்களுடன் பேச்சுவார்த்தைக்கு உடன்பட்டது. அதில் அரசினால், விசேட ஏற்பாட்டின் அடிப்படையில் மேற்குக்கரை மீனவர்களுக்கு மட்டுமே மானியம் வழங்கும் தீர்வு முன்வைக்கப்பட்டது. அத்தீர்வை மறுத்த மீனவர்தலைமை, ”ஒட்டுமொத்த மீனவச்சமூகத்துக்குமான தீர்வின் அடிப்படையில் மட்டுமே பேச்சுவார்த்தை நடத்தப்படலாம். இன, பிரதேச அடிப்படையிலான தீர்வுக்குத் நாம் உடன்படமாட்டோம்” எனத் தெளிவாக அரசுக்குத் தெரிவித்தனர். வேறு வழியில்லாமல் அதையேற்றுக் கொண்ட அரசுக்கும், மீனவத்தலைமைக்கும் பேச்சுவார்த்தை நடைபெற்று உடன்பாடு காணப்பட்டது. அவ் உடன்பாடானது தெற்கில் மட்டுமல்ல, வடக்குக் கிழக்கிலுள்ள மீனவர்களும் மானியவிலையில் எரிபொரும் நிரப்பவும், வலைகள் மற்றும் உபகரணங்களைப் பெறவும் வகைசெய்தது.

விவசாயிகளின் போராட்டம் போல,மீனவர்களின் மானியக் கோரிக்கைக்கான போராட்டத்துக்கும் சமவுரிமை இயக்கத்துக்கும் நேரடியாக தொடர்பு இல்லாவிடினும், சமவுரிமை இயக்கத்தின் மீனவஅமைப்புகள் மற்றும் கரையோரச்சமூகம் சார்ந்த, இனவாதத்துக்கு எதிரான பிரச்சாரமும், திட்டமிட்ட வேலைமுறையும் மறைமுகமாக தெற்கு மீனவர்கள்- வடக்கு மீனவர்களின் கோரிக்கைக்காகவும் போராட வழிவகுத்தது.

இவ்வருடம் ஆனி மாதம் பலருக்கு ஜூலை 1983 ஐ நினைவூட்டிய மாதம். திட்டமிட்டவகையில், அரச முக்கியஸ்தர்களின் ஆதரவுடன் பொதுபலசேனாவால் பேருவளை மற்றும் அளுத்கம பிரதேசங்களில் வாழும் முஸ்லீம் சகோதர்களில் சொத்துக்கள் அழிக்கப்பட்டதுடன், முஸ்லீம்கள் மீது வன்முறையும் கொலைகளும் நிகழ்த்தப்பட்டது. அந்நிலையில் கொழும்புக்கும் பொதுபல சேனாவின் இன-மத வாதப்பயங்கரவாதம் பரவலாம் என்று மக்கள் அஞ்சிய நிலையில் இருந்தனர். எதிர்க்கட்சிகள,மற்றும் முஸ்லீம் மந்திரிகள் கூடப் பொதுபலசேனாவின் கொடுமைகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்க முக்கி முனகிய வேளையில், சமவுரிமை இயக்கம் பாரிய ஆர்ப்பாட்டத்தை கொழும்பு கோட்டே புகையிரத நிலையம் முன்பாக நடத்தியது. அப்போராட்டத்தில் தங்கள் மீது அடுத்த தாக்குதல் நடத்தப்படலாமென அஞ்சிய கொழும்பு மாளிக்காவத்த முஸ்லீம்கள் திரளாகப் பங்குகொண்டனர். விசேடமாக, கொழும்பு மத்திய பகுதியில் சிறுவியாபாரம் செய்வோர் பெருமளவில் அணிதிரண்டிருந்தனர். ஏன், ஒரு முஸ்லீம் அமைச்சர் மற்றும் தமிழ் அரசியல்வாதி சிவாஜிலிங்கம் கூட சமவுரிமை இயக்கத்தின் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்.

இதன் தொடர்ச்சியாக ஜூலை 1. தொடக்கம் 15 வரை (2014) ”மீண்டுமொரு கருப்பு ஜூலை வேண்டாம்” என்ற தொனிப்பொருளில் நாடுதழுவிய கையெழுத்துப் போராட்டமும், இனவாத -மதவாத சக்திகளுக்கு எதிரான பிரச்சாரத்தையும் மேற்கொண்டது சமவுரிமை இயக்கம். அத்துடன் ஜூலை 15 அன்று கொழும்பில் இனவாதம், மதவாதம் போன்ற ஒடுக்குமுறைகளை எதிர்த்து மாநாடொன்றை நடாத்தியது சமவுரிமை இயக்கம். இப்போராட்டங்கள் புலம் பெயர் தேசங்களிலும் சமவுரிமை இயக்கத்தின் கிளைகளால் முன்னெடுக்கப்பட்டது. முஸ்லீம்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டவுடன் மிகக்குறுகிய காலத்திலேயே ஆர்பாட்டத்தை ஏற்பாடு செய்வதற்கு ஏதுவாகவிருந்தது, பொதுபல சேனா போன்ற அமைப்புகளின் வன்முறை அரசியலைக் கையாள்வது எப்படி? என்ற தொனிப்பொருளில் 2013 தை மாதத்திலேயே கொழும்பில் நடத்திய மாநாடாகும். அம் மாநாடு தான் முஸ்லீம் மக்களின் சமூகத் தலைவர்களையும் மற்றும் புத்திசீவிகளையும் சமவுரிமை இயக்கத்துடன் இணைந்து செயற்பட வழிகோலியது.

அடுத்ததாக, கடந்த மாதம் - ஆவணி 2014 இல் சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில் தமிழ் மாணவர் ஒருவர் தாக்குதலுக்கு உள்ளானதுடன், தமிழ் மாணவ - மாணவிகளை எச்சரித்தும் இனவாத அரசசார்பு சக்திகளால் சுவரொட்டி ஓட்டப்பட்டது. இவ்விடயம் அறிந்த சில மணிநேரங்களிலேயே மாணவர்களும், பல்கலைக்கழகத்துக்கு அருகாமையில் உள்ள மக்களும் ஒன்றுதிரண்டு தமிழ் மாணவர்களுக்காக குரல் எழுப்பினர். அயல்கிராம சிங்கள, முஸ்லீம் சகோதரர்கள், ஆண்களும் பெண்களுமாக,தமிழ் மாணவர்கள் தங்கியிருந்த விடுதிகளுக்கு இரவு பகலாகக் காவல்காத்தனர். எதிர்பார்த்தது நடக்காத நிலையில், இனவாதசக்திகள் தாக்குதலுக்கு உள்ளான தமிழ் மாணவனைக் கைது செய்ததுடன், அவன் தன்னைத் தானே காயப்படுத்தியதாகவும், அவன் முன்னாள் புலி என்றும் மிரட்டி அவனிடம் ஒப்புதல் வாக்குமூலம் பெற்றனர்.

ஒரு தமிழ் மாணவன் தாக்கப்பட்டவுடன், தென்பகுதி சிங்கள மாணவர்கள் அமைதியாக இருந்து விடுவார்கள் என்றே அரசு நினைத்தது. ஆனால்,”கைது செய்யப்பட்ட சுதர்சனை உடனடியாக விடுதலை செய்யாவிடின், அனைத்துப் பல்கலைக்கழக மாணவர்களையும் ஒன்றுதிரட்டி நாடளாவிய ரீதியில் எதிர்வரும் சில தினங்களுக்குள் பாரிய ஆர்ப்பாட்டங்களை நடத்துவோம்” என அனைத்துப் பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம் அறிவித்தது. இதன் பயனாய் தமிழ் மாணவர் விடுதலை செய்யப்பட்டார். இந்நிகழ்வும் கூட சமவுரிமை இயக்கத்தின் இனவாதத்துக்கு எதிரான வேலைகளுக்குக் கிடைத்த சிறு வெற்றியே. காரணம் சமவுரிமை இயக்கத்தின் முதுகெலும்பாக இயங்குவது மாணவ - இளஞர் சமூதாயமே.

**“ஒரு தமிழ் மாணவன் தாக்கப்பட்டவுடன், தென்பகுதி சிங்கள மாணவர்கள் அமைதியாக இருந்து விடுவார்கள் என்றே அரசு நினைத்தது. ஆனால்,"கைது செய்யப்பட்ட சுதர்சனை உடனடியாக விடுதலை செய்யாவிடின், அனைத்துப் பல்கலைக்கழக மாணவர்களையும் ஒன்றுதிரட்டி நாடளாவிய ரீதியில் எதிர்வரும் சில தினங்களுக்குள் பாரிய ஆர்ப்பாட்டங்களை நடத்துவோம்" என அனைத்துப் பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம் அறிவித்தது.”**

நிறைவாக

சிங்கள, தமிழ், முஸ்லிம் ஒடுக்கப்பட்ட மக்களின் சுய ஒன்றிணைவைத் தவிர வேறு எவ்விதத்திலும் தேசியப் இனப் பிரச்சினைக்கு தீர்வைத் தேட முடியாது. பிரச்சினைக்கான பொறுப்பை பிரபாகரன் மீதோ அல்லது அவ்வாறான தலைவர்களின் மீதோ சுமத்திவிட்டுத்,தனது இருப்பை உறுதியாக்க முயற்சி செய்யும் தற்போதைய ராஜபக்ஸ ஆட்சியின் இனவாத அரசியல் நோக்கத்தைப் போன்றே- அதற்கு எதிர்வினையான குறுந்தேசியவாதத்தை விதைத்து, தமது அரசியல் அபிலாஷைகளை பூர்த்தி செய்து கொள்ளும் தமிழ் இனவாத பிரபுத்துவ நோக்கத்தையும், மக்களின் ஒன்றிணைவின் முலமே தோற்கடிக்க முடியும்.

சமவுரிமை இயக்கத்தின் வயது இரண்டு மட்டுமே. ஒரு அரசியல் போராட்ட இயக்க வரலாற்றில் இரண்டு வருடங்களும், பெறப்பட்ட சிறு வெற்றிகளும் ஒரு பொருட்டான விடயமல்ல. ஆனால் கடந்து வந்த பாதை ஒரு வீரியமான அமைப்பாக சமவுரிமை இயக்கம் வளர வகை செய்துள்ளது. இந்நிலையைச் சரியாகப் பயன்படுத்தி, இனங்களுக்கு இடையிலான இணைவையும் -சகோதரத்துவத்தையும் வளர்த்தெடுக்கும் விதமாக சமவுரிமை இயக்கத்தில் பங்கெடுக்கும் அனைவரும் தீவிரமாக உழைக்க வேண்டும்.

# கோட்டாபய எதற்கு தயாராகிறார்?





அமெரிக்காவின் Centre for Complex Operation என்ற நிறுவனத்தால் PRISM என்ற பெயரில் சஞ்சிகையொன்று வெளியிடப்படுகிறது. இலங்கை பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ இந்த சஞ்சிகையின் நான்காவது வெளியீட்டில் “இலங்கையின் தேசிய பாதுகாப்பு” என்ற பெயரில் ஒரு கட்டுரை எழுதியுள்ளார். ராஜபக்ஷ சர்வாதிகாரத்தின் அடக்குமுறை இயந்திரத்தின் வழிகாட்டியான இவர் எதிர்கால இலங்கையை அமைப்பது குறித்து அவதானிக்கப்பட வேண்டிய சைகையை காட்டியுள்ளார்.

கோட்டாபயவின் கூற்றுப்படி எல்.ரி.ரி.ஈஇயக்கம் முற்றாக அழிக்கப்பட்டாலும் இலங்கையின் தேசிய பாதுகாப்புக்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல் நீங்கியபாடில்லை. இப் “புதிய” அச்சுறுத்தல்களாக அவர் எதனை அறிந்திருக்கிறார்? டுவுவுு மீண்டும் தலையெடுப்பதற்கான சாத்தியம், வேறு தீவிரவாத இயக்கங்களின் எழுச்சி, இனவாத வன்முறை, திட்டமிட்ட குற்றச் செயல்கள், வெளிநாட்டுத் தலையீடுகள், கடல் எல்லைகளுக்கு ஏற்படக்கூடிய அச்சுறுத்தல்கள்மற்றும் முகநூல் (**facebool**) போன்ற சமூக வலைத்தளங்களால் ஏற்படக்கூடிய “அச்சுறுத்தல்கள்” போன்றவற்றை புதிய சவால்களாக அவர் அறிந்துள்ளார். “வேறு தீவிரவாத குழுக்கள்’ என்ற வகையில் இரு அமைப்புகளை உள்ளடக்கியுள்ளார். ஒன்று உலக இஸ்லாமிய போராளிகள் அமைப்போடு உறவு வைத்திருக்கும் தேசிய இஸ்லாமிய அமைப்புகளின் தோற்றம். இரண்டாவது, அவருக்கு ஏற்ப,” பழைய கிளர்ச்சிகளோடு சம்பந்தப்பட்ட’ தீவிர இடதுசாரிய குழுக்களின் வளர்ச்சியாகும். இத்தீவிர இடதுசாரிய பிரிவுகள் பல்கலைக்கழக

> **“ பொது மக்களின் அடிப்படை ஜனநாயக உரிமைகள் மீது கை வைக்கும் இந்நடவடிக்கையை முழு பலத்தோடு எதிர்க்க வேண்டும். ”**

> **“ வழிநடத்துவதாகவும் அவர்கள் எஞ்சிய LTTE பிரிவுகளோடு தொடர்புகளை பேணுவதாகவும் எழுதும் கோட்டபாய அது தேசியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாகக் கூடுமெனவும் கூறுகிறார். பல்கலைக்கழக மாணவர்களின் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை வழிநடத்தும் தீவிர இடதுசாரிகளைப் பற்றி எழுதும்போது முன்னிலை சோஷ லிஸக் கட்சியின் பக்கம் விரலை நீட்டுவது தெரிகிறது. ”**

மாணவர்களை தூண்டி எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை வழிநடத்துவதாகவும் அவர்கள் எஞ்சிய LTTE பிரிவுகளோடு தொடர்புகளை பேணுவதாகவும் எழுதும் கோட்டபாய அது தேசியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாகக் கூடுமெனவும் கூறுகிறார். பல்கலைக்கழக மாணவர்களின் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை வழிநடத்தும் தீவிர இடதுசாரிகளைப் பற்றி எழுதும்போது முன்னிலை சோஷலிஸக் கட்சியின் பக்கம் விரலை நீட்டுவது தெரிகிறது.

“தேசிய பாதுகாப்பின்” மீது தொடுக்கப்படும் அச்சுறுத்தலென கூறப்படும் இப்புதிய சவால் சம்பந்தமாக இவ் இடதுசாரி அதிகாரி முன்வைக்கும் தீர்வு என்ன? அதற்கு தீர்வாக புலனாய்வுத் துறையை (அரச உளவுத்துறை) மேலும் விஸ்தரிப்பதே என அவர் எழுதுகிறார். விரைவில் அறிமுகப்படுத்தப்படவுள்ள இலத்திரனியல் அடையாள அட்டை இந்நடவடிக்கையின் ஒரு அங்கம் என அவர் கூறுகிறார். இவ் இலத்திரனியல் அடையாள அட்டையில் நபர்களின் வாழ்க்கை சம்பந்தப்பட்ட தரவுகள் பதிவு செய்யப்படுவதோடு, அந்தந்த பிரஜைகளைப் பற்றிய முழுமையான தரவுக் களஞ்சியத்தை கண்காணிப்பதற்கான வாய்ப்பு அரசாங்கத்திற்கு கிடைக்கிறது.

சிலந்தி விரித்துள்ள வலை தெரிகிறது. இலங்கை “தேசிய பாதுகாப்பு ராச்சியமாக’ தன்னை வடிவமைத்துக் கொண்டிருக்கிறது. அமெரிக்க ஜனாதிபதி ஹரி ட்ரூமன் 1947ல் நிறைவேற்றிக் கொண்ட தேசிய பாதுகாப்பு சட்டமூலத்தின் பின்னர் உருவாக்கப்பட்ட புதிய அரசியல் அமைப்பு” தேசிய பாதுகாப்பு ராச்சியம்’ என அழைக்கப்பட்டது. **CIA** உள்ளிட்ட பாதுகாப்பு படிநிலைகள் இந்த அரசியல் அமைப்பில் முக்கிய பாத்திரத்தை வகித்தன. உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு எதிரிகளிடமிருந்து அமெரிக்க மக்களை “பாதுகாத்தல்” என்ற பெயரில் இந்த பாதுகாப்பு பிரிவுகளுக்கு பெருமளவு அதிகாரங்கள் வழங்கப்பட்டன. 2011 செப்டம்பர் தாக்குதலுக்குப் பின்னர் அமெரிக்காவின் இப்போக்கு மேலும் தீவிரமடைந்தது. மக்களின் நாளாந்த நடவடிக்கைகள்கூட அரச கண்காணிப்புக்கு உட்படும் விதத்திலான வெகுஜன கண்காணிப்பு தொகுதியொன்று (Mass Surveillance) அமெரிக்க அரசால் செயற்படுத்தப்பட்டதாக சமீபத்தில் எட்வர்ட ஸ்னோடனால் வெளிச்சத்திற்கு கொண்டுவரப்பட்டது. அந்த கண்காணிப்பு எவ்வளவு தீவிரமாக செயற்பட்டுள்ளது என்பது இதன் மூலம் தெரிகிறது. ஸ்டாலின்வாதத்தின் கீழ் ரஸ்யாவில் உருவாகியிருந்த பொலிஸ் ராச்சியத்தை விமர்சிப்பதற்காக ஜோர்ஜ் ஓவல் பிக் பிரதர் அனைத்து விடயங்களையும் நோட்டமிடும் ஓசினியா என்ற கற்பனை ராச்சியத்தைப் பற்றிய நாவலை எழுதினர். பசுமை யுத்த காலத்தில் லிபரல் கருத்துடையவர்கள் ரஸ்யாவிற்கு எதிராக அந்த நாவலை தூக்கிப் பிடித்தனர். ஓவலுடைய அந்த விமர்சனம் எப்போதையும் விட இன்றைய லிபரல்வாத அமெரிக்காவிற்கு சாலப் பொருந்துகிறது.

தேசிய பாதுகாப்பிற்கு பல அச்சுறுத்தல்கள் இருப்பதாகக் கூறி ராஜபக்ஷ சர்வாதிகாரம், கடுமையான ராணுவமயத்தைக் கொண்டதும், மனிதர்களின் வாழ்க்கை நடவடிக்கைகளை நோட்டமிடும் அதிகாரத்தை தமது கையில் எடுத்துக் கொண்டதுமான அரச வியூகத்தை அமைக்க முயல்வது அமெரிக்காவைப் பின்பற்றித்தான். சமூக வலைத்தளங்கள் கூட தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலென கருதி செயற்படுவதன் ஊடாக சர்வாதிகாரம் எந்தளவு வெறித்தனத்தோடு சிந்திக்கிறது என்பது தெரிகிறது. இவர்களின் கண்ணோட்டத்தின்படி பிரஜைகள் என்போர் வெறும் பகடைக் காய்கள்தான். பெயரளவில்தான் அவர்கள் “சுதந்திர ஜனநாயக” சமூகத்தின் பிரஜைகள். அரசாங்கம் போட்டிருக்கும் சட்டத்தின் எல்லைக்குள்ளிருந்தே அவர்கள் அச் சுதந்திரத்தை அனுபவிக்க முடியும்.

சமூகம் என்ற வகையில் நாம் பயணிப்பது இந்த பயங்கர திசையை நோக்கித்தான் என்பதை,ஆசியாவின் ஆச்சரியத்தை துதிபாடிக் கொண்டு நவீனமயமாக்கப்படும் கொழும்பு நகர மின்னும் நடைபாதைகளில் “ஜொகிங்” செல்லும் கூழ்முட்டைகளான மத்தியவர்க்கத்திற்கு இது புரிவதில்லை. போலி அபிவிருத்தி மற்றும் தேசிய பாதுகாப்புக்காக என்ற போர்வையில் எமது சுதந்திரத்தை எமது வாழ்க்கையை கைவிடுமாறு அரசு எமக்கு ஆணையிடுகிறது. பொது மக்களின் அடிப்படை ஜனநாயக உரிமைகள் மீது கை வைக்கும் இந்நடவடிக்கையை முழு பலத்தோடு எதிர்க்க வேண்டும். இந்தப் போலி இலத்திரனியல் அடையாள அட்டைச் சட்டத்தை உரசிப்பார்க்கும் சந்தர்ப்பமாக இந்த எதிர்ப்பு அமைய வேண்டும்.

# தாம் வாழும் மண்ணுடன் தொடர்பற்ற மலையக மக்களின் எதிர்காலம்



மலையக மக்களின் சொந்த நிலம் மற்றும் வீட்டுரிமைக்கான கோரிக்கையானது தனித்துவமானவை. இலங்கையில் எந்த தேசிய இனத்துக்கும் இல்லாத சிறப்புக் கோரிக்கையும் கூட.

மலையக மக்களை ஏமாற்றுகின்ற கவர்ச்சிகரமான பிழைப்புவாதக் கோரிக்கையாக இது குறுகிவிடாமல் இருக்க வேண்டுமானால், நிலக் கோரிக்கையானது நவதாராள பொருளாதார அமைப்பை எதிர்த்து போராடுவதாக அமையவேண்டும். இது வெறும் "வாக்கு வங்கி" அடிப்படையாகக் கொண்ட பிழைப்புவாத தேர்தல் கோசமாவதை எதிர்த்தும், தன் இனத்தை மட்டும் சார்ந்து முன்வைப்பதை எதிர்த்தும் இது முன்வைக்கப்பட வேண்டும். அரசுடன் பேரம் பேசுவதற்குள் இதை முடக்காது, இதற்காக மக்களை அணிதிரட்டி போராடுவதாகவும், அனைத்து மக்களினதும் நிலப் போராட்டங்களுடன் இது இணைக்கப்பட வேண்டும்.

மலையக மக்கள் வரலாற்று ரீதியாக தனிமைப்படுத்தப்பட்ட அதே அரசியல் சூழலில், தனித்து போராட அழைக்கின்ற அனைத்தும் படுபிற்போக்கானது. இது எதிர்நிலை அரசியல் விளைவுகளையே ஏற்படுத்தும். இதற்கு எதிரான அரசியல் விழிப்புணர்வு இன்று அவசியமானது.

பிரிட்டிஸ் காலனித்துவவாதிகள் தங்கள் வர்த்தக நோக்குக்காக அடிமைகளாக இந்தியாவில் இருந்து இலங்கை கொண்டுவரப்பட்டவர்களே மலையக மக்கள். அவர்களின் வறுமையையும், அவர்கள் மேலான சாதி ஒடுக்குமுறையையும் பயன்படுத்திக் கொண்ட காலனியவாதிகள், வாழ்வு பற்றி புதிய நம்பிக்கை ஊட்டி ஆசை காட்டப்பட்டு ஏமாற்றப்பட்டு வஞ்சிக்கப்பட்ட வரலாற்று வழியிலேயே இலங்கை மலையக மக்களின் வாழ்க்கை ஆரம்பிக்கின்றது.

மக்கள் வாழாத, மலைகளில் இருந்த, அடர் காடுகளை பண்படுத்துவதில் தொடங்கியது, மலையக மக்களின் அடிமைக்குரிய வாழ்வு. அவர்களின் உழைப்பைச் சுரண்டும் வண்ணம் அடிமையாக்கப்பட்டவர்கள், இயற்கையைக் கூட எதிர்கொள்ள முடியாது கொத்துக் கொத்தாக மடிந்தனர். அதே நேரம் இலங்கையில் வாழ்ந்த பிற மக்களுடன் தொடர்பற்ற வகையில் தனிமைப்படுத்தப்பட்ட சூழலில், உழைப்புச் சுரண்டப்பட்டது.

காலனியவாதிகள் தங்கள் வர்த்தக நோக்கிலான கோப்பி - தேயிலை - இறப்பர் உற்பத்தி, மலையக மக்கள் உழைப்பில் திரண்ட போது பிரிட்டிஸ் சாம்ராச்சியம் கொழுத்தது. இந்த செல்வத்தை கடத்திச் செல்ல இந்த அடிமைகளை கொண்டு அமைத்த நவீன வீதிகளே, இலங்கையில் தேசிய இனங்கள் தோன்றுவதற்குரிய பாதைகளாகவும் மாறியது.

பிற இன மக்களை ஒருங்கிணைத்ததும், பிரிட்டிஸ்சுக்கு செல்வத்தையே அள்ளிக் கொடுத்த மலையக மக்களின் உழைப்பு, அவர்களுக்கு அடிமை வாழ்வையே பரிசளித்தது. அதே நேரம் மலையக மக்கள் தங்கள் மீதான சுரண்டலை எதிர்த்து நடத்திய போராட்டங்கள், தொழிற்சங்க போராட்டமாக மாறி அவர்களுக்கு தொழிலாளி வர்க்க அடையாளத்தைக் கொடுத்தது.

இலங்கை பிற மக்கள், பிரதேசரீதியாகவும் சாதிரீதியாகவும் தம்மை வேறுபடுத்திய சூழலில், அவர்களை அடக்கியாள மொழிரீதியாக அடையாளத்தை பிரிட்டிஸ் காலனியவாதிகள் கொடுத்தனர். இதற்கு நிலப்பிரபுத்துவ சக்திகள் தலைமை கொடுத்த அதேநேரம், அவர்கள் மலையக மக்களை இழிவானவராகவும் சுரண்டலுக்குரிய அடிமையாகவும் நடத்தி தம்மளவில் தனிமைப்படுத்தினர்.

இந்த வகையில் மலையக மக்கள் பெருந்தோட்டக் "கூலிகளாகவே" நூற்றாண்டு கடந்து வாழ்கின்ற எதார்த்தமும், நிலவுரிமையில் இருந்து பிரிக்கப்பட்டு தனிமைப்படுத்தப்பட்ட சூழலிலான "லய" வாழ்க்கை முறை, அவர்கள் தேசிய இனமாக வளருவதற்குரிய வரலாற்றுச் சூழலை உருவாக்கவில்லை.

இலங்கையில் வாழும் தேசிய இனங்களுக்குள் மலையக மக்கள் நிலத்துடன் பிணைக்கப்படாமையானது, தன்னை ஒரு தேசிய இனமாக உணர்வதை தடுத்து நிறுத்தியது. தொடர்ந்து பிரஜாவுரிமை பறிக்கப்பட்டு வாக்குரிமை மறுக்கப்பட்டமையானது, தங்களை இலங்கைப் பிரஜையாக உணர்வதைக் கூட இல்லாதாக்கியது. பிரஜாவுரிமை பறிக்கப்பட்டு இந்திய பிரஜாவுரிமை பெறுமாறு நிர்ப்பந்தித்தமையானது, தங்கள் நிலையற்ற தன்மையால் தங்களை தேசிய இனமாக உணர்வதை கூட இல்லாதாக்கியது.

குறைந்த கூலி, வருமானத்துக்கு உத்தரவாதமற்ற சுரண்டல் முறை, எங்கே வாழ்வது என்ற முடிவை எடுக்க முடியாத அரசின் இனவாதக் கொள்கை ... மொத்தத்தில் தம்மைப் பற்றியும், தம் சமூகம் பற்றியும் முடிவு எடுக்க முடியாத அடிமைகளாகவே வாழ அனுமதிக்கப்பட்டனர்.

பெருந்தோட்ட தொழிலாளர் வர்க்கமாக அணிதிரட்டிய போராட்டமே, அவர்களுக்கான சமூக அடையாளத்தையும், ஒருங்கிணைந்த சமூகத் தன்மையையும் கொடுத்தது. இது தொடர்ந்து நீடிக்க முடியாத வகையில்

1.பிரஜாவுரிமை பறிக்கப்பட்டு பிற சமூகத்தில் இருந்து தனிமைப்படுத்தப்பட்டனர்.

> **“ மலையக மக்களை ஏமாற்றுகின்ற கவர்ச்சிகரமான பிழைப்புவாதக் கோரிக்கையாக இது குறுகிவிடாமல் இருக்க வேண்டுமானால், நிலக் கோரிக்கையானது நவதாராள பொருளாதார அமைப்பை எதிர்த்து போராடுவதாக அமையவேண்டும். இது வெறும் "வாக்கு வங்கி" அடிப்படையாகக் கொண்ட பிழைப்புவாத தேர்தல் கோசமாவதை எதிர்த்தும், தன் இனத்தை மட்டும் சார்ந்து முன்வைப்பதை எதிர்த்தும் இது முன்வைக்கப்பட வேண்டும். ”**

2.வாக்குரிமை பறிக்கப்பட்ட அதே வரலாற்றுச் சூழலுடன், வாக்கு அரசியலை வர்க்க அரசியலாக்கி அரசியல் திரிபுவாதம் மேலெழுந்து வந்தது. மலையக மக்களை தங்கள் பிழைப்புவாத வாக்கு அரசியலுக்கு உதவ முடியாதவராக, உழைக்கும் வர்க்க அடையாளத்தை அவர்கள் இழக்கவேண்டியதாயிற்று

3.வரையறுத்த பிரஜாவுரிமை மூலம் நியமன பிரதிநிதித்துவமும், தொடர்ந்து பிழைப்புவாதிகளை தெரிவு செய்கின்ற தேர்தல் முறை மூலம், மலையக மக்களின் தொழிலாளர் வர்க்க அடையாளத்தையே இல்லாதாக்கியது.

4.தனிமைப்படுத்தப்பட்ட "கூலிகள்" அடையாளமும், நிலத்துடன் தொடர்பற்ற மற்றும் தொடர்ச்சியற்ற தன்மை, அவர்களின் பொது மொழித் தனி அடையாளத்தைக் கொடுத்த போது தேசிய இனமாக வளர்வதற்குரிய தன்மையை தடுத்து நிறுத்தியது.

1948 பின் மலையக மக்கள் தங்கள் உழைக்கும் வர்க்க அடையாளத்தை இழந்த அதே நேரம், தம்மை தேசிய இனமாக உணரக் கூடியவராக அவர்கள் வாழ்க்கை அமையவில்லை.

சிங்கள - தமிழ் - முஸ்லிம் மக்கள் நிலத்துடன் பிணைக்கப்பட்டு ஒரு தேசிய இனமாக உணருகின்ற அந்த நிலைக்குள், மலையக மக்கள் வந்தடையவில்லை. வாக்கு அரசியலை மையப்படுத்தி அரசியல் எல்லையைத் தாண்டி, தேசிய உணர்வைப் பெற்று விடவில்லை.

சிங்கள- தமிழ் தேசிய இனங்கள் தங்களை தேசமாக உணரும் தேசியவுணர்வுக்கும், முஸ்லிம் மக்கள் இனம் சார்ந்த இனவுணர்வுக்கும், மலையக மக்கள் வாக்குரிமை சார்ந்த மொழிசார் உணர்வுக்குமான வேறுபாடு, இன்று உழைக்கும் வர்க்கங்கள் தங்கள் கோரிக்கையை வென்று எடுக்கும் வெவ்வேறான வரலாற்றுக் கட்டத்தை கருத்தில் எடுக்கக் கோருகின்றது.

இன்று உழைக்கும் மக்களிடமிருந்து நிலத்தைக் கைப்பற்றும் மூலதனச் செயற்பாடுகளே, அரசின் பொதுக் கொள்கையாக இருக்கின்றது. மக்களின் சொத்துகளைக் கைப்பற்றி அவர்களை கூலிகளாக மாற்றுவதன் மூலம், பெரு மூலதனத்தின் நலன்களை அடிப்படையாகக் கொண்ட உற்பத்தி கொள்கையே நவதாராள பொருளாதாரமாகும்.

மக்களுக்கு கடன்களை வழங்குவதன் மூலம் மக்களின் சொத்துக்களை கைப்பற்றும் கொள்கையே, நாட்டின் பொருளாதார வளர்ச்சியாக முன்தள்ளப்படுகின்றது. இந்த வகையில்

1.உற்பத்திக் கடன்கள் பெரும்பாலும் நவீன உபகரணங்களை கொண்டதான உற்பத்திக்கான கடனாகும். இந்த பின்னணியில் தேவைக்கு மிஞ்சியதும், வளர்ச்சிக்கு மிஞ்சிய நவீன உபகரணங்களையும் உற்பத்தியில் குவிப்பதன் மூலம், கடன் மூலமான நவீன முதலீட்டை திணித்து தேசிய உற்பத்திகளை அழித்து விடுகின்றனர்.

2.அவசியமற்ற ஆடம்பர நுகர்வுக் கடன்கள் மூலம் பொருளை வாங்கத் தூண்டி, அதைக் கட்ட முடியாத சூழலை உருவாக்கி, மக்களின் அசையாச் சொத்துகளைக் கைப்பற்றுகின்றனர்.

சிறு நிலம் சார்ந்த உற்பத்தி மற்றும் மத்தியதர வர்க்க வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்ட, சொந்த நிலம் - வீடுகளைக் கொண்ட மக்களின் வாழ்க்கையை அழித்துவிடவே கடன்கள் வாரி வழங்கப்படுகின்றது. கடன் வாங்கியவன் கடன் கட்ட முடியாது தனது நிலம் மற்றும் வீட்டை இழத்தல் இன்றைய பொருளாதார வளர்ச்சியாக காட்டி முன்னிறுத்தப்படுகின்றது.

இந்த நவகாலனிய எதார்த்தத்தை கருத்தில் கொண்டு மலையக மக்களுக்கான காணி மற்றும் வீட்டுரிமைக்கான கோரிக்கையை முன்வைக்கத் தவறின், பிழைப்புவாதிகளின் கவர்ச்சியான கோசமாகிவிடும்.

பெருந்தோட்ட நிலத்தை "கூலிகளுக்கு" சொந்தமாக்கும் கோரிக்கை, அதாவது பெருந்தோட்ட முதலாளிகளிடமிருந்து பெற்று கொடுக்க மூலதனம் அனுமதிக்காது. அரசோ இன்று அடுக்குமாடி காலனிகள் மூலம், மக்களை வெளியேற்ற விரும்புகின்ற கொள்கையையே நாடு முழுக்க இன்று கையாளுகின்றது. அதை அனுசரித்து, அதற்குள் மலையகமக்கள் கோரிக்கையை முன்னெடுக்கக் கூடாது.

நிலக் கோரிக்கையானது தனித்து மலையக மக்களுடன் முடங்கியதாக முன்வைக்கும் போது, இன்றைய நவதாராள போக்கை நிராகரித்து விடுவதன் மூலம் வெற்றி பெற முடியாது. நிலத்தை பறிகொடுக்கும் அனைத்து மக்களுடன் ஒன்றிணைந்து போராடுவதன் மூலமே, மலையக மக்கள் நிலத்தை பெற முடியும் என்ற எதார்த்தத்தை தாண்டி, ஆளும் வர்க்கங்களின் "வாக்கு வங்கி" பேரங்கள் மூலம் நிலத்தை அடைய முடியும் என்பது பிழைப்புவாதிகளின் சொந்த பித்தலாட்டமாகும்.

நிலம் சார்ந்த போராட்டம் சகல இலங்கை மக்களினதும் பொதுப்பிரச்சனை. அதற்குள் மலையக மக்களின் நிலக்கோரிக்கை தனித்துவமானதாக கொண்டு முன்னெடுப்பதன் மூலம், அரசையும் அதன் நவதாராள கொள்கையையும் முறியடித்து, அனைத்து மக்களினதும் உரிமையைப் பாதுகாக்கவும் அதை வென்று எடுக்கவும் முடியும். இது தான் இன்றைய எதார்த்தம்.



# தமிழனை தமிழன் ஆண்டால் கூவத்தில் தேனும் பாலும் பாய்ந்து ஓடும்!!!

> **இனவாதிகள் என்றைக்கும் அதிகாரத்துடனும், முதலாளிகளுடனும் சேர்ந்தே நிற்பார்கள். ஜெயலலிதா, பச்சைமுத்து, அரசியல்மாமா நடராசன், கனிமக் கொள்ளையன் வைகுந்தராசன், லைக்கா, லிபரா போன்ற கொள்ளைத்தமிழர்கள் தான் இவர்களைப் போன்ற இனவாதிகளின் நண்பர்களாக இருக்க முடியும்.**

தேசபக்தி என்பது அயோக்கியர்களினது கடைசிப் புகலிடம் என்று சாமுவேல் ஜோன்சன் ஆயிரத்து எழுநூறுகளில் சொன்னார். சீமான் போன்ற தேசவெறி, இனவெறி யோக்கியர்கள் அதை இன்று வரை நிருபித்து காட்டுகிறார்கள்.

கிட்லர், முசோலினி, சேர்ச்சில், மார்க்கிரட் தட்ச்சர்,ஜோர்ஜ் புஷ், ரொனி பிளேயர், மகிந்த ராஜபக்சா, நரேந்திர மோடி என்று அத்தனை உலகமகா அயோக்கியர்களும் தேசபக்தி வேசம் கட்டிய அயோக்கியர்கள் தான். தமது சொந்தநாட்டு மக்களையே கொல்வதற்கும், நாட்டின் வளங்களை கொள்ளை அடிப்பதற்கும் கொஞ்சம் கூட தயங்காதவர்கள் இவர்கள். இந்த அயோக்கியர்கள் மற்ற நாடுகளின் ஆட்சியாளர்களுடனும், முதலாளிகளுடனும் கூடிக்குலாவுவார்கள். ஆனால் நாடு, இனம், மொழி, மதம், சாதி என்று வீரவசனம் பேசி ஏழைமக்களை பிரித்து ஒருவரோடு ஒருவரை மோத வைப்பார்கள்.

சீமான் போன்றவர்கள் பேசும் தமிழின வெறி அரசியல் எவ்வளவு பொய்யானது, ஆபத்தானது என்று எடுத்துக் காட்டுவதற்கு வேறெங்கும் போகத் தேவையில்லை. இலங்கைத் தமிழ்மக்களின் அவலம் நிறைந்த வாழ்க்கை வாழும் சாட்சியமாக இருக்கிறது. கரிய இரவுகள் நீண்டு கொண்டே போகின்றன. பாதி இரவில் எழுந்து மண்ணில் புதைந்து போன மனிதர்களை தேடுகிறார்கள். வானம் கிழிந்து பெய்த குண்டுமழையின் எதிரொலிகள் இன்னும் கேட்டுக் கொண்டு தான் இருக்கின்றன. ஒரு சிறுபான்மை இனம் தன்னுடைய பலம் பொருந்திய எதிரிக்கு எதிராக போராடும் போது தன்னைப் போலவே ஒடுக்கப்படுகின்ற எல்லா மக்களையும் இணைத்துக் கொண்டு போராடாமல் விட்டால் தனிமைப்பட்டு தோல்வி அடைவார்கள் என்பதற்கு சாட்சியமாக இலங்கைத் தமிழ்மக்களின் கண்ணீரும், செந்நீரும் கரையாமல் இருக்கின்றன. நான் தமிழன், நீ சிங்களவன், முஸ்லீம் என்று பிரிந்தது சிங்கள பெருந்தேசியவாதிகளின் கொலைக்களங்களிற்கு தமிழ்மக்களை இழுத்துச் சென்று பலியிட வைத்தது என்பதற்கு வன்னி மண்ணில் மடிந்த மக்களின் புதைகுழிகள் சாட்சியமாக இருக்கின்றன.

வாழ்க!!,ஒழிக!! தமிழனை தமிழன் ஆண்டால் கூவத்தில் பாலும், தேனும் பாய்ந்து ஓடும் போன்ற வெற்றுவேட்டுக்கள் தான் இவர்களது மூலதனம். இதை வைத்துக் கொண்டு அப்பாவி இளைஞர்களினதும், மாணவர்களினதும் மனதில் நஞ்சை விதைக்கிறார்கள். இவர்களது வெறிப்பேச்சால் தூண்டப்பட்டவர்கள் தமிழ்நாட்டுக்கு சுற்றுலா வந்த சிங்களக் குடும்பத்தினரை தாக்கினர்கள். தமிழக கோயில்களை பார்க்க வந்த புத்தபிக்குவை தாக்கினர்கள். தமிழ்நாட்டு கடல் தொழிலாளரை இலங்கை சிங்கள பெருந்தேசிய அரசின் கடற்படை தாக்குவது குறித்து அண்ணன் விட்ட அறிவுபூர்வமான அறிக்கை கூறுகிறது "இலங்கை கடல்படை தமிழக கடல்தொழிலாளர்களை தாக்கினால் நாங்கள் (நாம் தமிழர் கட்சி) தமிழ்நாட்டில் படிக்கும் சிங்கள மாணவர்களை தாக்குவோம்".

"ஆகா" என்ன ஒரு அறிவு, என்ன ஒரு வீரம். தனது குடிமக்களான தமிழ்நாட்டு கடல்தொழிலாளரை பாதுகாக்க தவறிய இந்திய அரசை அவர் தாக்க மாட்டார். "இலை மலர்ந்தால் ஈழம் மலரும்" என்று அவர் ஒரு பஞ்ச் டயலாக் ஊழல்நாயகி ஜெயலலிதாவை வைத்து எழுதியிருந்தார். அப்படி ஈழத்தையே மலர வைக்கக் கூடிய வல்லமை கொண்ட அம்மா தனது மாநிலத்து ஏழைத்தொழிலாளிகள் கொல்லப்படுவது குறித்து எதுவுமே செய்யாமல் இருக்கிறார் என்பதை எதிர்த்து செந்தமிழன் போராட மாட்டார். அம்மாவை எதிர்த்து போராடுவது என்ன, ஒரு கேள்வி கூட கேட்கமாட்டார். ஆனால் படிக்க வந்த சிங்கள மாணவர்களை தாக்கி இலங்கை அரசை பயப்படுத்தி கடல்தொழிலாளர்களின் பிரச்சனைகளை தீர்த்து விடுவார் "வீழ்ந்து விடாத வீரன்" சீமான்.

படிக்க வந்த சிங்கள மாணவர்கள் எதிரிகள். ஆனால் "புலிப்பார்வை" படம் எடுத்த பச்சைமுத்து பங்காளி. யார் இந்த பச்சைமுத்து?. பல இலட்சம் கட்டணம் வசூலித்து கல்விக்கொள்ளை அடிக்கும் எஸ்.ஆர்.எம் பல்கலைக்கழக உரிமையாளர். "புதிய தலைமுறை" தொலைக்காட்சி உரிமையாளர். இந்திய ஜனநாயக கட்சி என்ற கட்சியின் தலைவர். இந்தக் கட்சி இந்துவெறி பாரதிய ஜனதா கட்சியோடு கூட்டு வைத்திருக்கிறது. தமிழ்நாட்டிலே கல்விக்கொள்ளை அடிக்கும் இந்த எஸ்.ஆர்.எம் நிறுவனம், இப்போது இலங்கையில் எஸ்.ஆர்.எம்.லங்கா என்ற நிறுவனத்தை தொடங்கி உள்ளது. எஸ்.ஆர்.எம் பல்கலைக்கழக துணைவேந்தர் பொன்னவை இலங்கை சென்று மகிந்தாவின் மந்திரி ரிசான் பதியுதீன் தலைமையில் தங்களது கிளை நிறுவனத்தை தொடங்கி வைத்திருக்கிறார்.

இலங்கையிலே இலவசக்கல்வி என்பது அடிப்படை உரிமை. அதை தனியார்மயமாக்கி கொள்ளையடிக்க இனப்படுகொலையாளி மகிந்த ராஜபக்சா போடும் திட்டங்களின் பங்குதாரர் பச்சைமுத்துவுடன் சேர்ந்து ஒரேமேடையில் ஏற மண்டியிடாத மானக்காரன் சீமானிற்கு எப்படி மனச்சாட்சி இடம் கொடுத்தது?. பாலச்சந்திரனிற்கு இராணுவச்சீருடை அணிவித்து பரபரப்பூட்டி படம் எடுத்து பணம் சம்பாதிக்க நினைப்பவர்களிற்கு பரிந்து பேச எப்படி முடிகிறது?. மாணவர்களை "நாம்தமிழர்" அமைப்பினர் தாக்கவில்லை என்று அறிக்கை விடுகிறார்கள். அதை உண்மை என்றே வைத்துக் கொள்வோம். தமிழ்மக்களிற்காகவே அவதாரம் எடுத்தவர், தமிழ்மாணவர்கள் தன் கண்முன்னாலேயே பச்சைமுத்துவின் காடையர்களினால் தாக்கப்படும் போது கைகட்டி மௌனமாக இருந்தது ஏதற்காக?

பன்னிரண்டு வயது பச்சைக்குழந்தை பாலச்சந்திரனின் கொலையை சுப்பிரமணியசுவாமி என்னும் பார்ப்பனப்பன்றி தனது ஊத்தைவாயால், பார்ப்பனத்திமிரில் இந்திய மேலாதிக்க வெறியில், ஏகாதிபத்திய விசுவாசத்தில், சிங்கள பேரினவாத கொலைகாரர்களை காப்பாற்றுவதற்காக நியாயப்படுத்தியது. பாலச்சந்திரனை இந்த பார்ப்பன பரதேசி தீவிரவாதி என்றது. பக்கத்தில் மரணம் காத்திருக்க எந்த ஒரு குழந்தையையும் போல அந்த நேரத்திலும் கையில் இருந்த தின்பண்டத்தை வாயில் வைத்து மெல்லும் அந்த குழந்தையை, குண்டுவிழிகளால் மிரண்டு போய் விழிக்கும் சின்னவனை தீவிரவாதி என்று இந்த இரத்தம் குடிக்கும் காட்டேரி சொன்னது. சுப்பிரமணிய சுவாமிக்கும் பாலச்சந்திரனிற்கு இராணுவச்சீருடை அணிவித்து படம் எடுக்கும் பச்சைமுத்துவிற்கும் என்ன வித்தியாசம் என்று ஒரு காரணத்தையாவது இவரால் சொல்ல முடியுமா?.

இனவாதிகள் என்றைக்கும் அதிகாரத்துடனும், முதலாளிகளுடனும் சேர்ந்தே நிற்பார்கள். ஜெயலலிதா, பச்சைமுத்து, அரசியல்மாமா நடராசன், கனிமக் கொள்ளையன் வைகுந்தராசன், லைக்கா, லிபரா போன்ற கொள்ளைத்தமிழர்கள் தான் இவர்களைப் போன்ற இனவாதிகளின் நண்பர்களாக இருக்க முடியும். அப்படித்தான் இருக்கிறார்கள். அவர்கள் தமது இலாபத்திற்காக நரேந்திரமோடி, ராஜபக்சா என்று கூட்டுச் சேரும் போது இவர்களும் அதை ஆதரித்து தானே தீர வேண்டும்.

அதோவருகிறது தமிழீழம், அடுத்த பொங்கலிற்கு தமிழீழம் நாம் பெற்றுத் தருவோம் என்று மக்களை போராட்டத்திலிருந்து அன்னியமாக்கினார்கள். மக்களை நம்பாமல் ஆயுதத்தை நம்பினார்கள். வல்லரசுகள் உதவி செய்யும் என்று சொன்னார்கள். இடிபாடுகளிற்குள் முடங்கிப் போனது எம் வாழ்க்கை. இனவாதத்தால் தோல்வி கண்ட எமது போராட்டத்திலிருந்து எதுவித படிப்பினைகளையும் பெற்றுக்கொள்ளாமல் இவர் போன்றவர்கள் அடுத்த அத்தியாயத்தை தொடருகிறார்கள். அடுத்த தமிழ்நாட்டு சட்டசபைத்தேர்தலின் போது ஒரு தமிழன் தமிழ்நாட்டை ஆண்டால் எல்லாப் பிரச்சனையும் தீர்ந்து விடுமாம். அந்த தமிழன் சீமான் தான் என்று தனியே எடுத்து சொல்லத் தேவையில்லை. தமிழ்நாட்டு முதலமைச்சர்களால் தெருவிலேயே பிறந்து வாழும் தமிழர்களிற்கே எதுவிதமான தீர்வையும் கொடுக்க முடியாது என்பது தான் கண் முன்னே உள்ள உண்மை. இந்திய வல்லரசை எதிர்த்து போராட வேண்டுமாயின் ஏழை உழைக்கும் மக்களின் இயக்கம் ஒன்றினாலேயே அது சாத்தியப்படும். பச்சைமுத்துக்களின் பங்காளிகளால் அது ஒரு நாளும் முடியாது.






# இலத்திரனியல் அடையாளஅட்டையின் தேவை யாருக்கு?




நாட்டில் தற்போது நடைமுறையில் இருக்கும் அடையாள அட்டைக்குப் பதிலாக, அரசாங்கம் இலத்திரனியல் அடையாள அட்டையை நடைமுறைக்கு கொண்டுவர தீர்மானித்து செயலில் இறங்கியுள்ளது. இலத்திரனியல் அடையாள அட்டை தொடர்பில் அரசாங்கம் நாட்டுமக்களுக்கு இனிப்பான காரணிகளை முன்வைத்தாலும், அதன் உண்மையான உள்நோக்கம் வேறானது. இதை பாதுகாப்பு செயலர் சீ.சீ.ஓ (**C.C.O**) என அழைக்கப்படும் அமெரிக்காவல் இயங்கும் பாதுகாப்பு தொடர்பான கல்லூரியினால் வெளியிடப்படும் “பிறிசிம்” (**PRISM**) என்ற சஞ்சிகைக்கு பாதுகாப்பு செயலர் கோட்டாபே ராஜபக்ச எழுதியுள்ள கட்டுரையில் சூசகமாக வெளிப்படுத்தியுள்ளார். அதாவது நாட்டின் தேசிய பாதுகாப்பு பாரிய சவால்களை எதிர்கொண்டிருப்பதாக கூறும் பாதுகாப்பு செயலர் அதற்கான மூன்று காரணிகளை பிரதானமாக சுட்டிக்காட்டியுள்ளார்.

1.புலம்பெயர் இலங்கை தமிழர்களின் ஆதரவுடன் மீள்எழுச்சி பெற்றுவரும் புலிகள் இயக்க பயங்கரவாதம்.

2. இலங்கையில் அதிகரித்து வரும் இஸ்லாமிய அடிப்படைவாதம்.

3. நாட்டில் எழுச்சி பெற்றுவரும் மாற்று இடதுசாரியம்.

பாதுகாப்பு செயலரின் மேற்படி கூற்றுக்கிணங்க தேசிய பாதுகாப்பு என்ற போர்வையில் 15 வயதுக்கு மேற்பட்ட இலங்கையர் அனைவரையும் முழுமையான கண்காணிப்பில் வைத்திருக்க ஏற்புடையதாகவே இலத்திரனியல் அடையாள அட்டை அறிமுகப்படுத்தப்படுகிறது.

18 வயதுக்கு மேற்பட்ட ஒவ்வருவரும் தனது ஆள்அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காகவே 1968 32ஆம் இலக்க அடையாள அட்டை சட்டமூலம் அமுல்படுத்தப்பட்டு, 1972இல் 18வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் அடையாள அட்டை வினியோகிக்கப்பட்டது. அடையாள அட்டைக்கு விண்ணப்பிக்கும் ஒருவர், பெயர், விலாசம், தொழில், பெற்றோரின் பெயர் விபரங்கள், கிராமசேவையாளர் பிரிவு, பிரதேச செயலர் பிரிவு, ஆகிய விபரங்களை விண்ணப்பப் படிவத்தில் பதிவு செய்யவேண்டும். சமர்பிக்கப்பட வேண்டிய ஆவணங்கள்: விண்ணப்பதாரியின் பிறப்பு சான்றிதழ், பெற்றோரின் பிறப்பு சான்றிதழ்கள், விணண்ப்பதாரியின் புகைப்படங்கள் மூன்று ஆகியவை மட்டுமேயாகும்.

1971 இல28, 1977 இல37, 1983 இல11 ஆகிய காலப்பகுதியில் நடைமுறையில் இருக்கும் அடையாள அட்டை திருத்த சட்டமூலத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. இந்த திருத்தங்கள் எவற்றிலும் எந்த ஒரு நபரையும் தனிப்பட்ட ரீதியில் பாதிப்புக்குள்ளாகும் வகையில் சரத்துக்கள் எவையும் சேர்த்துக் கொள்ள்ளப்படவில்லை என்பது கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய ஒன்றாகும்.

தற்போது அமுலில் இருக்கும் அடையாள அட்டை சட்டத்திற்க்குப் பதிலாக இலத்திரனியல் அடையாள அட்டை என்ற போர்வையில் 15வயதுக்கு மேற்ப்பட்ட பிரஜை ஒவ்வருவரதும் கைவிரல் அடையாளங்களை பெற்றுக்கொள்வதுடன் சம்மந்தப்பட்டவரினதும் அவரது குடும்ப உறவுகள் அனைவரதும் தனிப்பட்ட விபரங்கள் முழுமையாக பெறப்படவிருக்கிறது. அதாவது இலத்திரனியல் அடையாள அட்டையை பெறும் ஒருவர் தனது தனிப்பட்ட விபரங்கள் அனைத்தையும் பகிரங்கப்படுத்த நிர்ப்பந்திக்கப் படுகிறார். இதுவரை காலமும் அடையாள அட்டையை பெறுவதற்குரிய வயதெல்லை 18ஆக வரையறுக்கப்பட்டிருந்தது. இலத்திரனியல் அடையாள அட்டையை பெறுவதற்குரிய வயதெல்லை 15ஆக குறைக்கப்பட்டுள்ளது. அதாவது 15 வயதுக்கு மேற்பட்ட அனைத்து பிரஜைகளும் கண்காணிப்புக்கு உட்படுத்தப்படுகிறார்கள்.

> **“இலத்திரனியல் அடையாள அட்டையில் பதிக்கப்படும் 'சிப்' (ZIP) எனப்படும் இலத்திரனியல் உபகரணத்தின் மூலம் குறிப்பிட்டநபரின் நடமாட்டங்களைக் கண்காணிக்க முடியும். அரசாங்கத்தின் இந்த நடவடிக்கையானது தனிநபர் சுதந்திரத்திற்கு அச்சுறுத்தலானது”**

## கைவிரல் அடையாளம்!

இலத்திரனியல் அடையாள அட்டையை பெறும் ஒருவரிடம் அவரது கைவிரல்கள் பத்தினதும் கைரேகை அடையாளம் பெறப்படும். சாதாரணமாக கைவிரல் அடையாளம் பெறுவது குற்றவியல் தொடர்பான சந்தேக நபர்களிடமேயாகும். சந்தேக நபர்கூட தனது கைவிரல் அடையாளத்தை வழங்க மறுதலிப்பதற்கு சட்டம் இடமளிக்கிறது. அவ்வாறு மறுதலிக்குமிடத்து நீதவானின் உத்தரவைப் பெற்றே குறிப்பிட்ட நபரின் கைவிரல் அடையாளத்தை பெறமுடியும். அதேவேளை இலத்திரனியல் அடையாள அட்டையை பெறுவதற்காக நபர் ஒருவர் எவ்வித கேள்விக்கும் இடமின்றி கைவிரல்கள் பத்தினதும் கைவிரல் அடையாளத்தை வழங்க வேண்டிய கட்டாயத்திற்கு உள்ளாகிறார். உண்மையில் இது சட்டத்திற்கு முரணான செயற்பாடாகும். இது மட்டுமன்றி இலத்திரனியல் அடையாள அட்டையில் பதிக்கப்படும் “சிப்” (**ZIP**) எனப்படும் இலத்திரனியல் உபகரணத்தின் மூலம் குறிப்பிட்டநபரின் நடமாட்டங்களைக் கண்காணிக்க முடியும். அரசாங்கத்தின் இந்த நடவடிக்கையானது தனிநபர் சுதந்திரத்திற்கு அச்சுறுத்தலானது மட்டுமன்றி அடிப்படை மற்றும் ஜனநாயக உரிமைகளை மறுதலிப்பதுமாகும்.

தற்போது இலத்திரனியல் அடையாள அட்டை வினியோகிப்பது தொடர்பான நடவடிக்கைகள் அரச ஊழியர்களை இலக்காகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்த நடவடிக்கைகளில் அடையாள அட்டை காரியாலய ஊழியர்களுக்கு மேலதிகமாக பாதுகாப்பு அமைச்சின் ஊழியர்களும்(இராணுவம்) ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இந்த முன்னெடுப்பானது அரசசேவைகள் அனைத்தையும் ராணுவமயப்படுத்தல் நிகழ்ச்சி நிரலுக்கு அமைவான தொன்றாகவே பார்க்கப்பட வேண்டியுள்ளது.

இந்தநிலைமைகளை கவனத்தில் கொண்டு இலத்திரனியல் அடையாள அட்டையில் தனிநபர் சுதந்திரத்துக்கு அச்சுறுத்தலாகக் காணப்படும் விடயதானங்களுக்கு எதிராக நாட்டு மக்கள் அனைவரும் இன, மத, மொழி பேதங்களுக்கு அப்பால் ஒன்றிணைந்து எதிர்ப்பை வெளியிடவேண்டிய கட்டாயம் உருவாகியுள்ளது. இந்த விடயத்தில் தவறிழைப்போமாயின் எமது எதிர்கால சந்ததிக்கு திறந்தவெளி சிறைச்சாலைக்கு ஒப்பான நாட்டையே சொத்தாக ஒப்படைக்க நேரிடும்.

3 ஆம் பக்கம்

## இன்னும் என்னதான் வேண்டும் என்கிறீர்கள்

அடிப்படை வசதிகளுக்காகவே அப்பணம் ஒதுக்கப்பட்டுள்ளது. அது பெரும்பாலும் பாலங்கள், மதகுகள், மற்றும் பாதை அபிவிருத்திக்காக ஒதுக்கப்படுமேயல்லாது, கல்வி அல்லது சுகாதார சேவையை தரமுயர்த்துவதற்கு ஒதுக்கப்படாது.இந்தப் பணம் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரின் ஊடாகவே கிராமப்புரங்களுக்கு செல்லவிருக்கிறது. ஒரு நாடாளுமன்ற உறுப்பினருக்கு ஒதுக்கப்படும் பன்முகப்படுத்தப்பட்ட நிதி 5 மில்லியனாகும். ஆனால், ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினருக்கு ஒதுக்கப்படும் நிதி 30 மில்லியனாக அதிகரிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு நிதி வழங்கபடுவது பணமழை பொழிந்து ஊவா மாகாண தேர்தலை வென்று கொள்வதற்குத்தான். முன்னமேயே குறிப்பிட்டது போன்று இப்போது மேல்மட்ட பணமழை பொழிகிறது. அடிமட்ட பணமழை கிராம மட்டத்தில் பொழியப்படுகிறது. இவற்றைப் பார்த்து திருப்தியடையுமாறு அரசாங்கம் கூறுகிறது. இதனால் பொருளாதாரத்திற்கும் சமூகத்திற்கும் ஏற்படும் தீங்கைப் பற்றி சிந்திக்காது கப்பல் மூழ்கினாலும் கொண்டாட்டம்தான் என்ற கோட்பாட்டை கடைபிடிக்கும்படி கூறுகிறது. அப்படியே செயற்படுவதா என்ற தீர்மானிக்கும் சந்தர்ப்பம் சமூகத்தின் கைக்கு கிடைத்திருக்கிறது.

அரசியலில் கொள்கை அல்லது அடிப்படைக்கு பதிலாக தமக்கு கிடைக்கும் இலாபத்தை கொண்டு தீர்மானிப்பதே நவ தாராள மயத்தின் இன்றைய அரசியலாக இருக்கிறது. முக்கிய விடயம் என்னவெனில்,□ சரியான அரசியல் எது?□ என்ற கேள்விக்கு பதில் தேடுவதை விட்டு □இதனால் எனக்கு என்ன கிடைக்கும்?□ என்ற கேள்வியே எல்லோர் மனிதிலும் இருக்கின்றது. பணமழை மீதுள்ள மக்களின் நப்பாசையை நன்கறிந்த அரசாங்கம் அதை முன்வைத்தே தேர்தலுக்கு முகம் கொடுக்கிறது. எனவே, ஒரு வேட்பாளருக்கு பதிலாக இன்னொரு வேட்பாளரையோ அல்லது ஒரு கட்சிக்கு பதிலான இன்னொரு கட்சியையோ தெரிவு செய்யும் தேர்தல் செயற்பாட்டினால் இந்நிலையை மாற்ற முடியாது. சமூகத்தினது ஒட்டுமொத்த சிந்தனையிலும் மதிப்பீட்டு தொகுதிகளிலும் பாரிய மாற்றமொன்று தேவைப்படுகிறது. அப்போதுதான் இந்த குப்பபைகளை அகற்ற முடியும். அதற்கான முதற்படியாக பணமழையில் நனைவதற்குப் பதிலாக திறனாய்வை எதிர்ப்பார்க்கும் சமூகத்தை உருவாக்க போராடவேண்டும். மஹிந்தானந்த கூறுவதைப் போன்று □கொடுப்பதை தின்றுவிட்டு வேறு பக்கம் பார்திருக்கும்□ சமூகத்திற்கு பதிலாக, எதிர்காலத்திற்கு பொறுப்பு கூறும், திறனாய்வுமிக்க, புத்திசாலிகளான பகுத்தறிமிக்க சமூகத்தை கஷ்டப்பட்டாவது உருவாக்க வேண்டும். இல்லையாயின், கீழ் வர்க்கம் எந்நாளும் ஆட்சியாளர்களின் அடாவடித்தனங்களை சகித்துக் கொண்டு இருக்கத்தான் வேண்டும்.

5 ஆம் பக்கம்

## குடும்ப உழைப்பு

அனைத்தும் பெண்ணின் கடமையாகவும், அதை மறுக்கும் உரிமை பெண்ணுக்கு கிடையாது என்பதில் இருந்து பெண் மீதான வன்முறையாகியது.

இந்த வன்முறையை நிலப்பிரபுத்துவ சமூக அமைப்பு முறை அங்கீகரித்ததுடன், ஆணின் அடிமையாக பெண்ணை முன்னிறுத்தி அடிமைப்படுத்தியது. நிலப்பிரபுத்துவ உற்பத்தி முறைக்கும் தேவைக்கும் அமைவாக உருவான அனைத்து மதங்களும் இதை முன்வைத்ததுடன், கடவுளால் படைக்கப்பட்டு பெண் மீது விதிக்கப்பட்ட ஒன்றாகவும், இதைப் பேணிக் கொள்வதே சமூகத்தின் பொது நடைமுறையாக்கி பண்பாடாக்கியது.

பெண் கட்டாயம் ஆணுக்கு சேவை செய்ய வேண்டும் என்பதும், அது பெண்ணுக்கான கட்டாய கடமையாகும் போதே, அது பெண் மீதான ஒடுக்குமுறையாக மாறுகின்றது. இது சமூகத்தில் சாதி வடிவங்கள் தொடங்கி ஏழை பணக்காரர்கள் உறவுகள் வரை காணமுடிகின்றது. மற்றவனுக்காக உழைப்பதான சமூகக் கடமைகளானது இழிவானதாகவும், வேலைவெட்டி இல்லாதவனின் செயலாகவும், வாழ்க்கைக்கு உதவாதவையாகவும் கூட விளங்கிக் கொள்ளப்படுகின்றது. சந்தை நோக்கில் பெறுமதியற்ற உழைப்பாக, வாழ்க்கையாகவும் புரிந்து கொள்ளும் வண்ணம், சந்தைக் கண்ணோட்டத்தைத் தூண்டுகின்றது.

சமூகமனைத்தினதும் பொதுக் கடமையை மறுத்து, அதை சிலரின் சமூகக் கடமையாக்கியதன் மூலம் வாழ்க்கை முறைமையானது ஒடுக்குமுறையாகியது. இந்த தன்மையை மூடிமறைக்கும் முறை தான் கூலி முறை. கூலி இன்றி அனைவரும் தத்தம் கடமைகளை செய்வதன் மூலம், சமூகத்தில் இருந்து தேவையானதை பெற்றுக் கொள்ளும் முறையானது, யாரையும் யாரும் ஒடுக்கும் அவசியத்தை கொண்டு இருப்பதில்லை. இன்று மனிதன் தன் தேவையை பெற்றுக் கொள்ள முடியாத வண்ணம், தனிவுடமை அமைப்பிடம் உழைப்பை விற்று வாங்க வேண்டி இருக்கின்றது. இதனால் சமூகம் சார்ந்த செயல்கள் கைவிடப்படுகின்றது. கூலி முறைக்கு வெளியிலான உழைப்பை வேலை வெட்டியில்லாதவன் செயலாக குறுக்கி பார்ப்பதும் காட்டுவதும் நடந்தேறுகின்றது. குடும்பத்தினுள் இதே முரண்பாடு, குடும்பக் கடமைகளைச் செய்வதை மறுப்பதும், பொதுப் போக்காக்கி வருகின்றது.

தேவைக்காக உழைப்பு, தேவைக்காக பொருள் என்ற உள்ளடக்கம் மறுக்கப்பட்ட அதே தளத்தில், குடும்பத்தினுள்ளான கூட்டு உழைப்பிலான வாழ்க்கை மறுதளிக்கப்படுகின்றது.

அதாவது தனிவுடமை அடிப்படையில் பணப் பெறுமதியற்ற அனைத்தும் அவசியமற்ற ஒன்றாக, சுமையாகவும் இறுதியில் புறக்கணிக்கத்தக்க ஒன்றாகி, அவை ஒழித்துக் கட்டப்படுகின்றது. உதாரணமாக உழைப்பில் ஈடுபடமுடியாத குழந்தை மற்றும் முதுமைப் பருவமானது, உழைப்பாற்றல் உள்ள மனிதனிடம் வெறுக்கத்தக்க தன் மீதான சுமையாக கருதுமளவுக்கு தனிவுடமைக் கண்ணோட்டம் இன்று ஆளுமை பெற்று இருக்கின்றது.

இயற்கையானதும் கூட்டானதுமான சமூகத் தன்மை கொண்ட மனித செயல்களற்ற தனிவுடைமையிலான தனிமனித வாழ்க்கை, மனித வாழ்வின் முரணாக மாறி வருகின்றது. தன் உழைப்பைச் சாராத பிறர் உழைப்பை நம்பிய இந்த வாழ்க்கை முறை, முரண்பாட்டின் மொத்த வடிவமாகி சமூக உளவியல் சிதைவாக மாறுகின்றது.

இதை தீர்க்க உளவியல் மருத்துவரை முதலாளித்துவம் உற்பத்தி செய்வதன் மூலம், சமூகமாகக் கூடி வாழ்வதன் மூலமான சமூக உளவியலை இது மறுதளித்து விடுவதன் மூலம், மனநோயாளிகளை கொண்ட சமூகமாகவே மனிதனை மாற்றி விடுகின்றது.

6 ஆம் பக்கம்

## மக்களைச் சுடும் பிரச்சனைகளைப்

அண்ணாவி அந்தோனி அவர்களை மிக வியப்போடுதான் இன்றுவரை பார்க்கிறேன். ஏட்டறிவு என்பது அவருக்கு அப்போ ஐந்தோ, ஆறாம் வகுப்புவரை என்றுதான் அறிகிறேன். ஆனால் அவரது பாடல்கள் பல என்னை இப்போதும் ஆச்சரியப்பட வைக்கின்றன. இராகங்களின் மூலைகளில் போய் முட்டிக்கொண்டும், துருத்திக்கொண்டும் நிற்காத மிக நேர்த்தியான சொற்கட்டுக்கள் அமைந்த கவிதைகள் அவருடையன. தவிர மத்தள, கைத்தாள அண்ணாவிகளை நெறிப்படுத்தும் விதமும், பிற்பாட்டுக் கலைஞர்களைத் தேர்வு செய்வதில் காட்டும் அக்கறையும், கலைஞர்களை அந்தந்தப் பாத்திரங்களுக்கேற்றாற்போல் தேர்வு செய்யும் உத்தியும், கூத்தைச் சொல்லிக்கொடுக்கும் பக்குவமும், பாங்கும், கண்டிப்பும்.... அது அவருக்கே தனித்துவமானது. மேலும் அவர் கூத்துக் கலைஞனாக மட்டுமல்ல, கிராமத்தின் பன்முக ஆளுமை கொண்ட பணியாளனாக வாழ்ந்து மறைந்தவர். அப்படியானவர்களையே அண்ணாவிமார் என்று சொல்வதுதான் சரியானது.

போ. கூத்துக் கலைக்கும், தமிழுக்கும் ஒரே வயது என்று அறிஞர் பல கூறுகின்றனர். இந்துக் கடவுள் - ஆதி மூலமான சிவனைக் கூடக் கூத்தன் என்று புராணங்கள் கூறுகின்றன. இவ்வளவு தொன்மையான கலையை நவீன மயப்படுத்தமுடியுமா ?

நவீனப் படுத்துவதில் உள்ள சவால்கள் என்ன ?

என்னைப்பொறுத்தவரை இது ஒரு சிரிப்பூட்டக்கூடிய கேள்வி, ஆனால் பொறுப்பாகப் பதில் சொல்ல வேண்டிய கேள்வி.

கூத்து என்பது மொழி தோன்றுவதற்கு முன்பே தொடங்கி விட்டது என்றுதான் சொல்ல வேண்டும். ஆதிமனிதர்கள் மிருகங்களுடன் வேட்டையாடி அதைக் கொன்று வென்றபோது வெற்றிக்களிப்பில் ஆனத்தக் கூத்தாடியதுதான் முதற் கூத்து என்பேன் நான். அதன் பரிணாம்தானே கூத்து இல்லையா...? மொழியைக் கண்டுபிடித்தார்கள், இயற்கை ஒலிகளிலிருந்து இசையைப் பெற்றார்கள், மிருகத்தின் தோல்களிலிருந்து முழங்கும் கருவிகளைக் கட்டினார்கள், இவற்றின் ஒருங்கிணைந்த வடிவம்தானே கூத்து?!

சரி, சிவனோ அல்லது யாரோ ஒரு மூத்த கலைஞன் கூத்துக் கலையை நெறிப்படுத்தி, அதனை மெருகூட்டிச் சிறப்பித்திருக்கலாம். அதற்கான அத்தனை சாத்தியப்பாடுகளும் உண்டு மறுக்கவில்லை. அதேவேளை இந்தப் பிந்தைய மனிதர்களால் கண்டுபிடிக்கப்பட்ட மதங்களும், மதத்தின் ஆதிமூலவர் எனச் சொல்லப்படும் கடவுளரும்தான் கூத்துக்கும் தலைவன் என மோசடிக் கதைகள் விடுவது இந்த மத ஆதிக்கர்கள் கட்டி விடும் கூத்தாகவே நான் பார்க்கிறேன். வேடிக்கையைப் பாருங்கள், கூத்துக்குத் தலைவன் எனக் கடவுளைச் சொல்லிக்கொண்டு, அந்தக் கடவுளையே எங்கே கொண்டுபோய் வைத்திருக்கிறார்கள் இவர்கள், இடுப்பில் புலித்தோலைக் கட்டி, மனிதச் சாம்பலை உடல் முழுக்கப் பூசி, சுடலையில் அல்லவா கொண்டுபோய் நிறுத்தியிருக்கிறார்கள். இதன் உளவியல் என்ன...? கூத்தாடுபவன் இழிவானவன் என்பதுதானே?!

இவ்வளவு தொன்மையான கலையை நவீன மயப்படுத்தமுடியுமா ? முடியும். காலத்துக்குக் காலம் கூத்து நவீனமயப் படுத்தப்பட்டுக்கொண்டுதான் வந்திருக்கின்றன. ஆரம்பத்தில் இதுபற்றிக் குறிப்பிட்டிருக்கிறேன்.

கூத்தை நவீனமயப் படுத்துவதில் சவால்கள் என பெரிதாக எதுவுமில்லை. அரங்காற்றுப் பிரதிகளின் பாடுபொருட்களை நாம் மாற்றியாக வேண்டும். மக்களைச் சுடும் பிரச்சனைகளைப் பேச வைக்க வேண்டும். அனைத்து ஒடுக்குமுறைகளுக்கும் எதிரான கருத்துக்களை அழகியலோடு சொல்ல வேண்டும். கூத்து ஒன்றும் புரட்சி செய்யாது. ஆனால் கூத்து மட்டுமல்ல, கலை இலக்கியம் என்பவை மக்களைப் புரட்சிக்குத் தயார்ப்படுத்த வல்லன என நான் நம்புகிறேன். சவால்கள் எனச் சொல்லுமிடத்து ஒன்றை மட்டும்தான் நான் சொல்ல முடியும், அதாவது இன்றுள்ள மக்கள் தொடர்புசாதனங்கள் எனச் சொல்லிக் கொள்பவை முதலாளித்துவ நலன்கள் சார்ந்து இயங்குபவை. அவை மக்களை என்றும் சிந்திக்க விடாதவை. மிக மோசமான பிற்போக்குக் கருத்துக்களையும், கற்பனாவாதக் கட்டுக் கதைகளையும், ஆதிக்கங்களுக்குக் கட்டுப்பட்டு வாழ்வதின் சுகங்களையும் மிக நாசூக்காக தொடர்கள் என்ற பெயரில் வீட்டுக்குவீடு புகுந்துகொண்டு பிரச்சாரம் செய்கின்றன. இவை உலகின் அத்தனை தொழிநுட்ப வசதிகளையும் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்துகின்றன. இவற்றோடு போட்டிபோட்டு மக்களை எமது கலைப்ப்படைப்புக்களைத் தேடி நகர்த்தி வருவதென்பதுதான் சவால்.

போ. இன்று நவதாராள பொருளாதாரம், இனவாதம், இனஒடுக்குமுறை, சாதியஒடுக்குமுறை, பெண்ணொடுக்குமுறை எனப் பலதரப்பட்ட தளத்தில் மக்கள் போராட்ட முனைப்புகள் தேசத்தில் முன்னெடுக்கப்படுகிறதே. இம் முனைப்புகளுக்கு ஏற்றாற் போல் மக்கள் சார் கலை இலங்கியங்கள் மறுபடியும் மறு பிரதிப்படுத்தப் பட வேண்டியுள்ளது. இதில் கூத்தை எவ்வாறு மக்கள் போராட்டங்களுக்கு உடந்தையாக உருமாற்றுவது ?

முடியும். இன்றைய தேவையும், பணிகளும் இவைதான் என்பது கூத்துக் கலைஞர்கள் முன்னால் எழுந்து நிற்கின்றது. மக்கள் மத்தியிலிருந்து வளாகச் சுவர்களுக்குள் போய் முடங்கியுள்ள கூத்து மீண்டும் மக்கள்முன் கொண்டுவரப்பட வேண்டும். முன்னைய காலங்களில் கூத்தில் மக்களும் பங்காளிகளாக இருந்தனர். இப்போ அந்த நிலை இல்லை. பாடுபொருட்களைக் காலத்துக்கும், சமூகத்தின் தேவைகளுக்கும் ஏற்றாற்போல் தேர்தெடுக்க வேண்டும். 1950களில் அண்ணாவி அந்தோனியின் பாடல் ஒன்று:

”பிச்சை போடும் அண்ணமாரே....
பெரும் பசியால் வாடுகின்றேன்
அன்னமுண்ணக் கைகளில்லை
ஆடை கட்ட மார்கமில்லை
என்ன செய்வேன் அண்ணமாரே
என் வயிறு வாடுதிப்போ”

இத்தனை காலங்கள் கடந்தும் இந்தப் பாடல் சமகால இலங்கைத் தமிழ் மக்களின் கையறு நிலையைச் சொல்கிறதல்லவா? அது மட்டுமல்ல உலகத்தின் ஒட்டுமொத்த ஒடுக்கப்பட்ட மக்களின் குரலாய் நிற்கிறதல்லவா? இங்கேதான் மக்களுக்குரிய கலைஞன் என்றால் யார் என்ற கேள்விக்கு விடை கிடைக்கிறது.

மேலும், பாடுபொருள் தவிர வடிவங்கள்.

பட்டி தொட்டியெல்லாம் புகுந்துவரக்கூடிய வடிவமும் எங்கள் மக்களிடம் இருந்திருக்கின்றன. அதுதான் தெருக்கூத்து. 80களில் போராட்ட காலத்தில் தெருக்கூத்தின் மீள்வருகை கணிசமான பங்களிப்பைச் செய்தன. தமிழகத்தில் நாடக ஆசிரியர் தோழர் பிரளயன் இந்தத் தெருக்கூத்து வடிவத்தை மிக அற்புதமாகப் பயன்படுத்தி வருகின்றார். போராட்டகாலக் கலைவடிவங்கள் பிரமாண்டத்தை விட்டு இலகுபடுத்தப்பட்ட வடிவமாக ஆக்கப்பட வேண்டும். அண்மைக் காலமாக கிழக்கு மாகாணத்தில் கலாநிதி ஜெயசங்கர் மிகப் பாரிய கூத்து முயற்சிகளைச் செய்து வெற்றிகள் கண்டுள்ளார்.

போ. நிறைவாக, சமவுரிமை இயக்கம் ஒடுக்கப்பட்ட அனைத்து இன மக்களின் ஒன்றிணைவுக்கன செயற்பாட்டை முன்னெடுத்து வருகிறது . உங்கள் கருத்து ?

நல்லது. இவை இன்றெமது தேசத்தைப் பொறுத்தவரை இன்றியமையாத தேவையும்கூட. இது கலை பற்றிய உரையாடல் என்பதால் ஒன்றை முன் வைக்கலாமென நினைக்கிறேன். பன்மொழிக் கலைஞர்களை, பன்முக ஆளுமை கொண்ட முற்போக்குக் கலைஞர்களை ஒன்றிணைத்து, பிரச்சார இயக்கமாக மாற்றும் பணிகளையும் சம உரிமை இயக்கம் செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன். வணக்கம்!

”பிச்சை போடும் அண்ணமாரே....
பெரும் பசியால் வாடுகின்றேன்
அன்னமுண்ணக் கைகளில்லை
ஆடை கட்ட மார்கமில்லை
என்ன செய்வேன் அண்ணமாரே
என் வயிறு வாடுதிப்போ

### சென்ற இதழ் தொடர்ச்சி, இது ஏன் இது கடவுளின் செயலா?

சிந்திக்கத் துவங்கினான் சிந்தனையாளன் கால்மார்க்ஸ். அவரது கண்டுபிடிப்பத்தான் பாட்டாளி வர்க்க அரசின் தோற்றமும் , பாட்டாளி வர்க்க சர்வாதிகாரமும், சோஷலிஸமும், கம்யூனிஸமும் மாகும். மக்களின் கஷ்டங்கள் எல்லாம் கடவுளின் செயலல்ல இது மக்களை அடக்கி ஆளும் அரசர்கள், பிரபுக்கள், முதலாளிமார்கள், பணக்காரர்கள், அடக்குமுறையாளர்கள் இவர்களால் ஏற்படுத்தப்பட்டவைகளாகும் எனவே சுரண்டல் சமுதாயத்தை தூக்கிஎறிய தொழிலாள வர்க்கம் புறப்பட்டால் ஏழை எளியமக்கள், தொழிலாளர்கள், பாட்டாளிகள் ஆகியோரின் வாழ்க்கை சிறப்படையும் என மார்க்ஸ் கூறினார். முதலாளிவர்க்கத்தை முறியடித்து தொழிலாளர்களின் உழைப்பை சுரண்டுவதை தடைசெய்தால், நாட்டின் சொத்துக்கள் எல்லாம் மக்கள் சொத்துக்களாக மாறினால், ஏழை எளிய மக்களின் பசி, பட்டினி, வறுமை, நோய், நொடி, வேலை இல்லாதிண்டாட்டம், வீட்டுப்பிரச்சினை, கல்விபிரச்சினை, போன்ற எல்லா பிரச்சினைகளும் தீர்க்கப் படும். எனவே தொழிலாள வர்க்கத்தின் தலைமையில் சகல ஒடுக்கப்பட்ட மக்களும் அணிதிரண்டு முதலாளித்துவ ஆட்சிகளை அழித்தொழிக்க புறப்படுங்கள் என அறைகூவல் விடுத்தார். தோழர் ஏங்கல்ஸ்சுடன் இணைந்து தோழர் மார்க்ஸ் அவர்கள் 1848இல் வெளியிடப்பட்ட உலகப்புகழ் பெற்ற கம்யூனிஸ்ட் பிரகடனத்தின் மூலம் அவ்அறைகூவலை வெளியிட்டார்.

இந்த அறைகூவலை ஏற்று ஐரோப்பாவின் பல நாடுகளில் கம்யூனிஸ்ட் கட்சிகள் ஸ்தாபிக்கப்பட்டன. அவற்றின் தலைமையில் பாட்டாளி வர்க்கங்கள் அணிதிரண்டு பல்வேறு போராட்டங்களை நடத்தியது. அவ்வாறே ருஷ்ய பாட்டாளிவர்க்கம் தோழர் லெனின் தலைமையில் ஜார் மன்னனையும் அவனது கொடுங்கோல் ஆட்சியையும் தோற்கடித்து பார்புகழ்ந்த முதலாவது சோஷலிஸ அரசை 1917ஆம் ஆண்டு நிறுவினார்கள். அந்த செவ்வொளியின் வெளிச்சத்தில் மிக நம்பிக்கையுடன் பாட்டாளிவர்க்கமும் ஏனைய அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களும் கிளர்ந்தெழுந்து தமது நாடுகளை ஆக்கிரமித்துள்ள ஆக்கிரமிப்பாளர்களையும், தமது நாட்டின் ஏகாதிபத்திய சார்பு அரசாங்கங்களையும், உள்நாட்டு முதலாளிகள் மற்றும் பிற்போக்காளர்களையும் தோற்கடிக்க பெரும் போராட்டங்களை நடத்தினார்கள். அதேவேளை அண்மையில் பிறந்த சோவியத் சோஷலிஸ்ட் குடியரசையும் பாதுகாக்கும் போராட்டங்களையும் நடாத்தினார்கள். ஏகாதிபத்தியவாதிகளும், சர்வதேச முதலாளித்துவவாதிகளும் பாட்டாளிவர்க்க தலைமையிலான சோவியத் சோஷலிஸ்ட் குடியரசை தொடர்ந்து வாழவிடதயாரில்லை. அதை அழித்தொழிக்கும் நோக்கிலும், புரட்சிகர இயக்கங்களை உலகில் இல்லாதொழிக்கும் நோக்கிலும் உலகை மீண்டும் தமக்கிடையில் பங்கு போட்டுக்கொள்ளும் விருப்பத்துடனும் இரண்டாம் உலகப்போரை ஆரம்பித்து கோடிக்கணக்கான மக்களை அழித்தார்கள். ஆனால் அவர்கள் எதிர்பார்த்ததிற்கு மாறாக ஒரு சோவியத் சோஷலிஸக் குடியரசுக்கு பதிலாக மேலும் பல சோஷலிஸ க் குடியரசுகள் உருவாகின. போலந்து, கங்கேரி, செக்கோசெலவாக்கியா, யூகோசெலவாக்கியா, ருமேனியா, கிழக்குஜெர்மனி, அல்பேனியா, சீனா, வடகொரியா, வடவியட்நாம், கியூபா போன்ற நாடுகளெல்லாம் சோஷலிஸ நாடுகளாக மாறிவிட்டன. உலகின் மூன்றில் ஒருபகுதி மக்கள் சோஷ



# இனி ஒரு விதிசெய்வோம் மக்கள் பிரச்சினைக்கு தீர்வு காண்போம்!

**“66 வருடங்களாக வாக்களித்தும் எமது பிரச்சனைகள் தீர்ந்தபாடில்லை. சிங்கள இளைஞர்கள் இரண்டு தடவைகள் ஆயுதம்ஏந்தி போராடியபோதும் அந்த போராட்டங்கள் தோல்விகண்டது. தமிழ் இளைஞர்கள் தமது பிரச்சினைகளுக்காக 30ஆண்டுகள் ஆயுதம்ஏந்தி போரடி தோல்வி கண்டார்கள்.”**

லிஸத்தின்கீழ் வாழத்தொடங்கினர். உலகம் முதலாளித்துவ முகாம் சோஷலிஸ முகாம் என இரண்டு பிரிவுகளாக பிளவுபட்டது. இந்த இரு முகாம்களிலும் சேராத நாடுகளும் இருந்தன. அந்தநாடுகள் அடிப்படையில் முதலாளித்துவ நாடுகள். அந்நாடுகள் சோஷலிஸ முகாம்களின் உதவிகளை பெற்று தம்மீதிருந்த ஏகாதிபத்திய அழுத்தங்களில் இருந்து சிறிதளவு விடுதலை பெற்றவர்கள்.

யுத்தத்தினால் தோற்கடிக்க முடியாத சோஷலிஸ நாடுகளை லஞ்சம், ஊழல், ஆடம்பர பொருட்கள்மீதான ஆசை, பாட்டாளிவர்க்கம் உழைப்பில் ஈடுபடாது சோம்பேறிகளாக்குவது, மக்களை ஆபாசப்படங்களை பார்க்கச் செய்வது, அதிக பணம் சம்பாதிக்கவேண்டும் என்ற ஆசையை ஏற்படுத்தி மக்களை திருடர்களாக்குவது, பொதுநல சிந்தனைகளில் இருந்து விலகி சுயநலவாதிகளாக மக்களை மாற்றுவது. போன்ற தேசவிரோத செயல்களில் தமது ஏஜண்டுகள் மூலம் மக்களை தூண்டி, சோஷலிஸத்தை கொச்சைப்படுத்தி, சோஷலிஸத்துக்கு எதிராக மக்கள் பேசும்நிலைமையை உருவாக்கி சோஷலிஸ நாடுகளை ஏகாதிபத்தியவாதிகள் இன்று ஊழலமயப்படுத்தி உள்ளார்கள். சிலநாடுகளில் அரசாங்கத்தினுள் சதிகளைசெய்து சோஷலிஸ அமைப்பை சிதைத்துள்ளனர். வேறுசில நாடுகளில் கம்யூனிஸ்ட் கட்சி தலைமையை கைப்பற்றி முதலாளித்துவ மீட்சியை கொண்டுவந்துள்ளனர். இதுபற்றி மறைந்த மாமேதை சீனத்தலைவர் மா சேதுங் கூறியதாவது, சோஷலிஸ சமுதாயத்திலும் வர்க்கப்போராட்டம் உண்டு. தோல்வி யடைந்த முதலாளிவர்க்கம் தாம் மீண்டும் ஆட்சியை கைப்பற்றுவதற்காக இடைவிடாது இரகசியவழிகளில் சோஷலிஸ அமைப்பை எதிர்த்து போராடி கொண்டிருப்பார்கள். சோஷலிஸ மா முதலாளித்துவமா? எதுவெல்லும் என்ற பிரச்சினை இன்னமும் தீர்க்கப்படவில்லை. ஆனால் இறுதியில் சோஷலிஸமே வெற்றிபெறும் என அவர் கூறினார். ஆகவே ஏகாதிபத்திய முதலாளித்துவ நாடுகளில் பாட்டாளிவர்க்கம் பலாத்கார புரட்சியை நடாத்துவதும், திரிபுவாத நாடுகளில் அதன் தலைமையை தோற்கடிப்பதும், சகலவழிகளிலுமாகிய முதலாளித்துவ மீட்சியை தடைசெய்வதும் தேவை ஏற்பட்டால் பலாத்கார புரட்சியை நடத்துவதும் பாட்டாளி வர்க்கத்தின் கடமையாகும்.

இலங்கை போன்ற நவகாலினித்துவ பிரபுத்துவ கலை கலாச்சாரம் பழக்கவளக்கங்களை ஏற்றுக்கொண்ட முதலாளித்துவ சமூதாயத்தில் ஏற்பட்ட, ஏற்படுகின்ற, ஏற்படப்போகும் பொருளாதார நெருக்கடிகள், வேலைஇல்லாத்திண்டாட்டம், சம்பளப்பற்றாகுறைகள், தனியார்துறை தொழிலாளர்கள், ஊளியர்கள், பெருந்தோட்டதுறை மக்களின் வீடில்லாபிரச்சினைகள், வேலையில்லாபிரச்சினைகள்,அவர்களது சம்பளப் பிரச்சினைகள், தமிழ், முஸ்லிம் மக்களின் இன, மொழி, மதப் பிரச்சினைகள் யூ.என்.பி. ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அரசோ இதுவரை தீர்த்துவைக்கவில்லை. இனிமேலும் தீர்க்கமாட்டார்கள். ஏனெனில் இவைதான் அவர்களது அரசியல் மூலதனம். இந்த மூலதனத்தை வைத்துத்தான் பாராளுமன்ற தேர்தல்களில் வெற்றிபெற்று அரசாங்கங்களை அமைக்கிறார்கள். மக்களாகிய நாங்களும் இவற்றை அறிந்தும் அறியாமலும் இந்த சூதாட்டத்திற்கு துணைபோகிறோம். பிரிட்டிஷார் இந்த நாட்டைவிட்டு வெளியேறியபோது தமது மூலதனத்தையும், உள்நாட்டின் தனிநபர்களின் மூலதனத்தையும் பாதுகாக்க ஏற்புடையதான, அரசியல் சாசனம் ஒன்றையும், நிர்வாக இயந்திரம் ஒன்றையும், பலமான ராணுவத்தையும், பலமான பொலிஸ் படையையும், நீதிமன்றங்களையும், நீதிவான்களையும், சிறைச்சாலைகளையும், பாராளுமன்றத்தையும், நமதுநாட்டு முதலாளிகள், பிரபுக்கள், மதத்தலைவர்கள், உயர் அரசஅதிகாரிகள் ஆகியோரிடம் கையளித்துவிட்டு சென்றார்கள். செல்லும்போது மக்களுக்கு பாராளுமன்ற தேர்தல்களில் வாக்களிக்கும் உரிமையை தந்துவிட்டு இந்த உரிமைதான் உங்கள் தலைவிதியை ஐந்து வருடங்களுக்கு ஒருமுறை தீர்மானிக்கும். இதன்மூலம் உங்களது பிரச்சினைகள் சகலதையும் தீர்க்கமுடியும் என்று சொல்லிவிட்டு சென்றார்கள். மக்களாகிய நாங்களும் 66 வருடங்களாக வாக்களித்தும் எமது பிரச்சனைகள் தீர்ந்தபாடில்லை. சிங்கள இளைஞர்கள் இரண்டு தடவைகள் ஆயுதம்ஏந்தி போராடியபோதும் அந்த போராட்டங்கள் தோல்விகண்டது. தமிழ் இளைஞர்கள் தமது பிரச்சினைகளுக்காக 30ஆண்டுகள் ஆயுதம்ஏந்தி போரடி தோல்வி கண்டார்கள். பாராளுமன்ற தேர்தல்களில் வாக்களித்தும் பிரச்சினை தீரவில்லை, இளைஞர்களின் ஆயுதப்போராட்டங்களாலும் பிரச்சினை தீரவில்லை, ஏதோ பிழைநடந்துள்ளது. மக்கள் இந்தப் போராட்டங்களில் கலந்து கொள்ளவில்லை. எனவே சிங்கள, தமிழ், முஸ்லிம், பாட்டாளிகள், விவசாயிகள், புத்திஜீவிகள், இளைஞர்கள் இணைந்த கூட்டுமுன்னணியின் தலைமையில் “இனி ஒரு விதி செய்வோம் மக்கள் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண்போம்”

# போராட்டம்

41/32, கெந்தஹேனவத்தை, தெபானம, பன்னி-பிட்டிய.
தொலைபேசி/தெலைநகல்: 094-113185692
mpssrilanka@gmail.com, http://www.peoplesstruggle.com


## த.தே.கூ. தலைவர்களின் இந்திய விஜயம் திருடன் விதானை வீட்டில் ஒழிந்த கதை!

தமிழ் தேசிய கூட்டமைப்பு தலைவர்கள் இந்திய பிரதமரை சந்தித்து பேசியதைத் தொடர்ந்து, தேசிய இனப்பிரச்சினை இந்தியாவின் நேரடி வழிநடத்தலுக்கு உட்பட்ட விடயம் போன்ற தோற்றப்பாட்டை பெற்றிருக்கிறது. தமிழ் தேசிய கூட்டமைப்பின் இந்தியவிஜயம் தொடர்பில் ஊடகங்கள் சில சரியா? பிழையா? என்ற ஆராச்சியில் இறய்கியிருந்தன. எம்மை பொறுத்தவரை இந்த பிரச்சினையில் சிங்கள தமிழ், முஸ்லிம் என்பதற்க்குப் பதிலாக, அனைத்து ஒடுக்கப்பட்ட மக்கள் எதிர்கொள்ளும் நெருக்கடிகள் தொடர்பாக நோக்கப்பட வேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகும்.

தமிழ் மக்களை பொறுத்தவரை அம்மக்கள் பாரிய நெருக்கடிகளுக்குள் வாழவேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளாகியுள்ளனர். யுத்தகாலத்தில் ஒடுக்குமுறை மிகக்கொடூரமாக இருந்தது. யுத்தம் முடிடைந்த பின்னரும் ஒடுக்குமுறையின் வடிவம் மாறியுள்ளதே தவிர அது குறைந்ததாக இல்லை. நவலிபரலவாத முதலாளித்துவ வடிவத்தில் ஒடுக்குமுறை தொடர்கிறது. மறுபுறத்தில் பெயரளவில் ஒட்டுமொத்த தமிழ் மக்களின் தலைமைகளாக தம்மை அடையாளப்படுத்திக் கொண்டு மேல்தட்டு தமிழர்களின் தேவைகள், நலன்களை மையப்படுத்தி இயங்குவதனால் ஒடுக்கப்பட்ட தமிழ்மக்கள் தாம் எதிர்கொள்ளும் பொருளாதார, அரசியல், சமூக நெருக்கடிகளுக்கு தீர்வின்றி தத்தளித்துக் கொண்டிருக்கிறார்கள். இந்தநிலைமைக்கு மத்தியில்தான் தமிழ் தலைமைகள் தமது பதவிகளை தக்கவைத்துக் கொள்வதற்காக இந்தியா, ஐரோப்பியநாடுகளுக்கு பயணங்களை மேற்க்கொண்டு அப்பாவி தமிழ் மக்களுக்கு போக்குகாட்டி வருகின்றனர். மறுபுறமாக ஆட்சியாளர்களும் தமது அதிகாரத்தை பாதுகாத்துக் கொள்வதற்காகவும், அதை தொடர்ந்து கொண்டு செல்வதற்க்கு வசதியான வகையில் செயல்பட்டு வருவதனால், மக்களின் பிரச்சினைகளில் அக்கறையற்றவர்களாக காணப்படுகின்றனர். இதனால்தான் இந்தியா மற்றும் மேற்குலக நாடுகள் எமது நாட்டில் இலகுவாக தலையீடு செய்யக்கூடியதாக உள்ளது. இந்தியாவைப் பொறுத்தவரை பிராந்தியத்தில் தனது மேலாதிக்கத்தை பலப்படுத்திக்கொள்ள இலங்கை தமிழர் பிரச்சினையை பயன்படுத்தி வருகிறது. மறுறமாக இலங்கை வர்த்தக சந்தையை கைப்பற்றுவதிலும் கரிசனை கொண்டுள்ளதுடன் தனது பாதுகாப்பு தொடர்பிலான அக்கறையுமாகும். இலங்கை அரசாங்கமும் இந்திய கம்பனிகளுக்கு இலங்கை சந்தையில் சுதந்திரமாக செயல்பட அனுமதித்துள்ளது. அதேபோல் அமெரிக்கா சீனா, ஐரோப்பியநாடுகள் மற்றும் ஜப்பான் போன்ற நாடுகளுக்கும் இலங்கை சந்தையை திறந்துவிட்டுள்ளது. இந்தியா இலங்கை அரசாங்கத்துடன் இணைந்து செயற்படும் அதேவேளை, இலங்கை அரசு அமெரிக்கா, சீனா, ஜப்பான் போன்ற நாடுகளுக்கு சாதகமாக செயல்படும் போது, இந்தியா இலங்கை தமிழர் பிரச்சினையை கையில் எடுத்து இலங்கை அரசாங்கத்தை அச்சுறுத்துகிறது. இந்தியாவை பொறுத்தவரை இலங்கை தமிழர் பிரச்சினையை நிரந்தரமாக தீர்த்து வைக்கவேண்டும் என்பதில் அக்கறை கிடையாது. தமிழர் பிரச்சினைக்கு தற்போது இந்தியா முன்வைக்கும் யோசனையானது வடக்கு, கிழக்கு தமிழர்கள், முஸ்லிம்களை மையப்படுத்தி இயங்கிவரும் அனைத்து அரசியல் கட்சிகளும் ஒன்றிணைந்த அரசியல் கூட்டமைப்பாக செயல்பட வேண்டும் என்பதாகும். இந்த யோசனையை முன்வைத்தவர் இந்திய அரசாங்கத்தின் தற்போதைய வெளிவிவகார அமைச்சராகும். இலங்கையில் இஸ்லாமிய அடிப்படைவாதம் எழுச்சி பெறுமாயின் அது தனது பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என கருதும் இந்தியா, இலங்கை முஸ்லிம் அரசியல் கட்சி தலைவர்களுடன் நெருக்கமான உறவை வளர்த்துக் கொள்வதில் முனைப்பு கொண்டுள்ளது. இந்தியாவை பொறுத்தவரையில் இலங்கையில் தமிழ் பேசும் மக்களும் சிங்களம் பேசும் மக்களும் நிரந்தரமாக முரண்பாடுகளால் பிளவுபட்டிருப்பதையே விரும்புகிறது. அதேபோல் இலங்கையின் ஒடுக்கப்பட்ட மக்களுக்கும் இந்தியாவின் ஒடுக்கப்பட்ட மக்களுக்கும் இடையில் ஒற்றுமை ஏற்படுவதையும் இந்தியா சகித்துக் கொண்டிருக்காது.

இதில் இருந்து நாம் இலகுவாக விளங்கிக் கொள்ளக்கூடிய ஒன்றுதான், இந்தியாவுக்கும் மேற்குலக நாடுகளுக்கும் தேவையானது இலங்கையின் தேசியப்பிரசினை தீர்வுகாணப்படாமல் தமிழ், சிங்கள மக்கள் மத்தியில் முரண்பாடுகள் தொடர்ந்து கொண்டிருக்க வேண்டும் என்பதாகும். இந்த உண்மையை இலங்கையின் அனைத்து ஒடுக்கப்பட்ட மக்கள் பிரிவினரும் விளங்கிக்கொண்டு சிங்களவர், தமிழர், முஸ்லிம் என்ற வேறுபாடுகளை களைந்து, ஒடுக்கப்பட்ட மக்கள் எதிர்கொள்ளும் உண்மையான பிரசினைகளுக்கு தீர்வுகாண ஏற்புடையதான அரசியல் நிகழ்ச்சி நிரலை தயாரித்து ஒண்றிணைந்து செயல்படுவதை தவிர வேறுமார்க்கம் இல்லை.

## கொரியா வேலைவாய்ப்பு கனவும் வாழ்க்கையின் நடைமுறை உண்மையும்!



"கொரியா வேலைவாய்ப்பு கனவும் வாழ்க்கையின் உண்மையும்" என்ற தலைப்பில் தென்கொரியாவின் உள்சான் நகரில் ஆகஸ்ட் 31ஆம் திகதி முன்னணி சோஷலலஸக் கட்சி நடாத்திய கருத்தரங்கில் தோழர் குமார்குணரத்தினம் சொற்பொழிவாற்றுவதையே படத்தில் காண்கிறீர்கள். தென்கொரியவில் தொழில்புரியும் பெரும் தொகையான இலங்கையர் இக் இக்கருத்தரங்கில் கலந்து கொண்டனர்.

## அடக்கு முறைகளுக்கு எதிராக மாணவர்கள் ஆர்ப்பாட்டம்!






அடக்கு முறைகளுக்கு எதிராக இலங்கை திறந்த பல்கலைக்கழக மாணவர்கள் ஆர்ப்பாட்டம் ஒன்றை ஆகஸ்ட் 30ஆம் திகதி நடத்தியுள்ளனர்.

பல்கலைக்கழகத்தில் இடம்பெறும் அடக்குமுறைகளுக்கு ஆட்சேபம் வெளியிட்டே இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

மாணவர்களின் உரிமைகள் மறுக்கப்படுவதாகவும் மற்றும் பல்வேறு பிரச்சினைகளுக்கு பல்கலைக்கழக நிர்வாகம் தீர்வு காணவில்லை என குற்றம் சுமத்தியும் இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

குறிப்பாக தமது கல்விக்கு இடையூறு ஏற்படுத்தப்படுவதாக குற்றம் சுமத்திய மாணவர்கள், பல்கலைக்கழகத்தில் உயர் கட்டணங்கள் அறவிடப்படுவதாகவும் குற்றம் சுமத்தினர்.


## இலத்திரனியல் அடையாள அட்டை




**செப்படம்பர் 11 பிற்பகல் 3.00க்க**
**கண்டி "ஜனமெதுர"**
**மண்டபத்திற்கு வாருங்கள்**

அரசாங்கம் புதிய இலத்திரனியல் அடையாள அட்டையுடன் நாட்டின் அனைத்து பிரஜைகளினதும் தகவல்களுடன் தரவுத் தொகுதியொன்றை அமைக்கப்போவதாக கூறியிருக்கிறது. இதன் சிறப்பம்சம் என்னவெனில் எம் அனைவரினதும் கைவிரல் அடையாளங்களையும் குடும்ப விபரங்களையும் அரசாங்கத்தின் வசம் வைத்துக் கொள்வதுதான். இதன் நோக்கம் பிரஜைகளின் உறுதி செய்வதே என கூறப்பட்டாலும், அதன் உண்மையான நோக்கம் அடக்குமுறைதான் என்பது வெளிப்படை. இது இப்போதிருந்தே செயற்பட்டு வரும் இராணுவமய நடவடிக்கைகளின் ஒன்று என்பது அதைவிட வெளிப்படை.

**நாங்கள் இதனை ஏன் எதிர்க்கிறோம்?**

**இதை தோற்கடிப்பது எப்படி?**

அது குறித்து பேச

**முன்னிலை சோஷலிஸக் கட்சி**



41/32, கெந்தஹேன வத்தை, தெபானம, பண்ணிபிட்டிய் வசிக்கும் ஜுட் சில்வா புள்ளே ஆகிய என்னால் கடவத்தை, கோனஹேன பாதை, சத்தர்மதிலகாராம மாவத்தையில் அமைந்துள்ள ஸ்பெக்ட்ரா எட்வடைசிங் நிறுவனத்தில் அச்சிட்டு விநியோகிக்கப்பட்டது.